உ

ஓம்.

தத் சத்

பரப்பிரஹ்மணே நம:

ஸ்ரீ சின்மயானந்த சுவாமிகள்

பாமாலைக் கொத்து.

தத்துவமஸி

உபதேச வாக்கியம்

அகம் பிரஹ்மாஸ்மி

அனுபூதி வாக்கியம்



பிரஞ்ஞானம் பிரஹ்மம்

லக்ஷண வாக்கியம்

அயமாத்மா பிரஹ்மம்

சம்மதி வாக்கியம்

ஸ்ரீ பிரஹ்மானந்த சுவாமிகள்,

மடம் பதிப்பு உரிமை,

மதுரை.

சாதாரண வருஷம்

1970

உ

ஓம்.

தத் சத்

பரப்பிரஹ்மணே நம:

ஸ்ரீ சின்மயானந்த சுவாமிகள் பாமாலைக் கொத்து.

தத்துவமஸி
உபதேச வாக்கியம்

அகம் பிரஹ்மாஸ்மி
அநுபூதி வாக்கியம்



பிரஜ்ஞானம் பிரஹ்மம்
லக்ஷண வாக்கியம்

அயமாத்மா பிரஹ்மம்
சம்மதி வாக்கியம்


ஸ்ரீ பிரஹ்மானந்த சுவாமிகள்,

மடம் பதிப்பு உரிமை,

மதுரை.

சாதாரண வருஷம்

1970



ஸ்ரீ சின்மயானந்த ஸ்வாமிகள்

முகவுரை.

ஸ்ரீலஸ்ரீ சின்மயானந்த சுவாமிகள் சரிதம்

தோற்றுவாய்:

பாரதநாடு பழம்பெரு நாடு என்றார் பாரதி. இப் பாரத நாட்டில் பண்டு தொட்டு இன்று வரை ஞானிகள் பலர் தோன்றி நல்லறிவு கொளுத்தியுள்ளனர் என்பது வரலாறு "நாடா கொன்றோ, காடாகொன்றோ, அவலாகொன்றோ, மிசையாகொன்றோ-எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி — நல்லைவாழிய நிலனே" என்ற தமிழ் மூதாட்டியின் பொன்னுரைப்படி நல்லவர்கள் வாழும் இடமே நாடென நவிலப்படுவதாகும். இதையே வார் சிலைத் தடக்கை வள்ளலாம் இராமனுக்கு வசிட்டர் கூறுகின்றுழி "எவ்விடத்திலை நல்ல ஞானிகளாம் ஈர்ங்கனி மலர் குளிர்சோலை-அவ்விடங்கானல் மேடதாம் ஆங்கே உறைபவர் அறிவிலா ரன்றோ" என்று கூறினர். "பண்புடையார்ப் பட்டுண்டுலக மதுவின்றேல் மண்புக்கு மாய்வது மன்" என்ற குறட்பாவில் தெய்வப் புலவரும் இதனையே தெளிவுறுத்துகிறார் — எனவே பாரத நாட்டின் பெருமை உலகிற் பரவுதற்கு மூலகாரணமாய் ஓர் ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோரே என்பது கூறாமலே விளங்கும்

தமிழ்நாடு:

இத்தகைய சிறப்புவாய்ந்த இப் பரதகண்டத்தே எத் திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழ்நாடு என்று பாராட்டும் தகுதியுடையது தமிழ்நாடு 'போந்தை வேம்பே, ஆர்எனவரூஉம். மாபெரும் வேந்தர் மன்னி ஆண்ட தமிழ்நாடு. பழிபிறங்காரப் பாண்டியரும், சொன்னலந்துறவாச் சோழரும். செந்சொற்காவலர் சேரநும் பெருமையுறப் புலவனை ஆதரித்துப் பெருமை கண்ட திந்நாடு.

பாண்டிய நாடும் மதுரையும்:

முதல், இடை, கடை என்ற முச்சங்கம் வளர்த்த பெருமை யுடையதும், என்றுமுள தென்தமிழை இயம்பி இசைகொண்ட அகத்தியன்வாழ் பொதியமலையைத் தன்னகத்தே கொண்டதும், தழற்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழினை நாடோறு வளர்க்கும் பெருமையுடையதுமாகிய மகிமையுடையது பாண்டிய நாடு. இப் பாண்டியநாட்டின் இராசதானியாய், சங்கமருவிய சான்றோர் போற்றிய பெருமையுடையதாய், நான்மாடக்கூடல், ஜீவன் முக்தி புரம் முதலிய நற்பெயர் பல பெற்றதாய், எல்லையில் கூத்தப் பெருமானும் ஆலவாய் அண்ணலின் அறுபத்து நான்கு திரு விளையாடலும் நிகழும் பேறுபெற்றதாய் அமைந்தது மதுரைமா நகரம். வையையென்னும் பொய்யாக் குலக்குடி பாய்ந்து வளந் தரும் பெருமையுடையது மாமதுரையாகும்.

சுவாமிகளின் பிறப்பிடம்:

இத்தகைய சிறப்புவாய்ந்த மதுரைமா நகருக்குக் கிழக்கே இருபது கல் தொலையில் உள்ளதும், கானப்பேரெயில் என்னும் காளையார்கோவிலுக்கு மேற்கே உள்ளதும், திருப்பூவணம் என்னும் திருத்தலத்திற்கு அண்மையில் அமைந்ததும் ஆய இடைசைமா நகர் என்னும் இடைக்காட்டூராகும். இதற்கு அழகிய பாண்டியநல்லூர் என்னும் மற்றொரு பெயரும் உண்டு. இதன் தென்பால் வையை ஆறு பாய்ந்து இவ்வூருக்கு அழகைத் தரு கின்றது. வளமுடைய நிலங்களும், வானளாவிய சோலைகளும் நிறைந்து விளங்குவது. இங்கேதான் சங்கமருவிய சான்றோர் களுள் வைத்து எண்ணப்படுபவராகிய இடைக்காடனாரும் தோன்றி வசித்ததும், ஆலவாய் அண்ணல் இடமாறியிருந்து பிணக்குத் தீர்த்ததும் இவர் பொருட்டேயாம். பதினெண் சித்தருள் ஒருவராகிய இடைக்காட்டுச்சித்தர் இங்குதான் வாழ்ந்து வந்தார். அழகிய பாண்டியனென்னுஞ் சுந்தர பாண்டியனால் அமைக்கப்பெற்ற சிவன்கோவில் ஒன்று அவனது கல்வெட்டுடன் இன்றும் திகழ்கின்றது. (வடிவுடைநாயகி சமேத

நிறைமீட்ட இலிங்கம்) சௌந்தரநாயகி சமேத மணிகண்டேசுவரர் இங்கே எழுந்தருளியுள்ளார். மேலும் பூதேவி, சீதேவியுடன் கூடிய கரியமாணிக்கப்பெருமாள் கோயிலும் இங்கே உண்டு. பன்னிரண்டு ஆண்டு பஞ்சம் யேற்பட நவக்கிரகங்கள் மாறுபட்டிருந்ததை ஒருமுகப்படுத்தியதும் இடைக்காடரேயாவர். இத்தகைய பெருமையுடையது இடைக்காட்டூர்.

குலமரபு :

ஈடு இணையற்ற பழம் பெருமையுடைய இவ் இடைக்காட்டூரிலே வழி வழிப் பெருமையுடைய வேளாளர் குலம் ஒன்றுண்டு. "எந்நாளும் காப்பாரே வேளாளர்காண்." என்று கம்பரால் பாராட்டப்பெற்ற பெருமைபுடையவர் இக்குலத்தார். வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணுதான் என்ற முதுரைப்படி நாளும் விருந்தோம்பற் பண்பில் சிறந்து நின்றவர். குன்ருக்குடி மரபுடைய இக்குலத்திலே காத்தவராயர் என்பார் சீரும் சிறப்பும் பெற்று விளங்கினர். இவருடைய வழித்தோன்றலாக விளங்கியவரே முத்தணபிள்ளை என்பார். இவர் நாளும் பிறைக்கண்ணிப் பெருந்தகையார்பால் அன்புடையாராய், நல்லார் இணக்கமும், அடியவருக்கு அமுதூட்டலும் ஆகிய குணங்கள் நிரம்பப்பெற்றவர். இவருக்கு மணப்பருவம் நிரம்பப்பெற்றதும் அவ்வூரில் வாழ்ந்து வந்த பழநிக்குமாரபிள்ளையின் புதல்வி விசாலாட்சியை இல்லக்கிழத்தியாக சான்ருேர் தேர்ந்தெடுத்தனர். இவ்வம்மையார், கற்பில் அருந்ததியையொத்தவர். பொறையிற் பூமிதேவியை நிகர்த்தவர். கவினிற் சீதேவியைப் போன்றவர். கலையறிவில் வாணியை நேர்த்தவர். சான்ருேர் முன்னிலையில் இவர்கட்குத் திருமணவேள்வி நடைபெற்றது. நல்லோர்கள் வாழ்த்திச் சென்றனர்.

சுவாமிகள் பிறப்பு :

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யு மழை" என்ற பொய்யாமொழிப்படி இல்லறம்

வழுவாராய் தற்காத்துத் தற்கொண்டான்பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாது விசாலாட்சியம்மையார் இல்லறம் நடத்தி வந்தார். ஈருடலுக்கோருயிர் போல் இருவருமொத்து இளமைநலம் இனிது துய்த்துவரும் நாளில் இறைவன் திருவருளால் இரண்டு பெண்மகவை ஈன்றெடுத்தனர். பெண்மக்கள் இருவரையீன்றெடுத்தபோதினும் அவர்கள் மனம் நிறைவெய்தவில்லை. குலம்விளங்கவொரு கொழுந்து வேண்டுமன்றோ ஆண் மகவு இல்லாத வீடு இசை எழுப்பா வீணையும், ஒளிதரா ஆடியும் போன்றதன்றோ. மகனின் பெருமை கேட்டன்றோ தாய் ஈன்ற பொழுதிற் பெரிதுவப்பாள் எனவே ஆண்மகவு பெறும்பொருட்டு அடியார்களுக்கு அன்னம் அளித்தும்' ஆலயங்கட்குச் சிறப்புச் செய்தும், அற்றவர்க்குப் பொருள் கொடுத்தும் இடையருத நற்றவம் செய்வாராயினர் இடைக்காட்டூர் மருவிய மணிகண்டப் பெருமானை வழிபட்ட முதிர்ச்சியால் ஒருநாள் இரவு அம் மணிகண்டப்பெருமானே துறவுக்கோலம் கொண்டு விசாலாட்சியம்மையின் கனவிற்றோன்றினுர். அம்மையே உனது எண்ணம் ஈடேற நல்லதொரு ஆண்மகவைப் பெறுக. என அருளி மறைவாராயினர். அம்மையார் கனவினின்றெழுந்து தம் கணவருக்கு நிகழ்ந்தது கழறினுர். இறைவன் துறவுக்கோலத்துத் தோன்றிக் கூறினமையின் தமக்குப் பிறக்கும் குழந்தையும் துறவுக்கோலம் பூணுவனோ என அஞ்சினர். எனினும் ஆண்மகவு பெறுதல் குறித்து அகமகிழ்வு கொண்டனர். ஈரைந்து திங்கள் கழிந்ததும் மங்கலவோரையில் ஆண்மகவை ஈன்று அன்னைவிசாலாட்சியம்மையார் கண்குளிரக் கண்டு மகிழ்ந்தார். தந்தையாரும் மகிழ்ச்சி மீதுற்றவராய் ஆலயங்கட்குச் சிறப்புச் செய்தும் அடியார்கட்கு அன்னம் ஆடை வழங்கியும் மனம் பூரித்தார். இவ்வாறு சுவாமிகள் பிறந்தநாள் (கலிசகாப்தம் 5002, பசலி 1311. ஆங்கில வருஷம் 1901. தமிழ் வருஷம் பிலவ ஆவணி மாசம் 26ம் நாள் செவ்வாய்க்கிழமை, அமரபட்சம், திரயோதசிதிதி ஆயில்ய நட்சத்திரம் உதயாதி நாழிகை $1\frac{1}{4}$ கன்னிகா லக்கினம். கும்ப நவாம்சத்தில் குழந்தை பிறந்தது)

இளமையிற் கல்வி :

மக்களும் சுற்றமும் மகிழ மங்கலவோரையிற் பிறந்த குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. சுற்றத்தார் கூடி சுந்தராக் குழந்தைக்குத் தம் குலப்பெயராகிய காத்தமுத்து என்ற பிள்ளைப் பெயர் இட்டனர். குழந்தைக்கு ஐந்து ஆண்டு நிரம்பப் பெற்றதும் கல்வி கற்பிக்க விரும்பினர் இன்றுபோல அக்காலத்தில் கல்விக் கூடங்கள் மிகுதியாக இன்மையின் ஏட்டுப் பள்ளிக்கூடத்தே பிள்ளையைச் சேர்த்தனர். இளமையில் வேதியர் ஒருவரிடமும் சேதுப்பிள்ளை என்ற இராமலிங்கம் பிள்ளையிடமும் கல்வி கற்றுக் கொடுக்கப் பட்டது. பண்டைத் தமிழ் இலக்கிய இலக்கணங்களும் கணித முறையும் குழந்தை நன்கு கற்றுத் தேர்ந்தது.

கடிமணம் புரிதல் :

பதினாறு வயது நிரம்பப்பெற்றதும்ஒத்தகுடியிற்றோன்றிய மீனாள் என்னும் பெயருடைய பெண்ணைத் தேர்ந்தெடுத்துக் கடி மணம் செய்து வைத்தனர். சுவாமிகட்கு இளமையிற்றிருமண வேட்கை இல்லையென்றாலும்கூட பெற்றோர் வற்புறுத்திய தாலும் குலம் விளங்கவந்த ஒரே குழந்தை யாதலினாலும், ஊழ் வினையின் உந்து முயற்சியினாலும் திருமணம் நிறைவேறியது. இல்லற வாழ்விலிருக்கும்போது வருணாச்சிரம நியதி தவறாமல் சாஸ்திரங் கூறிய முறையே நடந்தும் சாதுக்கள் சேவையும் நல்லாரிணக்கமும் நல்லார் இருக்கும் ஆசிரமத்துக்கு தானே போஜனம் கொண்டுசென்று அமுதளித்தலும் அவர்களுடைய வாக்கியங்களைக் கேட்டலும் சிந்தித்தலுமாய் தாமரையிலையிற் றண்ணீர் போலவும். சேற்றில் பிள்ளைப்பூச்சி போலவும் இல்லற வாழ்க்கையினைக் கழித்து வரலாயினர். இரண்டு ஆண் குழந்தை யும் ஒரு பெண் குழந்தையும் பிறந்தது. சுவாமிகளுக்கும்முப்பது வயது நிரம்பப் பெற்றது.

துறவெண்ணமும் தூயோர் தொடர்பும் :

இல்லறத்திலே தோய்ந்திருந்ததாலும், துறவெண்ணமும் தூயோர் தொடர்பும் பெருகி வந்தது. பிறப்புத் துன்பம் என்பதும் அதனை விட்டு நீங்க இறவா வீடடைதலே நெறியாம் என்பதும். நாளும் தோன்றி துறவெண்ணத்தினை நாடவைத்தது எனவே கோவிலூர் வீர. நாராயண சுவாமிகள், சுப்பைய சுவாமிகள், மானுமதுரை சதாசிவ சுவாமிகள் முதலியோரது தொடர்பு சுவாமிகளுக்கு ஏற்பட்டது. எனவே நல்லாரிணக்கம் கைவரப்பெற்ற சுவாமிகள் அதனையே நற்பேருகக் கருதி அச்சாதுக்கட்கு நால்வகைப் பணிவிடைகளும் செய்து வருவாராயினர். பின்னர் கோவிலூர் ஸ்ரீலஸ்ரீ வீர. நாராயண சுவாமிகள் ஆணைப்படி மதுரை வந்தடைந்து ஸ்ரீ பிரஹ்மானந்த சுவாமிகள் மடத்தை அடைந்து அங்கே மடத்தலைவராக விளங்கிய ஸ்ரீ வீர. விசுத்தானந்த சுவாமிகள் என்னும் சோமசுந்தர சுவாமிகளை விகித குருவாக அடைந்தனர். அம்மடத்திலேயே தங்கி ஆத்தம், அங்கம், தானம், சத்பாவம் என்னும் நால்வகைப் பணிவிடையும் செய்து தங்குவாராயினர். வானப்பிரஸ்த ஆச்சிரமத்திற்கு ஏற்றவாறு சிகை முடித்து வெள்ளாடை புனைந்து வேதாந்த சிரவணாதிகள் செய்து வரலாயினர்.

துறவு பெறுதலும், தொழுந்தகையாதலும் :

வேதாந்த சிரவணாதிகளில் விற்பன்னராய் தூயநெறித் துறவெண்ணமுடையோராய் இருத்தலை அறிந்த சோமசுந்தர சுவாமிகள் இவர்கட்குச் சந்நியாசமதர விரும்பினர். எனவே பாவியலும் காவியலும் சேர்ந்த கோவிலூரை அடைந்து ஆண்டிருந்த மகாதேவ ஞானதேசிகர் முன்னிலையில் இவர்கட்குச் சந்நியாசம் வழங்கினர். பொன் முதற்பொருள்கள் இந்தப் புவனங்கள். பூதம் யாவும் அன்னியமாய் மித்தையாய்க் கண்டு அதன் பொருள் தாம் உணர்ந்து தன்மயமாக என்னும் திடஞானம் பெற்றதாலே, சின்மயானந்தன் என்னும் சீர்மிகு பெயரைத்

தந்தார். குருமூர்த்தியாம் சோமசுந்தர சுவாமிகள். குருவின் ஆணையின் வண்ணம் சந்நியாசம் பெற்ற சுவாமிகள் ஸ்ரீ பிரஹ்மானந்த சுவாமிகள் மடத்திலேயே தங்குவார்களாயினர். குரு பணிவிடையிலும் மற்றைய கோவிற்றொண்டுகளிலும் கழிந்த நேரம்போக ஏனைய காலங்களில் சிரவணாதிகளிலும், நிஷ்டையிலும் சுவாமிகள் காலம் கழித்து வருவார்களாயினர். எனவே இவர்களது துறவொழுக்கத்தினையும் சிரவணாதி தெளிவையும், சீடர்க்குபதேசிக்கும் திறத்தினையும் கண்டுணர்ந்த சாதுக்களும் மடத்து அன்பர்களும், இவர்களையே மடாதிபதியாக்கவேண்டும் என்று தங்கள் கருத்தை சோமசுந்தர சுவாமிகளிடம் தெரிவித்தனர். தக்க துறவி ஒருவரை மடாதிபதியாக்க வெண்ணியிருந்த சோமசுந்தர சுவாமிகள் இவர்களது சொற்களைக் கேட்டு மனமகிழ்ந்து அக்கருத்தைச் சுவாமிகளை அழைத்துத் தெரிவித்தனர். மடத்துத் தலைமைப் பொறுப்புத் தமக்கு வருவது குறித்துச் சுவாமிகள் கவல்வாராயினர். குடும்பபாரமோ இரும்புச் சங்கிலி, ஆனால் மடத்துப்பாரமோ பொன்விலங்கு, இதனால் சிரவணாதிகளுக்கு இடையூறு வரும் என்று எண்ணினர். எனினும் குருவின் ஆணைக்கு அஞ்சி அதற்கு ஒருப்பட்டனர். சோமசுந்தர சுவாமிகளும் மனமகிழ்ந்து இவர்கட்கு மடத்தின் பொறுப்பைச் சாசனம் மூலம் தந்து சில நாளிருந்து விரோதி வருஷம் புரட்டாசி மாதம் 12ம் நாள் (28—9—49) விதேக கைவல்யம் அடைந்தனர். பின்பு சுவாமிகள் தலைமைப் பொறுப்பேற்று சிரவணாதிகளை மேற்கொண்டு சீடர்களுக்கு உபதேசஞ் செய்வாராயினர். ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் சிரவணாதிகள் நடைபெறுவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். மடத்து வரவு செலவுகளைத் தொகையாகப் பார்ப்பதேயன்றி வகையாகப் பார்ப்பதில்லை. காசினைக் கையாற் றீண்டுவதுமில்லை. நாலு ஜீவவாதக் கட்டளை முதலாக ஞானவாசிட்டம் ஈறாக அனைத்து நூல்களும் முறையாகச் சுவாமிகளால் பாடம் சொல்லப்படுகிறது. ஆண்களும், பெண்களும், அன்பர்களும் திரளாக வந்து கேட்டுச் சிவஞானம் பெறுகின்றனர்.

சுவாமிகளின் சீடருள் ஒருவரும், பெருநிலக்கிழாருமான அனுப்பானடி பொன்னுச்சாமி பிள்ளை, அவர்கள் தமது ஊருக்குச் சுவாமிகளை அழைத்துச் சென்று ஆண்டு தோறும் பிறந்ததின விழா (ஜெயந்தி) நடத்திச் சுவாமிகளுக்கு சோடச முறையில் பூஜை செய்து, அடியார்களுக்கும் அன்பர்களுக்கும் அன்னம் பாலித்துச் செலவுக்குப் பொருளும் கொடுத்துச் சுவாமிகளின் ஆசீர்வாதம் பெற்று வருகின்றார்.

உரையியற்றல் :

மெய்கண்ட சிவாச்சாரியரால் இயற்றப்பட்ட சிவஞான போதம் என்னும் பெருநூலுக்குச் சுவாமிகள் வேதாந்தபரமாக உரையியற்றி ஹேவிளம்பி (1957) வருடம் வெளியிட்டார்கள் அந்நூல் பலரால் பாராட்டுதலையும் பெற்றது. குருவின் சொத்தினைப் பாதுகாப்பதிலும், சீடர்களுக்கு உபதேசிப்பதிலும் சுவாமிகளுக்கு நிகர் யாவராவார். எவருமிலர் உடல்நலம் குன்றியிருந்தாலும் உபதேசமே அவர்கட்கு உயிர். இவர்களது திருநோக்குப் பெற்றார். மருள் நோக்கில்மயங்கார். பிறவியறுவர். பெருஞானம் பெறுவர். சீவன் முத்தராவர். இதில் ஐயமில்லை. வாழ்க சுவாமிகளின் நாமம். வளர்க அவர்களது புகழ். "ஞானியை நரன் சுரன் எனுது ஒழிக ஞாலமுய நாதனருளால் மேனியதுகொண்டு தனை நல் கவரும் என்றறையும் வேதமுடிவே. (சுசிவன்னபோதம்)

சர்வஞ்சின்மயம்.

இங்ஙனம்,

கா. தெய்வேந்திரன்,

பண்டித வித்துவான்.

மதுரைச் சின்மயானந்தர் வெண்பாவந்தாதி

ஆக்கியோன்

பண்டித வித்துவான் கா. தெய்வேந்திரன் தமிழாசிரியர்.

பரிசோதித்துக் குறிப்புரை எழுதியோர்

திரு. நீ சண்முகானந்த சுவாமிகள்

உரைப்பாயிரம்

திருவாருஞ் சின்மயானந்த அடிகளென்பார்
பாண்டிநன்னுட்டின் கண்ணே மூர்த்திதலம் தீர்த்தம்
ஆகியவற்ருல் மேன்மையுற்ற முத்தமிழ் வளர்ந்த
மதுரையம்பதியி லுள்ள ஸ்ரீமத் பிரஹ்மானந்த
சுவாமிகள் வேதாந்த மடாலயத்தின் தலைவ
ராக வெழுந்தருளியுள்ள சுரோத்திரியப் பிரஹ்ம
நிஷ்டத் துறவறத்துத் திருநெறித் தூயோராவர்

குறிப்பு

சின்மயானந்தர் வெண்பா வந்தாதி என்ற தொடரைச் சின்மயானந்தரது சம்பந்தமான வெண்பாக்களாகிய அந்தாதி வென விரித்து அவர் விஷயமான பிரபந்தமெனப் பொருள் கொண்டு முற்ருெடரை ஆரும் வேற்றுமைத் தொகையாகவும், பிற்ருெடரை மூன்ரும் வேற்றுமை உருபும் பொருளும் உடன் தொக்க தொகையாகவும், சின்மயானந்தரைப் பற்றிய வெண் பாக்களாலாகிய அந்தாதி எனப் பொருள்கொண்டு முற்ருெடரை இரண்டாம் வேற்றுமையுருபும் பயனும் உடன்தொக்க தொகை யாகவும் உரைக்கத்தக்கது.

சின்மயானந்தர் மேற்பாடிய வெண்பாக்களாலாகிய அந்-தாதி யெனப் பொருள்கொண்டு முற்ருெடரை ஏழனுருபும் பயனுமுடன் தொக்க தொகையாகவும் கொள்ளலாம்.

அந்தாதி = அந்தத்தை ஆதியாகவுடையது; அன்மொழித் தொகை வடமொழித் தொ_ர். தீர்க்கசந்தி. அந்தாதியாவது

முன்னின்ற செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்தாயினும், அசையாயினும், சீராயினும், அடியாயினும், அடுத்துவரும் செய்யுளின் முதலாக அமையும்வண்ணம் பாடுவது. இங்ஙனம் பாடும் நூலினது ஈற்றுச் செய்யுளினந்தமே முதற் செய்யுளின் ஆதியாக அமைய வைத்தல், மண்டலித்தல் எனப்படும். இது தொண்ணூற்ருறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்ருகும் பதிற்றந்தாதி. நூற்றந்தாதியென்ற வகைகளில் இந்நூல் நூற்றந்தாதியாம். அதாவது நூறு வெண்பாவினுலாவது, நூறு கட்டளைக் கலித்துறையினுலாவது அந்தாதித் தொடையாற் கூறுவது "முதனூற் கருத்தன் அளவு மிகுதி பொருள் செய்வித்தோன் தன்மை முதல் நிமித்தினும், இடுகுறியானும் நூற்கு எய்தும் பெயரே" எனக் கூறப்படுகின்ற நூற்பெயர் வகைகளுள் நுதலிய பொருளினுலும், தன்மையினுலும் பெயர் பெற்றதிந் நூலென உணர்க.

ஆசிரியர் தொல்காப்பியனர் செய்யுளியலில் "விருந்தே தானும், புதுவது கிளந்த யாப்பின் மேற்றே என்னுஞ் சூத்திரத்தான் 'விருந்து தானும் பழங்கதை மேலதன்றிப் புதிதாகத் தாம் வேண்டியவாற்ருற்ெருடுக்கப்படும் தொடர்நிலை மேலது, எனக் கூறிஞராகலின் இந்நூல் அங்ஙனங் கூறிய விருந்தாமென்றறிக அச்சூத்திரவுரையில் அந்தாதியும், கலம்பகமும் முதலாயின உதாரணங் காட்டப்பட்டவாறுங் கண்டுகொள்க. பிற்காலத்தார் இதனைச் சிறுகாப்பியத்துள் அடக்குவர். இப்பிரபந்தம் துதி வடிவமாகவுள்ளது. சொற்ெருடர் நிலைச் செய்யுள் பொருட்டொடர் நிலைச்செய்யுள் என்ற வகையில் இந்நூல் சொற்ெருடர் நிலையாகும்" "செய்யுளந்தாதி சொற்ெருடர் நிலையே" என்பது தண்டியலங்காரம்.

காப்பு

காப்பு = காத்தல் அஃது இங்கு காக்கின்ற கடவுளின் விஷயமான வணக்கத்தைக் குறிக்கும். ஆகவே கவிஞர் நூல் செயப் புகுங்கால் தமக்கு நேரிடத்தக்க இடையூறுகளை நீக்கித் தமது

எண்ணத்தை முடிக்கவல்ல முதற்பொருளின் விஷயமாகச் செய்யும் துதியென்பது கருத்து.

விநாயகன்

சீராருந் தென்கூடற் சின்மயனூர் நற்றுட்கு
நாராரு மந்தாதி நானவிலப்—பேராரும்
அந்திநிற மேனி யருட்குமான் முன்றோன்றுந்
தந்திமுகன் றாளே சரண்

(குறிப்பு உரை) சீர் = அழகு இதனைச் சின்மயனுருக்குங் கூட்டுக. அவர் மைத்திரி, கருணை, முதிதை, உபேட்சை ஆகிய குணங்களாலமைந்தவழகுடையவராகலின், தென் = அழகு, கூடல், மதுரை இதற்கழகு, மூர்த்தி, தலம், தீர்த்தமாகிய மூன்றையும் ஒருங்கே பெற்றிருத்தலுடன் சங்கம் நிறீஇத் தமிழாய்ந்தமையுமாம், பிறவிக் கடற்குப் புணையாகலின் நற்றுளாயிற்று. நார் = அன்பு நானும் என்றவிடத்து இழிவு சிறப்பும்மை தொக்கது நவிலச் சரணாகும் என ஆக்கச்சொல் வருவிக்கவும். நவிலவென்னும் செயவெனெச்சம் காரியப்பொருளது, பேர் = பெருமை. இதனை இருவருக்குங் கூட்டுக. அந்தி நிறமேனியும் இருவருக்கும் பொருந்தும். தந்தி என்பது தந்தத்தையுடைய தென யானைக்குக் காரணப்பெயர். அருட்குமரன்றாளே சரண் எனவுமியைத்து அவன்றாளுங் காப்பாகும் எனவும் பொருள் காணலாம். சரண் = பாதுகாவல். தம்மைச் சரணடைந்தவர் தொடங்கும் காரியங்கட்கு ஏற்படும் இடையூறுகளைப் போக்குதலானும், தம்மை அடையாது அகங்கரித்தவர்கட்கு விக்கினங்களை யாக்குதலானும் விக்நேசுவரர் என்று பேர்பெற்ற இவன்றாளை முதற்காப்பாகக் கொள்ளுதல் சாலும் என்பதைத் "தாளே" என்றவிடத்து ஏகாரமுணர்த்திற்று "தென்கூடற் சின்மயனூர்" என்ற சொற்போக்கு அவனே இவன் என்பதனை வலியுறுத்திற்று இச்செய்யுள் வழிபடு கடவுள் வணக்கத்தின் பாற் படும்

அருட்குமரன்

(2) மறையின் பொருளை மதிசூடி கேட்கக்
குறைவி லருளாற் கொடுத்துக்—கறையுறுபுன்
கோடி யசுரர்க் குமைத்த குமரன்றாள்
நாடி வழுத்துறுவே னுன்.

(கு-ரை) மறையின் பொருள் = பிரணவப் பொருள் மதி யென்பது சிலேடையாகச் சந்திரனையுஞ் சிவஞானத்தினையு முணர்த்தும், தேசகால வஸ்து பரிச்சேதமற்றமையால் குறைவி லருளாயிற்று. இது சிவனுக்குரித்து, அவனருளாலே அவ னுக்குக் கொடுத்து எனப்பொருள் கொள்க. என்னை இருவரும் ஒருவரேயாகலின், மற்றும் ''அவனருளாலே அவன்றாள் வணங்கி'' என்பதும் நோக்குக கேட்கவென்னும் செயவெனெச் சம் காரணப் பொருளது, கொடுத்து = உபதேசித்து. கறை = காமம், வெகுளி, மயக்கமாதிய குற்றங்கள். கோடி என்பது ஈண்டு அளவின்மையை யுணர்த்திற்று. குமைத்த = அழித்த ''வழுத்துறுவேன்'' என்றவிடத்து உறு துணைவினை.

கலைவல்லி

(3) ஏட்டுச் சுவடி யெடுத்த திருக்கரமும்
வீட்டுத் திருவடியு மேவுற்ற - பாட்டுக்
கலைவாணர் போற்றுங் கலைவல்லி பாதந்
தலையார வைப்பனிதந் தான்.

(கு-ரை) ஏட்டிச்சுவடி என்பதுலகவழக்கு. இனி ஏடாகிய சுவடியென விரித்து மூன்றனுருபும் பயனும் உடன்றொக்க தொகையாகவுங் கொள்ளலாம். இதனைப் பண்புத்தொகை யென்பாருமுளர். சுவடியெடுத்த கரமாகையாலும், வீட்டை அடைவிக்கும் அடியாகையாலும் இவை திரு என்னும் அடை யேற்று நின்றன. வைப்பன் = வைத்துமுக் கரணங்களாலும் வழிபடுவேன். அன்விகுதி தன்மை எதிரது போற்றலென்னும் உத்தியாற கொள்க. திருக்கரமும் திருவடியும் மேவுற்ற

கலைவல்லிபாதம் நிதம்வைப்பன் எனக்கூட்டுக. ஆர் = பொருந்த தான் அசை.

சமயாசாரியர்

(4) அருள்ஞானப் பாலுண்டோன் ஆழி மிதந்தோன்
தெருள்வாத வூர்ஞானச் செல்வன்—இருள்ஞானம்
இல்லாவன் றெண்ட னிலங்குதிருத் தொண்டர்
எல்லாரு மென்னுளத்தா ரே.

(கு-ரை) அருளுருவாகிய அன்னையாற் கொடுக்கப்பெற்றமையாலும் ஞானப்பாக்களாலாகிய தேவாரத்தை வெளியாக்கினமையாலும் அருள் ஞானம் என்னுமிரண்டும் பாலுக்கு அடையாயின. தெருள் = ஞானம் இதனை ஆழிமிதந்தோனுக்கும் திருத்தொண்டருக்கும் கூட்டுக. திருத்தொண்டராவார் அறுபான் மூவரும், தனியடியார்களும் எல்லாருமென்பது மற்றுமுள்ளாரையுமகப்படுத்தி யெஞ்சாமைப் பொருட்டாய் நின்றது. உளத்தன் = உள்ளந்தின் கண்ணுள்ளார்.

ஸ்ரீமத் பிரஹ்மானந்த சுவாமிகள்

(5) முற்றந் துறந்த முனிபிரமா னந்தனடி
பற்றிப் பணிந்துகவி பாடுவனுன்—முற்றுறவே
எங்கு நிறைந்தே யெழிலார் திருமடத்தில்
தங்குதவச் சின்மயனைத் தான்

(கு-ரை) நான் முற்றுறவே பிரம்மானந்தனடிபணிந்து சின்மயனைக் கவிபாடுவன் எனக்கூட்டுக. பற்றி = சரணுகக்கொண்டு. முற்றுற—இந்நூல் இடையூறின்றி முற்றுப்பெரும் பொருட்டு, வேதாந்தபடனம், தியான செபயோகமாதிய சன்மார்க்கத்திலொழுகுந் துறவிகள் வாழ்கின்றமையானும் மடம் பெற்றபேறு திருக்கோயிலுக்கு இல்லையா கையாலும் எழில்திரு. என்னும் இரண்டும் மடத்திற்கு அடையாக நின்றன. இவை

நான்கு செய்யுட்களும் மூவகை மங்கலத்தில் நமஸ்கார ரூபமங் கலத்தின் பாற்படும்.

ஆசிரியர் வணக்கம்

(6) ஆயு மறிவில்லா வற்பனு மென்றனக்குந்
தாயிற் சிறந்த தகைவுடையான்—தூயகண்ட
நீல னடிமறவா நீள்புகழ்ச் சன்முகன்றன்
கோல வடிமறவேன் கொண்டு

(கு-ரை) அற்பன் = கீழானவன். தண்ணளி செய்து கைம்மாறு கருதாது நூலறிவு கொளுத்தினேன். ஆகலின் தாயிற் சிறந்த என்று கூறப்பட்டது. தகவு = பெருமை. அன்பு = அருள். இரக்கம், கண்ணோட்டம், நற்புலமை முதலியன. தூயநீலகண்டன் என மாற்றி இயைக்க. இவ்வாசிரியரின் ஞானசாரியர் திருநீலகண்டர் எனக் குறிப்பித்தவாறு காண்க. கோலம் = அழகு. கொண்டு = மனதில் எண்ணி. ஏனேயோர் புகழினும் இவர் புகழ் விஞ்சியது. ஆகலின் நீள்புகழ் என்று கூறப்பட்டது.

அவையடக்கம்

(7) அவையடக்கமாவது, அவையத்தாரை அடங்கு மாற்ருல் இனிய சொல்லிப் புகழ்வது. அவைக்கு அடங்குவதுமாம்.

முந்நீர் கடக்க முயலு முடவனேயென்
றன்னீர்மை யானென்னச் சாற்றிடுவர்-பன்னூலுங்
கற்றுக் கவிசொல் கவிஞரும் பாவலரென்
வெற்றுக் கவியை வெறுத்து

(கு-ரை) பாவலர் அறியாமையும் நினைத்த காரியத்தை நிறைவேற்றுந் தகுதியின்மையுமுடைய முடவனுக்கு அடி

யேனை உவமை கூறுவர். ஆகையால் அடியேனும் இவ்விஷயத்தில் அறியாமையும், நிறைவேற்றும் தகுதியின்மையும் உடையன என்பது பெற்ரும். நீர்மையான் = தன்மையுடையான், பன்னூலுங்கற்று என்பது கவி என்பன நூற்கல்வி கேள்வியுடையானுயிருத்தல் வேண்டுமெனக் குறித்து நின்றது. கவினுரும்பா = சுருங்கச் சொல்லல் முதலிய பத்தழகையுங் கொண்டுள்ள பாக்கள். அவற்றை முட்டின்றிப் பாடுவதில் வல்லார் பாவலர். வெற்றுக்கவி = குன்றக்கூறல் முதலிய பத்துக் குற்றங்களுள் ஒன்ரே. பலவோ தம்மகத்துள்ள பாக்கள் "பாவலர் என்கவியை வெறுத்து முடவனை என்றன் நீர்மையான் என்னச் சாற்றிடுவர் எனக் கூட்டுக.

நூல்

நீராருந் தாமரையா நின்னடியென் நெஞ்சமலர்
பேரா திருக்க வொரு பேறருளிக்—காராருங்
கண்ட னுருவாங் கவின்ஞானச் சின்மயனே
பண்டைவினை தீர்ப்பாய் பரிந்து

(கு-ரை) நூல்களனைத்தும் மங்கலமொழி முதல்வகுத்துக் கூறுதல் தொன்னூல் முறையாகலானும், இந்நாலின் பாட்டுடைத் தலைவன் பெயரின் முதலெழுத்துச் சிகரமாகையால் அதற்கேற்ப நீர்முதலிய மங்கலச்சொல் வைக்கவேண்டுமென்பது வரையறையாகலானும் இம்முதற் செய்யுள் நீராரும் எனத் தொடங்கப்பட்டது. இவ்விதியினை "வரையறுத்த பாட்டியல் ஆருஞ் சூத்திரத்துக் காண்க."

இனி மங்கலம் சொல் எழுத்து தானம் அமுதம்—வருணம் கதி ஆகிய பொருத்தங்களும் இம்மங்கல மொழியில் அமைந்திருத்தலை வெண்பாப் பாட்டியல் முதன்மொழியியலிற் கண்டு கொள்க. நீர் = குளிர்ச்சி நிழல்; இஃது அடியின் கண்ணிருந்து அதனைச் சரணாக அடைந்த அடியார்கட்குத் தாபத்திரயத்தைப

போக்கும் வலியுடைத்து. செந்தாமரை என்பது அடியின் செம்மைக்கும் மென்மைக்கும் உவமையாக வந்தது. நீர் என்ப தனைத் தாமரைக்கு அடையாக்கி அம்புஜம் எனக் காரணப் பெயராகவும் கொள்ளலாம். சின்மயனே பேறருளிப் பரிந்து தீர்ப்பாய் எனக் கூட்டுக. ''நெஞ்சமலர்பேருதிருக்க''வென்றதை "மலர்மிசை யேகினன்'' என்னும் பொய்யாமொழியும் வலி யுறுத்தும். நெஞ்சமலர் என்னும்சீர் ஒரூஉ மோனையாக நின்றது. பின்வரும் செய்யுட்கள் அனைத்தும் மூன்றுஞ்சீர் மோனை பெறுத லாகிய பொழிப்பு மோனையாகவே அமையும் பதவுரை விளங்கிக் கிடத்தலின் சில குறிப்புக்கள் மாத்திரம் காட்டப் பெற்றன.

(2) பரிந்து பலியேற்றுப் பற்றறுத்துப் பந்தம்
இரிந்து பிறவியறு மெங்கோன்—விரிந்தகலை
பெற்றும் பயனென்கொல் பேராருஞ் சின்மயன்சீர்
கற்றுக் கதியடையாக் கால்.

(கு-உரை) பரிந்து = விரும்பி. பரிந்து பலியேற்று என் பதை ''அகமகிழ்ந்தங்கையேற்றே'' என்னுந் துறவுச்சொற் றொடர் வலியுறுத்தும். பற்று உயிர்ச்சார்பு பொருட்சார்பு. பற்றறுத்து இரிந்து. ஏற்று அறும் எங்கோன் எனக் கூட்டுக. கலைபெற்றும் சீர்கற்று அடையாக்கால் பயன்என் எனக் கூட்டுக. எவன் என்னும் வினாப் பெயர் என்னென்றாய்ப் பயனின்மை குறித்து நின்றது. கொல்அசை

(3) காட்சிக் கெளியவனைக் கண்டோர் பவமகற்றும்
மாட்சி மிகவுடைய மாதவனே—வீட்சியிலாச்
சந்தச் சிவஞானச் சங்கரனுஞ் சின்மயன்
கந்தத் திருக்கழலைக் காட்டு.

(கு-ரை.) காட்சிக்கெளிமையும், கண்டோர் பவமகற்று தலும் அடியாரிடத்து அவனுக்குள்ள கருணையை வெளியாக்கும். வீட்சியிலாச் சின்மயன் எனக் கூட்டுக. காலபரிச்சேதம் இன்றிய நித்தியன் என்றவாறு. கழலைக் காட்டுதல் = திருவடித் தீக்கை

செய்தல். காட்டு—ஆய்விகுதி நின்றியமுன்னிலை யேவலொருமை வினைமுற்று.

(4) காட்டுக்கு ளேகிக் கடியதவ மாற்றிடுவீர்
வீட்டிற்கு வாயிலெனும் வேதியனை—மாட்டின்
எருத்தேறுஞ் சின்மயனை யேத்திப்பணிவீர்
திருத்தாளில் வைப்பன் சிவன்

(கு-ரை) வாயில் = காரணம், வேதியன் = வேதாந்த நூற்பயிற்சி வல்லவன். எருத்து = பிடரி எருத்தேறுமென்றமை யானும் சிவன்தாளில் வைப்பன் என்றமையானும் சிவனே சின்மயன் என்றதாயிற்று. சிவன் = மங்கள வடிவன். சின்மயன் = சித்சொரூபன்

(5) சிவஞான போதமெனுஞ் சீர்மிகுநன் னூலின்
நவமான பேருரையை நல்கும்—பவமான
பந்த மறுத்த பரஞானச் சின்மயவென்
சிந்தைதனில் நின்றானைச் சேர்

(கு-ரை) நவமான பேருரை = வேதாந்த பரமாகிய உரை. பவமான = பிறவிக்குக் காரணமாகிய, பரஞானம் = அனுபவ ஞானம். சேர்—ஆய்விகுதி குன்றிய முன்னிலைவினை

(6) சேர்ந்தார் பவமகலச் செய்யுஞ் சிவஞானம்
ஆர்ந்தாரும் போற்றும் அருளிறையே—நேர்ந்தார்
பவமகற்றுஞ் சின்மயனே பக்குவமி வெற்குத்
தவமியற்றும் பேறதனைத் தர

(கு-ரை) அருளிறை = ஞானசாரியன். நேர்ந்தார் = தன்னைச் சரணகவடைந்தவர்கள். பக்குவம் = விவேகாதி நான்கு சாதனங்களுடைமை. பேறு = செல்வம். ஆர்ந்தாரும் என்றவிடத்தும்மை உயர்வைச் சிறப்பிக்கும். ஆர்தல் = நிறைதல்.

(7) தானே யகிலவுருத் தத்துவமாஞ் சின்மயனே
கோனே துறந்த குருபரனே—மானேர்
விழியார் மயக்கும் விருப்பும் வெறுப்பும்
கழியாவோ நீகாணுங் கால்

(கு-ரை) கோன் = தலைவன். மருண்ட பார்வைக்கு மான் பார்வை உவமையாயிற்று. ஓகாரம் வினுவாகவும், கழியும் என்னும் விடையாகவும் நின்றது. காணுங்கால் = கண்டவுடன் விரைவுப் பொருளது.

(8) சாலைப் பிடித்துக் கடிதடக்கிக் காலமெல்லாம்
நூலைப் படித்திருக்கும் நுண்ணுணர்வீர்—மேலை
வினையறுக்குஞ் சின்மயனை மேவிடுவீ ரென்றும்
அனைவயிற்றி லாகாத வாறு

(கு-ரை) கால் = பிராணன். அதனைப் பிடித்துக்கடி தடக்கல் = ரேசக, பூரக, கும்பக வடிவுற்ற பிராணுயாமம். காலமெலாம் என்றது அக்காலக் கழிவின் பயனின்மையை உணர்த்திற்று. ஆகாதவாறு மேவிடுவீர் எனக் கூட்டுக. மேலை என்பது முன், பின் என்னும் பொருட்டு

(9) ஆறும் படிக்கே யதுநீயே யென்னுமுரை
கூறும் படிக்குக் குருபரனுய்த்—தேறுங்
கலைஞானச் சின்மயனை கண்மணியை யென்றும்
உலையாமல் நீநெஞ்சே யோது

(கு-ரை) ஆறும்படிக்கு = சித்தவிசிராந்தியை அடையுமாறு, உலையாமல் = மேற்பிறவியெடுத்து வருந்தாவண்ணம். ஓது = துதிப்பாயாக ககரவியங்கோள் விகுதி தொக்கது. ஆய்த் தேறும் = ஆகித்தெளிந்த.

(10) ஓதுங் கலையனைத்து முன்றனையே யென்றடியேன்
ஏதுந் திரிபின்றி யிங்குணர்வேன்—மோதிவரு
நீராரும் வைகைநதி நீள்மதுரைச் சின்மயனே
சீரரும் நின்னடியிற் சேர.

(கு-ரை) கலையனைத்தும் உன்றனையே ஓதும் என மாற்றுக. பிரஹ்ம சொரூபன் என்பது கருத்து. திரிபு = விபரீதம் நீள் = வளமிகுதி.

(11) சேருங் கதியுதவுஞ் சின்மயா னந்தனடி
சாருங் கருத்துடைய சான்றோர்கள்—பேரும்
பெருவாழ்வும் பெற்றுப் பிறவாமை பெற்றுத்
தருவாழ்வும் பெற் றிடுவர் தான்.

(கு-ரை) சேருங்கதி = வீடுபேறு. பேர் = பெருமை. புகழ் = ஒளி. பெருவாழ்வு = இகலோக போகம். தருவாழ்வு = பரலோக போகம். பெருவாழ்வும் தருவாழ்வும் பெற்றுப் பிறவாமை பெற்றிடுவர் எனக்கூடுக. தான் அசை.

(12) தானை தமைச்சூழச் சத்திரிகைத் தண்ணிழற்கீழ
வானை யரசாளும் வானவருங்—ஏனையருந்
தேனேவென வினிக்குஞ் சின்மயனைப் போற்றாதே
ஏனோ தவமிருந்தா ரிங்கு.

(கு-ரை) சத்திரிகை = சந்திரவட்டக்குடை. ஏனையர் = பூவுலக மன்னர். தேனேவெனவினித்தல் = தன்னைச் சார்ந்தாரைப் பெரின்பமடைவித்தல். சின்மயனைப்போற்றி எளிதில் அடையத்தக்க பொருளை தவமிருந்து அரிதிலடைவான் முயன்றனராகையால் ஏனோ வென்றவிடத்தேகாரம் தோகாரம் இரங்கற் பொருளாயிற்று.

(13) இங்குறைந்த பாண்டமதின் எத்தனையோ சென்மமதில்
தங்குமல பாண்டமதைத் தாங்கினேன்—பொங்குந்
துறவுறுமோர் சின்மயனே துங்கமுறு ஞானத்
திறமுறுவான் எற்கினிமேற் செப்பு.

(கு-ரை) இன் உவமையுருபு மலம் = காமம், வெகுளி, மயக்கம். பொங்கும் = மேன்மையுடைய. ஓர் = ஒப்பற்ற. துங்க

மூறு ஞானம் = பிரம்ம ஞானம். ஞானத்திறம் = ஞானவிலக்கணம். இங்கு = பெருங்காயம்.

(14) செப்புங் கலைகள் தெளிந்தே சிவஞானம்
ஒப்பில் முறையா லுரைத்தாலும்—இப்புவியில்
வீடதனை மேவுவரோ மேதகுநற் சின்மயநின்
தாடனையே சாரா தவர்.

(டி-ரை) ஞானமுரைத்தல் = அபரஞானம். ஓகாரம் எதிர்மறைப் பொருளது. தாள்தனையே யென்றவிடத்தேகாரம் — பிரிநிலை.

(15) தவநெறியைச் சாரார் தமையுணரார் என்றுஞ்
சிவநெறியைச் சாரார் சிறிதும்—பவநெறியைச்
சென்றடைவா ரென்றுரைத்த சின்மயனே நின்னடியைச்
சென்றடையுஞ் செந்நெறியிற் சேர்.

(கு-ரை) தவநெறி = யோகமார்க்கம். சிவநெறி = பக்தி மார்க்கம். பவநெறி = பிறவி மார்க்கம். செந்நெறி = ஞான மார்க்கம். சாரார், உணரார், சாரார் என்றவிடங்களிறுதியில் எண்ணும்மை விரித்துக் கொள்க. சென்றடையுமென்றவிடத்துச் சென்றென்பது வந்தெனப் பொருள்படும்.

(16) சேர்ந்தாரைத் தன்னுருவாச் செய்யுமொரு சின்மயனைச்
சார்ந்தாரை நன்னெஞ்சே சார்ந்ததனாற்—கூர்ந்தமதி
பெற்றுப் பெருநூல்கள் பேசும் பொருளதனைக்
கற்றுக் கதியடைவாய் காண்.

(கு-ரை) தன்னுருவாய்ச் செய்தல் = தத்பத லட்சியயார்த்தமாகிய பிரம்மவடிவமாகச் செய்தல். அதனால் = அங்ஙன் சார்ந்ததனால். கூர்ந்தமதி = உள்ளதை உள்ளவாறு காணும் அறிவு. காண்முன்னிலை அசை.

(17) காணும் பொருளனைத்துங் காரணனுஞ் சின்மயநின்
மரணு முருவாய் மதித்திடுவேன் —சேணவிரும்
மந்தா கினிவேணி மாதவனே நான்முகனே
சிந்தா குலஞ்சிதையச் செய்.

(கு-ரை) காணும் பொருளனைத்து மென்றமையால்அவை கானல் நீர்போலத் தொற்றுமாத்திரம் என்பது பெற்றும். காரணன் = அபின்ன நிமித்தோபாதான காரணன். சேண் = ஆகாயம். அவிரும் = விளங்கும். மந்தாகினி = கங்கை. வேணி = சடாபாரம். மாதவன் = திருமால். மந்தாகினிவேணி மாதவன் = சங்கரநாராயணன். மும்மூர்த்திகளும் இவனே என்பதாயிற்று. சிந்தாகுலம் = மனோதுக்கம்.

(18) செய்யாருங் கூடற் சிவஞானச் சின்மயனைக்
கையாற் றொழுது கதியடைவீர்—மையாரும்
பொல்லா விழியார் பொருள்மக்க ளென்றுவரும்
நில்லா வுலகியலை நீத்து.

(கு—உரை) செய் = வயல். கதி = அனர்த்த நிவர்த்தி ஆனந்தப் பிராப்தி வடிவமாகிய வீடு பேறு. மை என்பது அறியாமையினையு முணர்த்தும். ஆடவரைத் தம் வயப்படுத்தித் துன்புறுத்துவது விழியாகலின். பொல்லா விழியாயிற்று. நீத்து = முற்றத்துறந்து, நீத்துத் தொழுது கதியடைவீர் எனக் கூட்டுக.

(19) நீத்தாரும் போற்றுமொரு நின்மலனுஞ் சின்மயனை
நீத்தே யடைவதற்கு நீநெஞ்சே —பூத்தாரும்
பொற்று மரைத்தடமார் பொற்கூடல் சென்றவன்கண்
வற்றாத் திருவருளை வாங்கு,

(கு—உரை) நெஞ்சே நீ சின்மயனை அடைவதற்கு நீத்துக் கூடல்சென்று அவன்கண் அருளைவாங்கு எனக் கூட்டுக. பொன் - அழகு.

(20) வாங்கும் வகையறியேன் வாங்க வளித்தவரைத்
தாங்கும் தகவறியேன் தக்கவரைத்—தீங்கறவே
தேர்ந்திடையேன் சின்மய நின் தெய்வத் திருத்தாளை
நேர்ந்தடையேன் மூவாசை நீத்து,

(கு—உரை) வகை = சூழ்ச்சி, தாங்குதல் = சமயமறிந்துதவுதல், தகவு = பெருந்தகைமை, தீங்கு = காமல், வெகுளி, மயக்கம் ஆகிய முக்குறறங்கள் நேர்ந்து விரும்பி நீத்து அடையேன் எனக் கூட்டுக.

(21) நீத்தவரைப் போற்றி நினதருளை வாழ்த்தியருள்
மூத்தவரை யேத்தும் முறையறியேன்—காத்தெனையும்
நற்று மரைத்தடமார் நன்மதுரைச் சின்மய நின்
வற்று வருள்வழங்கு வாய்,

(கு—உரை) சின்மயஎனையும் காத்து நின் அருள் வழங்குவாய் எனக் கூட்டுக. அருள்மூத்தவா = மும்மூர்த்திகள், முறை = இலக்கணம், எனையும் என்ற விடத்தும்மை இழிவைச் சிறப்பிக்க வந்தது. வற்றுவருள் = பேரருள்.

(22) வாயார நின்னடியை வாழ்த்தி வழிபட்டேன்
தேயாத செம்மேனிச் சின்மயனே—தாயாருந்
தந்தையொடு சுற்றந் தனிப்பொருளும் நீயென்று
முந்தை வினையறுக்க முன்,

(கு—உரை) சின்மயனே நீயென்று வழிபட்டேன். வினையறுக்க முன், எனக் கூட்டுக. தேயாத = குறைவுபடாத தனிப் பொருள் = கல்விப்பொருள், தனி = ஒப்பற்ற முன், நினைக. முன்னுக என்னும் வியங்கோள்முற்று உகரச்சாரியையும் ககர விகுதியுங் குறைந்து முன் என நின்றது.

(23) முன்னை வினையை முருக்கி முழுஞானந்
தன்னை யளிக்குந் தகவுடையான்—பொன்னொடுபெண்
மண்ணைத் துறந்தபெரு மாண்புடைய சின்மயனுங்
கண்ணைக் கதியடைவீர் கண்டு.

(கு—உரை) சின்மயனுங் கண்ணைக் கண்டு கதியடைவீர் எனக்கூட்டுக. முருக்கி = அழித்து, முழுஞானம் = பிரம்மஞானம், தகவு = தகுதி, சாமர்த்தியம், கண் = ஞானக்கண்.

(24) கண்ணோட்ட மில்லாத கண்ணுடையேன் நின்றனருட்
கண்ணோட்ட மெங்ஙன் கலந்துறுவேன்-எண்ணோட்டம்
இல்லே னெழுந்தறியேன் ஏதமிலாச் சின்மயசொல்
வல்லேனோ நின்வழுத்து மாறு,

(கு—உரை) எண், நோட்டம் = நியாயநூற் பயிற்சி எழுத்து = இலக்கண நூற்பயிற்சி. ஏதம் = முக்குற்றம், சின்மய நின்வழுத்துமாறு வல்லேனோ சொல் எனக் கூட்டுக. நின் = நின்னை, சொல்வல்லேனோவென வியைத்துச் சொல்லில்வல்லேனோ எனவும் பொருள் காண்க. ஓகாரம் எதிர்மறைப்பொருளது.

(25) மாறுகொளு மைம்புலனை மாற்றி நினைவணங்கும்
வீறுகொளு மாறு விரைந்திட்டேன்—பேறுதவும்
பெம்மானே ஞானப் பெருந்தவனே சின்மயனே
எம்மானே யெற்கருள்வா யேற்று

(கு—உரை) மாறுகொள்ளுதல் = தன்வயப்படாதிருத்தல் மாற்றி = தன்வயப்படுத்தி, வணங்கும்வீறு = வணங்குதலாலுண்டாகிய இறுமாப்பு, பேறு = பொன்னும் மெய்ப்பொருளும் போகமும் திருவும்—ஏற்று = அடிமையாகக் கொண்டு ஏற்று அருள்வாய் எனக் கூட்டுக.

(26) ஏற்றுத் திருக்கொடியாய் எங்கும் நிறைவுடையாய்
ஊற்றுப் பெறுக்கின் உணர்வுடையாய்—போற்றிவரும்
நல்லா ருளமுடையாய் நற்கருணைச் சின்மயனே
பொல்லா வெனக்கருள்வாய் போந்து,

(கு—உரை) ஏறு = ரிஷபம், எங்கும் நிறைவுடைமை = தேசபரிச்சேதமின்மையை யுணர்த்திற்று. போந்து = வந்து,

ஊற்றுப்பெருக்கு நீரால் உலகூட்டுவது போலத் தானும் உணர்வால் உலகூட்டுவன் என்பது கருத்து. இன்உவமைஉருபு, போந்து அருள்வாய் எனக் கூட்டுக. எவ்வுயிர்க்கும் பொதுவாய் நிற்றலின் நற்கருணையெனப்பட்டது. எனக்கும் என்றவிடத்திழிவு சிறப்பும்மை தொக்கது.

(27) போந்தேனின் சந்நிதியுற் பொய்யுடையே னின்னடியைச்
சாந்துணையுஞ் சாற்றுந் தகவளித்துப் — பூந்துணரார்
சோலைத் திருமதுரைச் சொக்கனுருச் சின்மயவென்
மாலைத் துடைத்தருள்வாய் வந்து,

(கு—உரை) சின்மய, பொய்யுடையேன் சந்நிதியிற் போந்தேன் சாந்துணையும் வந்து நின்னடியைச் சாற்றுந் தகவளித்து மாலைத் துடைத்தருள்வாய் எனக் கூட்டுக. சாற்றுந் தகவு = துதிக்கும் பெருமை, துணர் = கொத்து, மால் = மயக்கம், அஞ்ஞானம்.

(28) வந்துநிதம் போற்றி வழிபாடு செய்யடியார்
முந்து வினையறுக்கும் மூதறிவோய் — சந்தமுறும்
வேதத் தலைமிளிரும் வேதாந்தச் சின்மயனே
பாதந் தலைமிசைவைப் பாய்,

(கு—உரை) செய்யடியார் வினைத்தொகை = செய்கின்றவடியார், மூதறிவு = பிரம்மஞானம், வேதத்தலை = வேதங்களினிடத்து மிளிரும் = விளங்கும், வேதாந்தம் = உபநிடதம்.

(29) பாட்டின் பயனைப் பரிந்தறியாப் பாதகனை
ஏட்டிற் பெரிது மிசைத்திடுவேன் — வீட்டின்
வழிகாட்டுஞ் சின்மயனும் மாதவனை வானோர்
மொழிகாட்டி வாழ்த்திடுவே னே.

(கு-ரை) தனதறியாமையை விதந்தோதியவாறுயிற்று. பயன் = சொன்னயம், பொருணயம். பரிந்து = விரும்பி இசைத்

தல் இல்குணங்களை உள்குணங்களாகக் கூறுதல். மொழி காட்டி = சொற்கள் அமைத்துச் செய்யுளியற்றி.

(30) நோகாது வாழ்ந்திடுவீர் நோன்பு துறந்திடுவீர்
சாகதா நல்வாழ்வு சார்ந்திடுவீர்—மாகாதல்
செற்ற மதுரைத் திகழ்ஞானச் சின்மயன்சீர்
கற்றுக் கழலடைந்தக் கால்

(கு-ரை) நோன்பு துறத்தல் = தவமுதலியன வேண்டாமை, நல்வாழ்வு = ஜீவன்முக்தி. செற்ற = துறந்த, அடைந்தக்கால் வாழ்ந்திடுவீர், துறந்திடுவீர், சார்ந்திடுவீர் எனக் கூட்டுக. உலகீர் என்பது வருவித்துக் கொள்க.

(31) காவேன் புலனைந்தும் கல்லேன் கலைபலவும்
மாவேழ் பிறவியறும் வாட்டமிலேன்—தாவாத
வித்தகனே மெத்தும் வியன்கூடற் சின்மயனே
தத்துவனே நின்கழலைத் தா.

(கு-ரை) புலனைந்தும்—உம்மை எஞ்சாமைப் பொருட்டு. மெத்தும் = மேன்மையுடைய, வியன் = சிறந்த, வித்தகன் = ஞானவடிவன். தத்துவன் = பிரம்ம சொரூபன். நாயேன் என்பதை முன்னரக் கூறுக,

(32) தாயாக வந்துதவுந் தண்ணளியின் மிக்கோனை
ஓயாக் கவலை யொழித்தவனை—மாயாத
வீடளித்து வேண்டும் விழைவறுத்த சின்மயனைப்
பாடழிய நெஞ்சே பணி.

(கு-ரை) ஓயாக் கவலை = தாபத்திரய துக்கம், மாயாத = அழியாத, வேண்டும் விழைவு = உலகப் பொருள்களை விரும்பும் பேராசை, பாடு = பிறவித் துன்பம்—பணி = முக்கரணங்களாலும் வழிபடுவாய், வந்துதவல் = மார்ச்சால நியாயம் பற்றியது.

(33) பணிவும் பெருந்தகையும் பற்றறுக் தம் நெஞ்சின்
அணியுஞ் சிறிது மணையேன்—தணிவில்லா
ஆசைக்கடலை அகற்றியருள் சின்மயநின்
ஓசைக் கழல்தரவே உன்.

(கு-ரை) பெருந்தகை = பரந்த நோக்கம், அணையேன் = பொருந்தேன், தருவான் = ஈயும் பொருட்டு, உன் = கருதுவாய்.

(34) உன்னை யொழிய வுறுபொருள்வே ஹென்றறியேன்
தன்னை யறியுந் தகவறியேன் - அன்னை
உருவாருஞ் சின்மயனே யுள்பொருளாய் நின்றோய்
கருவாரா நன்னெறியைக் காட்டு.

(கு-ரை) உறுபொருள் = அடையும் பொருள், தன்னை = தனது பரமார்த்த வடிவத்தை, அறியுந்தகவு = அறிதற்குரிய ஞான சாதனங்கள். உள்பொருள் = சத்துருபம், கரு = பிறவி, நன்னெறி = சன்மார்க்கம்.

(35) காடாருங் கூந்தற் கனிமொழியார் காதலினல்
வீடாரும் வேட்கை விழைகில்லேன்—பாடாரும்
மெய்ஞ்ஞான வீட்டில் விளங்குமருட் சின்மயனே
அஞ்ஞானம் நீக்கியருள் வாய்.

(கு-ரை) காடு = குழல் முதலியனவந்தன் தொகுதி. கனி மொழி = ஆடவரை வயப்படுத்தும் மொழி, பாடு = பெருமை.

(36) வாயார நின்னை வழுத்துறவும் வண்டமிழை
நாவார வோதி நலம்பெறவும்—ஓயாத
முத்துக்கம் நீக்கும் முனிவரனுஞ் சின்மயனே
நத்தி யுனையடைந்தே னுன்.

(கு-ரை) வாய் ஆர = வாக்குப் பயனடைய, வாய்நிறைய வெனினுமமையும், உற = துணைவினை, வண்தமிழ் = தேவாரம் முதலியன. முத்துக்கம் = தன்னைப் பற்றி வருவன. பிற

வுயிரைப்பற்றி வருவன. தெய்வத்தைப்பற்றி வருவன. வரன் = சிரேஷ்டன், நத்தி = விரும்பி, நலம் = வீடுபேறு, ஓயாத = மாறி மாறி வரும் இயல்புடைய.

(37) நாஞ ரெனவுணரேன் ஞானத் திறங்கேளேன்
ஊஞ ருடலி னுணர்வுடையோன்—வானோர்
வணங்குதிருச் சின்மயனே வந்தென் பிறவி
உணங் தம் வகையொழிப்பா யோ.

(கு-ரை) திறம் = இலக்கணம், உடலுணர்வு = தேகான்ம புத்தி, உணங்கும்வகை = அழியுமாறு, ஓகாரம் விஞப்பொருளது

(38) ஒருங் கலைபலவு மொன்றே பொருளெனவும்
பாரு முயிரும் பரமெனவும்—கூரும்
உரமில்லா யானின் உயர்சின் மயனே
பரமென்ன வந்தேன்கண் பார்.

(கு-ரை) கலை = உபநிடதங்கள், பரம் = பிரம்மம். எனவும் = என்று உபதேசிக்கவும். கூரும் = நுட்பமாகவறியும், உரம் = அறிவு. நின்பரமென்ன வந்தேன் எனக் கூட்டுக. நின்பரம் = நின்ஞற்ருங்கும், பொருள். பார் = ஆய்விகுதி குன்றியமுன்னிலை வினை.

(39) பார்முதலாந் தத்துவமும் பத்தைந்தும் நீயலவென்
றேர்பெறவே யெற்நம் இசைத்தருளிக்—கார்தவழும்
பந்தித் திருமதிலார் பண்மதுரைச் சின்மயனைச்
சிந்தித் திருந்திடுவீர் சென்று.

(கு-ரை) தத்துவம் முப்பத்தைந்தாவன = பூதங்கள் ஐந்து. தூலச்சரீர தத்துவம் ஆறு. ஞானந்தியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து, அந்தக்கரணங்கள் ஐந்து, பிராணுதிவாயுக்கள் ஐந்து, மாயை, அவித்தை, ஈசன், ஜீவன். ஏர்பெற = ஐயந்திரிபுயின்றி எற்கும் என்றுவிடத்தும்மை இழிவு சிறப்பு. கார் = மேகம், பந்தி = வரிசை, பண் = அழகு.

(40) சென்று திருத்தலங்கள் தீர்த்தந் திருமூர்த்தம்
ஒன்றும் விடாம லுழன்றுலும்—பொன்றுறுமோ
முன்னை வினைகள் முதுமதுரைச் சின்மயநின்
தன்னை வணங்கார் தமக்கு.

(கு-ரை) சின்மய, வணங்கார் தமக்கு உழன்றுலும் வினைகள் பொன்றுறுமோ எனக்கூட்டுக. ஒகாரம் எதிர்மறை உழல்தல் = அலைந்து வருந்துதல் தன்சாரியை. வினைகள் = சஞ்சிதாதி கர்மங்கள்.

(41) தமக்குறுநல் வாழ்வதனைச் சார்ந்துபணி யன்பர்
தமக்குதவுந் தண்ணளியான் றன்னைச்—சுமக்குமொரு
சேடன் சிரத்திலுறு தென்மதுரைச் சின்மயனை
வீடண்ண சென்றுபணி வீர்.

(கு-ரை) வாழ்வு = பேரின்ப வாழ்வு. பணியன்பன், வினைத்தொகை, தமக்கும் உதவும் என்றலிடத்தும்மை தொக்கது. அண்ண = அடைய.

(42) வீடுந் திருவும் விழையும் பொருள் பலவும்
நாடு மறிவுடனே நல்கிடுவான்—பாடும்
புலமாருஞ் சின்மயனைப் போற்றப் புலவ
நலமாருந் தென்மதுரை நண்.

(கு-ரை) புலவராற்றுப்படை. அதனிலக்கணம் கேட்டுணர்க. திரு = துறக்கச் செல்வம். பொருள் = இம்மைச் செல்வம். நாடுமறிவு = ஆன்மஞானம். புலம் = பிரம்மஞானம். நலம் = வளம். பாடும்புலவ சின்மயனைப் போற்ற நண்ணு எனக்கூட்டுக. நண் = அடைவாய். புலவ, அண்மைவிளி. தென் = அழகு.

(43) நண்ணுங் கலைபலவும் ஞானவுரு நாமென்றே
எண்ணி யிருப்பீ ரெனும்பொருளைப்—புண்ணியனுஞ்
சின்மயா னந்தத் திருக்குரவ னெற்கோதித்
தன்மயா னந்தந் தான்.

(கு-ரை) ஞானவுரு / பிரம்மம், இருப்பீரென்னுஞ்சொற் போக்குப் பேதவாதிகளின் சேர்க்கையால் பிறழாதிருக்கவேண்டு மென்பதை வலியுறுத்தும். தன்மயரானந்தம் / பிரம்மானந்தம்.

(44) தானே யுலகனைத்துந் தன்னிற் பிறிதில்லை
யானே நீ யாவா யெனவருளுங்—கோனாகும்
வித்தகனை வேத விழுப்பொருளாஞ் சின்மயனைத்
தத்துவனைச் சார்ந்திடுவிர் சற்று

(கு-ரை) தான் / பிரமம், தன்னில் / அதற்கன்னியமாக, கோன் / குருபரன், வேதவிழுப்பொருள் / வேதாந்தப்பொருள், சற்று / சிறிது, சார்தல் / அடைந்து மூக்கரண வழிபாடு செய்தல், பெரும் பயன் எய்தும் என்றவாறு.

(45) சற்றுந் தவநெறியைச் சார்ந்தறியேன் தாழ்குழலார்
பற்றிற் படிந்து பரிதவிப்பேன்—குற்றமுறு
பொன்னைப் புவியதனைப் போற்றிடுவேன் சின்மயநின்
தன்னை வழுத்துவனோ தான்.

(கு-ரை) பற்று / ஆசைக்கடல், படிந்து / மூழ்கி, பரிதவிப்பேன் என்னுஞ் சொற்போக்கு அதில் மூழ்கினோர் கரையேறுதலரிது என்பதை விளக்கிற்று. குற்றம் / நிலையாமை முதலியன. போற்றல் / இறுகப்பிடித்தல். ஓகாரம், எதிர்மறை, தான் அசை.

(46) தானாக வென்னைத் தலையளிசெய் தாண்டவனே
ஊனாகம் மாற்றும் உயர்ந்தவனே—வானோரும்
போற்றவருஞ் சின்மயனே போதமிலா வென்பிறவி
மாற்றியருள் வாய்பரனே வந்து,

(கு—ரை) தலையளிசெய்து என்னைத்தானாக ஆண்டவன் எனவும் வந்து என் பிறவிமாற்றியருள்வாய் எனவும் கூட்டுக. என்னை / துவம்பதலக்ஷியார்த்தமாகிய என்னை, தானாக தத்பதலக்ஷியார்த்தபிரமமாக, தலையளி / கருணை,

தலைஉபசர்க்கம், போதம் / அறிவு, என்பிறவி இழிவுப் பொருட்டது.

(47) வந்து நிதம்பரவும் வானவர்க்கும் பேறளிக்குஞ்
சிந்தைக் கினியானுஞ் சின்மயனே — என்றும்
ஒருமையுற வாக்கு முயர்ஞானம் பெற்றும்
பெருமையுற நன்னெஞ்சே பேசு.

(கு—ரை) பேறு / வீடுபேறு, ஒருமை / ஒன்று, பிரம்மம், ஆக்கும் / செய்யும், ஆக்கும்ஞானம், பெருமை / யாவரும் போற்றுதல்.

(48) பேசுங் கலைகள் பெரிதுணர்ந்து பேரறிவால்
வீசும் புகழால் மிளிர்ந்தாலும்—தேசுடைய
நின்னை யுணராமல் நின்மலனுஞ் சின்மயனே
தன்னை யுணர்வாரோ தான்,

(கு—ரை) பேசும் / பசுபதி பாச இலக்கணங்கூறும். தான்அசை, ஓகாரம்—எதிர்மறை. தன்னை என்பது ஒவ்வொருவரையும் உணர்த்தும். வீசும் / விரிந்த, மிளிர்தல் / விளங்குதல், தேசு / ஒளி, ஞானம்.

(49) தானே யுலகெல்லாந் தந்து தலையளித்துத்
தானே யழிக்குந் தகவுடையாய்— கோனேயென்
குற்றங் களைந்த குலமதுரைச் சின்மயனே
பெற்றேன் நினதடியின் பேறு.

(கு—ரை) ஏகாரமிரண்டும் பிரிநிலைப்பொருளன—தலையளித்து / காத்து, தலை, உபசர்க்கம், தகவு / பெருமை, குற்றம் / முக்குற்றம், குலம் / சிறந்த, அடியின்பேறு / திருவடிச் செல்வம், இன்சாரியை

(50) பேருகு மென்ன நிதம் பெண்டிரொடு மக்களிடம்
மாருத வேட்கையுறும் மாணிலியைச்—சீருது
காத்துக் கடைக்கணிப்பாய் கற்பகமாஞ் சின்மய நின்
பூத்தமலர்த் தாளடைந் தேன் போந்து.

(கு—ரை) மாணலியை—பெருமையின்றிய அடியேனை சின்மய, போந்து அடைந்தேன். காத்துக் கடைக்கணிப்பாய் எனக் கூட்டுக.

(51) போந்துற்ற நல்லடியார் புந்தித் திறனேக்கிச்
சாந்தக் கலைபகருந் தண்ணளியாய்—காந்தமெனக்
கண்டோரை யீர்க்குங் கனமதுரைச் சின்மய நின்
தண்டேன் துளிக்கிமடி தா.

(கு—ரை) போந்துற்ற = வந்தடைந்த, புந்தித்திறன் = கூர்ந்தமதி, சாந்தக்கலை = வேதாந்தநூல், ஈர்க்கும் = இழுக்கும், கண் = இடமகன்ற, கண்போன்று போற்றத்தக்க வெனினுமாம், துளிக்கும் = சொட்டும், அடி = அடித்தாமரை, தா = தந்தருள் வாய், நோக்கிப்பாரும் சின்மய தண்ணளியாய் நின்னடிதா வெனக் கூட்டுக.

(52) தாழு மடியவரைத் தன்னருகி வாக்கியவர்
வாழும் வழிவகுக்கும் மாண்புடையோய்—சூழும்
அறிவி லடியேனை யாண்டருள்க தேசோய்
நெறியி லுறமிகவும் நேர்ந்து.

(கு—ரை) வாழும்வழி = சன்மார்க்கம், வகுக்கும் = வரையறுத்துபதேசிக்கும், சூழும் = ஆராயும், நேர்ந்து = விரும்பி, ஆண்டு = ஆட்கொண்டு, தேசோய், மாண்புடையோய், அடியேனை மிகவும் நேர்ந்து ஆண்டு நன்னெறியிலுற அருள்வாய் எனக் கூட்டுக.

(53) நேர்ந்தார் பவப்பிணியை நீக்குந் திறலுடைய
கூர்ந்தவிழி ஞானக் குருபரனும்—ஆர்ந்தகலை
எல்லாமாஞ் சின்மயனை யேத்துமடி யாருரையில்
நில்லாயென் நன்னெஞ்சே நீ.

(கு—ரை) நேர்ந்தார் = எதிர்ப்பட்டார், ஆர்ந்த = நிறைந்த, உரையில்நிற்றல் = அவர் சொற்படி நடத்தல், நன்னெஞ்சேயென விழித்தது தன் காரியசித்தியின் பொருட்டு ஆகும்.

(54) நீவாழும் நாட்களிலே நின்மலனுஞ் சின்மயன்றுள்
பூவாலும் நல்ல புனலாலும்—ஓயாமல்
பூசித் தவன்றன்னைப் போற்று மடியவரை
நேசித்து நெஞ்சே நினை.

(கு—ரை) நல்லவென்பதைத் தாளுக்கும், பூவுக்கும். அடியவர்க்கும் கூட்டுக. குருபூசையோடு அவனடியார் பூசையும் வேண்டும் என்பதாயிற்று. நேசித்து = நட்புரிமை பாராட்டி.

(55) நினைந்தாருந் தன்னை நினையாரும் வாழப்
புனைந்தகல் லாடைப் புனிதன் = நனைந்தமனம்
பெற்றுருஞ் சின்மயனைப் பேசிமகிழ் நன்னெஞ்சே
வற்று வரமருள்வான் வந்து.

(கு—ரை) கல்லாடைப்புனிதன் என்னும் சொற்போக்கு = மைத்திரி, கருணை, முதிதை, உபேட்சை ஆகிய நாற்குணங்களுமுடையான் என்பதை வலியுறுத்தும், நனைந்தமனம் = இரக்கமுடைய மனம். மகிழ் = மகிழ்வாய் ஆய்விகுதி குன்றியது. வந்து = எதிருற்று.

(56) வந்தோர் பவப்பிணியை மாற்றும் மருந்துடையான்
நந்தாத் துறவி னலமுடையான்—சிந்தாத
சிந்தைத் திருவுடைய சின்மயனை நன்னெஞ்சே
முந்தை வினையறுப்பான் முன்.

(கு - ரை) மருந்து = ஞானமருந்து, நந்தாத்துறவு = மாருத முற்றத்துறவு, சிந்தாத = விஷயங்களிற் செல்லாத, திரு = செல்வம், முந்தை வினை = பழவினை, மூன் - தியானிப்பாயாக.

(57) மூன்னே பிறப்பாழி மூழ்கித்துன் புற்றவெலாம்
என்னே மறந்தனையோ வென்மனமே — சொன்னேன்
செழுந்திருப்பேர்ச் சின்மயனைச் சிந்தித்துத் தூங்கி
எழுந்திருப்பாய் உண்டோ விடர்.

(கு—ரை) ஆழி = கடல், என்னே — இரக்கக் குறிப்பு, செழுமை, திரு, பெருமையாகிய மூன்றும் சின்மயனுக்கு அடைகளாகும். செழுமை = ஞானவளம், திரு = நாற்குணமுடைமை, பெருமை = யாவராலும் இறைஞ்சப்படுதல், இடர் = பிறவித் துயர்.

(58) இடரான வாழ்க்கைதனி லிச்சையிலரா் என்றும்
மடவார் மயக்கின் மயங்கார் — திடமருவும்
வேலவாங் காலன் வினையடையார் சின்மயனும்
ஆலவா யெந்தையடி யார்.

(கு—ரை) வேல் = முத்தலைவேல், அவாவும் என்பது அவாம் எனத்தொகுத்தலாயிற்று, வினை = உடலினின்றும் உயிரைப் பிரித்தல் அடியார், இலார், மயங்கார், அடையார் எனக் கூட்டுக. ஆலவாய் எந்தையே இவனும்.

(59) ஆரத் தனந்தந்த அன்னையொடு தந்தைபலர்
சேரத் தனைத்தந்த சின்மயனே — கோரத்தாழ்
துன்பத் தலைபுற்ற தூர்த்த னெனக்கருளி
இன்பத்தே வைப்பாய் இனி.

(கு ரை) ஆர = பால்பருக, தனை = தத்பதலட்சியார்த்தமாகிய தன்னை, கோரத்துஆழ் = கொடுமைமிக்க, துன்பத்து

அலை = துன்பக்கடல், தூர்த்தன் = காமுகன், இன்பம் = பேரின்ப வீடு.

(60) இனியாகு மென்றனக்கே யிங்காரு மில்லை
துனியார் பிறவி தொலைத்துக்—கனிவாரும்
உள்ளத் துறவா பெயர்தவித்துச் சின்மயனே
கள்ளத் தவனையுற்றுச் கா.

(கு—ரை) இனியார் = இன்பந்தருவார், துனி = முத்துக்கம், கனிவு = இரக்கம், கள்ளத்தவன் = வஞ்சகன், உற்று = அடைந்து, சின்மயனே கள்ளத்தவனையுற்றுப் பிறவிதொலைத்துக் காஎனக் கூட்டுக. கா = காத்தருள்வாய், முன்னிலைவினை.

(61) கானலைநீ ரன்றெனவே காட்டியுங்கா ணொருவன்
ஈனமிலா நன்னீரென் றேமாப்பன்—ஊனமுறு
பொய்யுலக வாழ்வதனைப் பொய்யென்ருய் சின்மயனே
மெய்யெனவே யெண்ணிமகிழ் வேன்,

(கு—ரை) ஏமாப்பன் = ஏமாற்றமடைவான், ஊனம் = இழிவு, மகிழ்வேன் என்பது ஈண்டு மகிழ்கின்றேன் என்னும் பொருட்டு.

(62) வேண்டும் வரமளிக்கும் வித்தகனுஞ் சின்மயனை
மாண்ட துறவருளும் வண்மையினை—ஈண்டுபுகழ்
கொண்டுநிகழ் ஞானக் குருபரனைக் கூடற்கண்
கண்டுநிதம் கூம்புவன் கை.

(கு—ரை) வண்மையன் = கொடையாளி, ஈண்டுபுகழ் = தானேவந்தடைந்தபுகழ் "ஈண்டிய புகழின்பாலார்" என்பது பெரியபுராணம், புகழ்கொண்டுநிகழ் = புகழால் விளங்குகின்ற, கொண்டென்பது மூன்ரும் வேற்றுமைச் சொல்லுருபு. கூடல் = மதுரை, என்கைகூம்புக = அடியேனது கைகள் குவிந்து வணங்கக் கடவன.

(63) கையுடனே வாக்குங் கருத்தும் நினக்கடிமை
செய்யுந் திருவெனக்குச் சேர்த்தருளி—மையமரும்
நெஞ்சதனை நீக்கி நிகழ்மதுரைச் சின்மயநின்
கஞ்சக் கழலதனைக் காட்டு.

(கு—ரை) கருத்து = மனம், திரு = செல்வம், மை = காமவெகுளி மயக்கமாகிய முக்குற்றங்கள். கஞ்சக்கழல் = திருவடித்தாமரை, காட்டு = கொடுத்தருள்வாயாக.

(64) காட்டி யுலகனைத்துங் காத்தழிக்கும் காரணனே
வீட்டி லுறைவோனே வேதியனே பாட்டுக்
கலையனைத்துங் கற்றறேன் கதிர்ஞானச் சின்மயநின்
கஞ்சக் கழலதனைக் காட்டு.

(கு-ரை) காட்டி = படைத்து. வேதியன் = வேதமுணர்ந்தான் எவன் என்னும் அஃறிணை இருபாலுக்கும் பொதுவாகிய வினுப்பெயர். என்னென்றால் ஈண்டு யாது பயன் என்னும் பொருள் குறித்து நின்றது. கதிர் = ஒளி. நிலை = துறவுமார்க்கம்.

(65) நிதந்திருவார் நின்றருள் நினைந்துபணி வாரைப்
பதந்தனிலே வைக்கும் பரமர — கதங்காமஞ்
செற்றுத் தனையுணருஞ் சின்மயனே சென்றமொடு
பற்றுத் தனையறுப்பாய் பார்த்து.

(கு-ரை) பதம் = வீடுபேறு. கதங்காமம் = இராகத்துவேஷம். செற்று = அழித்து. பற்றுத்தனை வென்றவிடத்துத் தன்சாரியை. பார்த்தல் = கண்ணோடுதல், பார்த்து அறுப்பாய் எனக் கூட்டுக. அவன் விழிப்பார்வை பிறவியறுத்தலின் பார்த்துப் பற்றறுப்பாய் எனக் கூட்டுக.

(66) பாம்பாகத் தோன்றும் பழுதை விளங்கவும்ப்
பாம்பை பழுதையெனப் பார்ப்பதுபோல்—கூம்பாத
அண்ட மனைத்து மதுவென்றுய் சின்மயனே
கண்டு மனந்தெளிந்தேன் காண்.

(கு-ரை) பழுதையென = கயிறுக. பாம்பைப் பழுதையாகப் பார்ப்பதுபோல் மித்தையாப் பிரபஞ்சத்தைப் பிரம்மமாகப் பார்த்தல். பாதசமானுதிகரண்ய சம்பந்தத்தால் என்க. அது = தத்பதலட்சியார்த்தமாகிய பிரம்மம். காண்முன்னிலையசை.

(67) காணுமைம் பூதத்தின் காரியங்க ளத்தனையும்
மாணு மிருசுடரும் மன்னுயிரும்—சேணவிரும்
தேவ ரொடுமூவர் சின்மயனே யெல்லாமும்
ஆவை யெனவறிந்தே ஞன்.

(கு-ரை) அட்டமங்கள வடிவனெனக் கூறியவாறு. மாணும் = பெருமையுற்ற. இருசுடர் = சந்திர சூரியர். சேண் = மேலுலகம். எல்லாமும் என்றவிடத்தும்மை எஞ்சாமைப் பொருட்டு. ஆள் = ஆட்கொண்டருள்வாய்.

(68) ஆனந்த மாகடலே யாரா வமுதுருவே
மோனந்த வாயோக மூர்த்தியே—தேனுந்து
காஞ்சமலர் வாவிக் கவின்மதுரைச் சின்மயனே
வஞ்ச னெனக்கருளு வாய்.

(கு-ரை) ஆராவமுது = உண்ணுவமுது. அமதுரு = அமுது வடிவம். மோனம் = மவுனம். தவா = நீங்காத. உந்து = துளிர்க்கின்ற.

(69) வாழ்விக்க வெண்ணுவனே வன்பிறப்பா மாழியினில்
ஆழ்விக்க வெண்ணுவனே வாரறிவார்—தாழ்விக்கும்
பற்று மறுத்துப் பவமறுத்த சின்மயனும்
குற்றமறுத் தாள்வான் குறிப்பு.

(கு-ரை) ஆழ்விக்க = மூழ்தம்படி செய்ய. குறிப்பு ஆர் அறிவார் என்க. வன்பிறப்பு = கொடிய பிறப்பு.

(70) குறியாரும் நின்னைக் குறித்தாரும் நல்ல
நெறியாரும் மற்றவரும் நேர்ந்தால்—வெறியாரும்
கஞ்சத் திருவடியைக் காட்டியருள் சின்மயவென்
நெஞ்சத் திருந்தருள்வாய் நீ.

(கு-ரை) குறியார் = நினையார். குறித்தார் = நினைந்தார். நல்லநெறி = சன்மார்க்கம். மற்றவர் = துன்மார்க்கர். வெறி = மணம். நேர்ந்தால் = எதிர்ப்பட்டால். காட்டுதல் = தீக்கை செய்தல். அதனால் குறியாரும் மற்றவரும் மேன் மையுறுவர்.

(71) நீயதுவே யென்றுரைத்த நின்மலனே யன்றுதொடு
நீயெனையும் நானுனையும் நேர்ந்தனமால்—தீயணைய
உள்ளம் படைத்தவென துண்ணிகழுஞ் சின்மயனே
கள்ளம் தவிர்த்தெனையுங் கா.

(கு-ரை) அது நீயே என மாற்றுக. தத்துவமசி மகாவாக்கியம். நேர்ந்தனம், ஒத்தேம். "நீ யெனையும் நானுனையும் நேர்ந்தனம் என்பதுஓதப்புரோத பாவமெனவறிக ஆல் அசை. உள்நிகழுதல் அந்தர்யாமித்துவம், கள்ளம் = வஞ்சகம். தத்துவமசி வாக்கியத்தான் ஒன்றுபடுத்தித் தன்மயனுதியதன்மை. உண்ணிகழ்தல் = தயிலதாரைபோல அவன் நினைவாதல்.

(72) காலை மடக்கிக் கருத்தொருக்கி வன்பிறவி
வேலை கடக்கும் விதியறியேன்—மாலைத்
தெறவறியேன் தென்மதுரைச் சின்மயனே நின்னை
உறவறியேன் உய்வறிவே னோ

(கு-ரை) கால் = பிராணன். கருத்து ஒறுக்கி = மனதை யடக்கி. வேலை - கடல். விதி = சாதனங்கள். மால் = மயக்கம். அஞ்ஞானம். தெற = அழிக்க. உய்வு = பிழைப்பு. பிறவிக்

கடலைக் கடக்கும் மார்க்கம். ஒகாரம் எதிர்மறைப் பொருளது கருத்து ஒடுங்குவதற்குக் காலைமடக்குதல் காரணமெனவுணர்க. மடக்குதல் = இயற்கையாகச் செல்லுமாறு விடாது தடுத்தல் பிராணுயாமம்.

(73) நோற்கும் வகையறியேன் நோற்ருர்முன் சென்றுபணி
ஏற்கும் திறமறியேன் என்செய்வேன்—தோற்பைச்
சடம்போற்ருச் சின்மயநின் ருளதனைப் போற்ற
இடம்போந்தேன் எற்கருள்வா யின்று.

(கு-ரை) நின் என்பதை இடத்திற்குங் கூட்டுக. நோற்கும் வகை = தவஇலக்கணம். பணியேற்றல் = குற்றேவல் செய்தல். திறம் = முறைமை. என்செய்வேன் என்றது = உய்யும்வழி இன்மைக்கிரங்கியவாறு. பைச்சடம் = பையாகிய உடல். போந்தேன் = வந்தேன்.

(74) இன்றிருந்தார் நாளை யிருப்பாரென் றெண்ணிமகிழ்
வொன்றி யிருக்கு முலுத்தனெனை—என்றும்
சுகமடையுஞ் சின்மயனே துன்பகல நின்ருள்
அகமடையு மாறுநினை வாய்.

(கு-ரை) மகிழ்வு = களிப்பு. உலுத்தன் = பேராசையாளன். தாள்அகம் = திருவடியிடம். அகம் ஏழனுருபு இடப்பொருளது.

(75) வாரார் தனமுடை யார் வஞ்சகப்புன் நெஞ்சுடையார்
ஏரார்வேற் கண்ணுடைய வேழையரை—நேராராய்க்
கண்டுதுற வுற்றுக் கடுந்தவஞ்செய் சின்மயநிற்
கண்டுதொழும் பேறளித்துக் கா.

(கு-ரை) வார் = கச்சு. ஆடவரை வயப்படுத்த தனமும், கண்ணுமே வமைபுமாகலின் அவையே ஈண்டுக் கூறப்பெற்றன. ஏழையார், தாமே யூகித்தறியும் அறிவின்மையர் கேட்ட

தாய் என்னும் பொய்யாமொழி இதனை வலியுறுத்தும். நோரார் = பகைவர்.

(76) காலன் வருமளவுங் காரிகையார் சண்மயக்குற்
றாலக் கொடுவேலிற் காளானேன்—கோலமுறு
நின்றாள் வழுத்துகிலேன் நீதியிலேன் சின்மயனே
ஒன்றான வீடருள்வா யோ.

(கு-ரை) காரிகையார் = செயற்கையழகுடையார். ஆலம் = விடம். ஆலம், கொடுமையாகியவிரண்டையும்கண்ணிற்கும் அடையாக்குக. காலன் என முன்னர் வந்தமையான் வேல் அவனது ஆயிற்று. நீதி = சன்மார்க்கம். ஒன்றான = அத்துவிதமாகிய. இரண்டின்றிய வென்றவாறு. ஓகாரம் வினாப்பொருளது.

(77) ஓதாக் கலையேன் உனைவழுத்தா வாயடையேன்
தீதாங் குணத்தாற் றிகழ்ந்திடுவேன் சூதாருங்
குற்றத் திருக்குறுவேற் குன்கழலைச் சின்மயனே
பற்றத் தருவாய்நீ பார்த்து.

(கு-ரை) ஓதாக்கலையேன் = கலைகல்லாதவன். சூது = வஞ்சகம். திருக்கு = மாறுபாடு. பற்ற = அடைய. பார்த்து = கடைக்கணித்து.

(78) பாரக் கலைபலவும் பார்த்தவரும் பார்முழுதும்
நேரவர சாளும் நிருபர்களும்—திரமுடன்
பற்றறுத்த நின்னைப் பணிந்தலவோ சின்மயனே
வற்றலிலா வாழ்வுபெறு வார்.

(கு-ரை) முன்னிரண்டடிகளும் இருசெல்வத்தினும் மிக்கவரையுணர்த்தின. பாரம் = மிகுதி. நேர = நீதியோடு. வற்றல் இலாவாழ்வு = அழிவின்றிய பேரின்ப வாழ்வு.

(79) வாழும் விருப்புடைய வன்னெஞ்சே நற்றவத்தோர்
தாழுந் திருவடியான் தண்ணளியான்—சூழ்ந்திடும்
பந்த மறுத்த பரஞானச் சின்மயனற்
சந்தத் திருக்கழலைச் சார்.

(கு-ரை) இகபரபோகங்களை அனுபவித்து வாழவேண்டுமென்னும் விருப்புடைமையால் வன்னெஞ்சமாயிற்று. அவ்விருப்பத்தைவிட்டுக் கழலைச்சாரவேண்டியவாறு. சூழ்ந்திடும் = விடாதுபற்றும். சந்தம் = அழகு

(80) சார்பிரண்டு மற்றுத் தளையற்றுத் தானற்றுச்
சேர்பிறப்பு மற்றுச் செயலற்றே—ஏர்பிறங்கும்
ஞானத் திருவுருவாம் நற்றவத்துச் சின்மயனை
வானத்தவர் வணங்கு வார்

(கு-ரை) சார்பு இரண்டு = உயிர்ச்சார்பு. பொருட்சார்வு. தளை = பந்தம். தான் = அகங்காரம். செயலறுதல் = கிருதகிருத்தியத்தன்மை, ஏர்பிறங்கும் = அழகு விளங்கும். வானத்தவரும் என்றவிடத்தும்மை தொக்கது.

(81) வார்கலிவெண் பாவகவல் வஞ்சியினப் பாடல்களைச்
சீர்பெறுநின் சேவடிக்கே செப்பாமல்—நார்பயிலாப்
புன்மனத்துப் புல்லர்களைப் போற்றுறுனே சின்மயனே
நன்மனத்து நன்னறிவில் நான்.

(கு-ரை) வார் = நீண்ட மிக்க. கலி = கலிப்பா. இனம் = தாழிசை. துறை = விருத்தம் எனவே பாவும் பாவினங்களும் என்பதாயிற்று. சேவடிக்கே = ஏகாரம் பிரிநிலை. நார்பயிலா = அன்பில்லா. நன்மனத்து = நல்ல மனத்தோடு. இல்நான் = இல்லாத நான்.

(82) நானே பிரமமெனும் ஞானமுற நீயதுவே
ஆனு யெனவருளு மந்தணனை—ஊனேயான்
ஒன்றுணரும் வன்னெஞ்சே யேணருளார் சின்மயனைத்
துன்றி யவனருளிற் றோய்.

(கு-ரை) உறவென்னும் செயவெனெச்சம் காரியப் பொருட்டு. அந்தணன் = துறவி. ஏண் அருள் ஆர் = பெருமையும், கருணையுமுடைய. துன்றி = சரணுகதியடைந்து. தோய் = மூழ்குவாய்.

(83) தோய்ந்தனை நீ நெஞ்சே துயர்தருமா சைக்கடலில்
ஆய்ந்தகலை யில்லா தலைந்தனையால்—ஏய்ந்த புகழ்
சித்திதருஞ் சின்மயனைத் தென்மதுரை விண்மயனை
முத்திதரும் நின்மயனை யோது.

(கு-ரை) நெஞ்சே, நீ கடலிற்றோய்ந்தனை எனக்கூட்டுக. ஏய்ந்த = பொருந்திய. சித்தி = நினைந்தவை கைவரப்பெறுதல், விண்மயன் = சிதாகாசன். நின்மயன் = பிரத்யக் ஆன்மாவடிவன். முத்தி = அனர்த்த நிவர்த்தி ஆனந்தப் பிராப்தி வடிவ மோட்சம்.

(84) ஓதுகலை யத்தனையு முள்ளத் துணர்ந்தானைத்
தீதுபயில் ஆசையெலாந் தீர்ந்தானை—மாதுயரம்
காணு திகழ்ந்தவனைக் கண்மணியைச் சின்மயனை
நாணுளு மோதிடுவே னுன்.

(கு-ரை) மாதுயரம் = பிறவித்துன்பம். இகந்தவன் = நீங்கியவன். நாள்நாளும்/நாடோறும், தீது/துன்பம். கண்மணி யானது நன்று இது தீது இது என்ற விதித்தல்போல இவனும் பந்தம் இத்தகையது. வீடு இத்தகையது என அறிவித்தலின் அதுவாக உருவகிக்கப்பட்டான்.

(85) நானு ரெனக்குற்ற நாசமுறும் பந்தமெது
தானுகும் வீடேது சாற்றுகென— ஆனுத
நீயன்றி யாவுமிலை யென்றருளுஞ் சின்மயனே
நீயென்ற சொற்பொருளே நீ.

(கு—ரை) எது = எத்தகையது, ஏது = எத்தகையது, சாற்றுகஎன = சாற்றுகென அகரந்தொகுத்தல், ஆனுத = அழியாத, தானுகும் = பிரம்மசொரூபமாகும். நீயென்ற சொற்பொருளே நீ என்றது கூடஸ்தனே பிரம்மம் என்றவாறு.

(86) நீயுமொரு நானும் நினைந்துணரின் ஒன்றெனவே
ஆயுமறை நான்கு மறைந்தனவால்—நோயுலகர்
உற்றதனை நோக்கா துழன்றிடுவர் சின்மயனே
கற்றதனைப் பேதமுறக் கற்று.

(கு—ரை) மறைநான்கு = நான்கு மகரவாக்கியங்கள், 1. தத்துவமசி 2. அகம்பிரம்மாஸ்மி 3. அயமாத்மாபிரமாமம் 4. பிரஞ்ஞானம்பிரம்மம் இவற்றின் பொருள் கேட்டுணர்க. பேதத்தோற்றத்தால் துன்புறுகின்றனராகலின் நோயுலகர் எனப்பட்டனர், கற்றதனை என்றதனுல் பேதப்பிரதிபாதக தர்க்காதி நூல்கள் சிலவென்று பெற்றும். உற்றதனை = பரமார்த்தமாயுள்ள தன் வடிவத்தினை கற்று உழன்றிடுவர் எனக்கூட்டுக.

(87) கற்றவரும் மற்றவருங் காதலித்துப் போற்றுமொரு
செற்றமிலா நற்றவத்துச் செம்பொருளே—பெற்றமுடன்
ஆறு தலையிகந்த வாறுமுகச் சின்மயனே
ஆறுதலை எற்குதவி யாள்.

(கு—ரை) மற்றவர் = கல்லார், ஒரு = ஒப்பற்ற, பெற்றம் = இடபம், ஆறு = கங்கை, தலைஇகந்த = தலையினின்றும் நீங்கிய, ஆறுமுகம் = ஐந்து முகத்தோடு அதோமுகம், ஆறுதல்—சித்தவிசிராந்திஅடைதல். எற்கு—அடியேனுக்கு ஆள்—

ஆள்வாய். ஆறுமுகம்=சித்தவிசிராந்தியை வெளிக்காட்டு முகம் எனவுமாம்.

(88) ஆளாக வந்த வடிவேன் பவமறுத்து
மாளாத வல்வினையை மாய்த்தவனே—வாளாரும்
மெய்ப்பொருளுஞ் சொற்பொருளு மெய்ப்பொருளுஞ்
கைப்பொருளு மானாய்நீ காண். [சின்மயனே

(கு—ரை) வாள் = ஒளி ஞானம், மெய்ப்பொருள்= பிரம்மம், சொற்பொருள்=சொல்லும் பொருளும், கைப்பொருள் =கல்வி.

(89) காணாதார் விள்ளுவரே கண்டார்விள் ளாதவரே
ஏணருஞ் செம்பொருளை யென்றருளும்—மாணரும்
சின்மயனே யோகச் சிவமயனே யுண்மயனே
என்மயனே யெற்கருள்வா யின்று.

(கு—ரை) காணாதார் = பிரம்மமே கூடஸ்தன் என அறியாதவர், விள்ளுவர்=பேதத்தோற்றமுடையாராவர், ஏண் =பெருமை, மாண்=மாட்சி, யோகச்சிவம்=தென்முகச்சிவம், உள்மயன்=சத்ருபன், என்மயன்=கூடஸ்தன்.

(90) இன்போ வணுவாம் இடரோ வளவில்லை
புன்போகம் வேண்டி நிதம் புண்ணானாய்—அன்போடு
தெள்ளமுத மாகுமொரு சின்மயனின் றண்மையருள்
வெள்ளமுற நெஞ்சே விரும்பு.

(கு—ரை) புண் ஆனாய் = மிகத்துன்புற்றாய், தண்மை = குளிர்ந்த, அருள்வெள்ளம் = கருணைப்பெருக்கு, உற = அடையுமாறு.

(91) விரும்பு மடியார் வினையகற்றி நான்காய்
வரும்பிறவி மாற்றுமருள் வள்ளல்—கரும்பொடுநெற்
கந்திப் பலாவரம்பைக் காமதுரை சின்மயனைச்
சிந்திப்பார் சென்றடைவர் சீர்.

(கு—ரை) பிறவிநான்கு=சராயுஜம், அண்டஜம், சுவேதஜம், உத்பிஜம். கந்தி=கமுகு, அரம்பை=வாழை, கா / சோலை, சீர் / வீடுபேறு, சீர் சென்றடைவர் எனக்கூட்டுக.

(92) சீதந் தருஞ்சோலைத் தென்மதுரைச் சின்மயனைக்
காதந் தனில் நின்று கைதொழினும்—ஏதமிலா
நின்னுருவை நீயறிய நெஞ்சே யறிவித்துத்
தன்னுருவுந் தந்திடுவன் றுள்.

(கு—ரை சீதம் = குளிர்ச்சி, காதம் = நான்கு கூப்பீடு கொண்டதூரம், ஏதம் / அஞ்ஞானம், அஞ்ஞானத்தற்காரியங்கள், அறிய / சீவசாட்சியாக அறியும்வண்ணம், தன் உரு / ஈசுரசாட்சி, உண்மையான பிரமசொருபத்தை உனக்கு அருள்வன் என்பதாம்.

(93) தானமுடன் நற்றவத்தைத் தாங்கு மறமிரண்டும்
வானப் பிரஸ்தமுடன் வான்றுறவும்—ஆனவற்றில்
ஒன்றுமுடை யேனல்லேன் ஒண்டவத்துச் சின்மயனே
இன்றருள்வாய் நின்றுள் எனக்கு.

(கு—ரை) தானத்தை இல்லறத்திற்கும், தவத்தைத் துறவறத்த்திற்கும் கொள்க. வான்துறவு / முற்றத்துறத்தல் சிறந்த துறவெனினுமாம்.

(94) என்னுடைமை யானுடலம் என்னும் மயக்கறுத்துத்
தன்னுடைமை தானென் றறிவித்த—துன்னுபுகழ்
முத்தமிழும் போற்றும் மதுமதுரைச் சின்மயனே
பத்தியுற நின்கடைக்கண் பார்.

(கு—ரை) என்னுடைமை / மமகாரம், யானுடலம் / அகங்காரம், தான் / சீவசாட்சி, போற்றும் / வளர்த்த, நின் பத்தியுற எனவுங்கூட்டுக. மயக்கு / விபரீதவுணர்வு.

(95) பாரைத் துறந்த பட்டிணத்தார் நற்றுறவின்
ஏரை யெனக்கருள்வா யெம்பெரும—நாரைமுனுள்
வீடுற்ற ஞான வியன்மதுரைச் சின்மயனே
பாடுற்றேன் நின்ருள் பரிந்து.

(கு—ரை) நற்றுறவு = முற்றத்துறவு, ஏர் = அழகு, நாரை வீடுற்ற வரலாற்றைத் திருவிளையாடற்புராணத்துட் காண்க, பாடுற்றேன் = பாடினேன், பரிந்து = விரும்பி, எம் பெரும சின்மயனே நின்ருள் பரிந்து பாடுற்றேன் அருள்வாய் எனக் கூட்டுக.

(96) பரிந்துவரு மன்பர் பவமகற்றிப் பாவம்
இரிந்துபுறம் போக வியற்றும்—விரிந்தவுளம்
பெற்ற பெருந்தவனே பேர்மதுரைச் சின்மயனே
முற்றத் துறவருள்வான் முன்.

(கு-ரை) பரிந்து = பிறவிப்பிணிக்கு வருந்தி. பவம் = பிறவி. இரிந்து = நீங்கி. விரிந்த உளம் = மைத்திரியாதி குணங் களாற் பண்பட்ட சிந்தை. பேர் = பெருமை. முன் = கருதுவாய். பாவம் = பண்டைவினை.

(97) முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும்
பொன்னேபோற் போற்றும் புலனில்லேன்—என்னேயான்
உண்டுடுக்கும் வாழ்வை யுவந்துழன்றேன் சின்மயநின்
தண்டுலங்கும் தாள்மரையைத் தா.

(கு-ரை) மொழிபொருளே என்பது இணைமோனை. புலன் = அறிவு. என்னே என்பது தன் அறியாமைக்கு இரங் கியவாறு. தண்துலங்கும் = குளிர்ச்சி விளங்கும். தா = ஈந்தருள் வாயாக.

(98) தாதுதிருஞ் சோலைத் தமிழ்மதுரைச் சின்மயனே
மாதுயரை நீக்கியருள் மாதவனே—போதுகொடு
நின்ருள் வழுத்தி நினதடியார் தாடொழுதேன்
பொன்ரு நிலையருள்வாய் போந்து.

(கு-ரை) தாது = மகரந்தம். மாதுயர் = பிறவித்துன்பம். போது = மலர், பொன்றுநிலை = அழிவில்வீடு. போந்து = வந்து.

(99) போந்த பொருளனைத்தும் பொன்றுப் பொருளென்றே
சாந்தவுளச் சின்மயனே சாற்றினையால்— காந்துமனக்
கல்லே னதைச்சிறிதுங் காணும் திறனில்லேன்
பொல்லேன் பிழைபொறுப்பா யோ.

(கு-ரை) போந்தபொருள் = தோற்றுமாத்திரமாகிய பிரபஞ்சம்.

பொன்றுப்பொருள் = பிரம்மன் ஆல்அசை.

"எண்டு நாநாவென்பவை சிறிதுமில்லை" "ஏதனைத்தும்பிரமமன்றோ" என்னுஞ் சுருதி வாக்கியங்கள் ஈண்டுணரற்பாலன. காந்துமனக்கல்லேன் = பொறுமை முதலிய துர்க்குணங்கள் படைத்த கல்நெஞ்சம் உடையோன். ஓகாரம் வினா.

(100) ஓதுங் கலையறியேன் உன்றனடித் தொண்டறியேன்
மோதும் பவக்கடலில் மூழ்கிடுவேன் — காதும்
வினைக்கவலை மாற்றவரும் சின்மய விண்ணோரும்
நினைக்கவருள் வாய்நின்றன் நீர்.

(கு—ரை) சின்மயனே நின்றன்நீர் நினைக்க அருள் வாய் எனக் கூட்டுக. ஓதுங்கலை = ஞானநூல்கள், மோதும் = தாபத்திரயத்துக்கங்களாகிய அலைகள் மோதுகின்ற, காதும் = துன்புறுத்தும், விண் = இந்திராதிதேவர்கள், ஆகுபெயர், நீர் = நீர்மை. துறவறத்திருநெறிக்குரியகுணஞ்செயல்கள், ஆதியில் நீர் எனத்தொடங்கி அந்தத்திலும் நீர் என்று முடித்த வாறு கண்டுகொள்க.

மதுரைச் சின்மயானந்தர் வெண்பாவந்தாதி மூலமும் குறிப்புரையும் முற்றிற்று.

ஸ்ரீ சற்குரு மூர்த்தி திருவடி வாழ்க.

உ

பதிகம்

நேர்கொண்ட கல்வியும் நிலையான செல்வமும்
நிகழ்ந்திடக் கலை வளர்க்கும்
நீர்மையுறு நாடத னுள்ளும் நன்றெடென
நிலவிடும் தென்னன் நாட்டில்
ஏர்கொண்ட புலவர்கள் பலர்கூடி யாய்ந்திவண்
இயல்போ டினி தமைத்தே
ஏற்றமுறு சங்கமது நிறுவிய கூடற்கண்
ணியல்பா யமைந்த உரவோன்
கார்கொண்ட செயலெனக் கைம்மாறு பேணுத
கடனறி மாந்த ரென்னக்
கற்றநல் மெய்ஞ்ஞானக் கலைகள் அனைத்தினையும்
கவினுறு சீடர்க் கெனச்
சீர்பெற அருளிநற் சிதாகாச மென்னவே
திசழ்ந்திடு நிலையதன்கண்
திசழ்பிரம வானந்த மடமது விளங்கவரு
சின்மயா னந்த குருவே (1)

கங்கைமுத லனதீர்த்தம் கணக்கற்ற வாடியும்
கருணையே, யுடையவர், போல்
கருதரிய செல்வங்கள் பலவீந்தும் நாளுமே
கணக்கிலா வறங்கள் செய்தும்
துங்கமிகு சன்மார்கக நெறியோ டமைந்துமே
துகளறு நூல்கள் கற்றும்
துன்னுநெறி யறியாது பன்னெறி மயங்கியே
தொலையாத துன்ப முற்றும்
பங்கமில் குருதேடி எய்த்தலைந் தோடியே
பரதவித் திடு மவர்க்குப்
பாசமது நீக்கியே பரமான முத்தியது
பாலித்திடு வண்ண மாய்த்

திங்களணி வேணிக் கடவுளே வந்திங்கு
சிற்கழல் காட்டிற் றெனத்
திகழ்பிரம வானந்த மடமது விளங்கவரு
சின்மயா னந்த் குருவே. (2)

அளவிலாக் கலைகற்று மருமறைக ளோடா
றங்கங்க ளனைத் தறிந்தும்
அருளதனை மேற்கொண்டே யற்றவர்க்குப் பொருளை
அள்ளிக் கொடுத் துதவியும்
கள்விலா தவர்போல மனமா சகற்றியும்
கற்றவரைப் போல் நடித்தும்
சுடிந்துமன மடிக்கியும் உண்மைநிலை தனைக்காண
கணக்கற்ற மார்க்கஞ் சென்றும்
பிளவிலா தவர்போலப் பேதங்கள் மாற்றியும்
பித்தரைப் போல் நடித்தும்
பெண்மையு மாண்மையு மொன்றெனப் பேசியும்
பேசாத நிலை யடைந்தும்
தெளிவிலா தவர்நெஞ்சில் உறையுமோ உண்மைநிலை
சித்தாந்த முத்தி முதலே
திகழ்பிரம வானந்த மடமது விளங்கவரு
சின்மயா னந்த குருவே. (3)

அல்லும் பகலுமா யாசா மயக்குற்றே
அளற்றி லாழ் ஈபினைப்போல்
அழுந்திக் கிடந்து மனநொந்து மதுபோக்காத்
தசடர்க்கும் வாழ் வளித்துக்
கல்லுங் கனியாக்கும் கவின் மந்திரமான
கழலிணைகள் தந்து காட்டிக்
காதகலச் சீர்மையுறக் கணிக்கப்படா வின்பக்
கடலிலே யவர் முழ்கிட
நெல்லும் உமியும்போல் நேதித்து வுண்மைதனை
நிமலமாய் நேர் காட்டிடும்

நிமலகுருவே ஞாந பரமகுருவே யாங்கள்
நீங்கிடாப் பவ நெறிக்குச்
செல்லும் நெறிமாற்றியே நன்னெறிக் குய்த்திடும்
திட்பமுறு ஞான குருவே
திகழ்பிரம வானந்த மடமது விளங்கவரு
சின்மயா னந்த குருவே. (4)

காருற்ற வாணவக் கருவறையில் அறிவற்ற
கண்ணிலாக் குழவியைப் போல்
கட்டுண் டிருந்துமே வீரைந்து திங்களும்
கழிந்தபின் இவ் வுலகிலே
பேருற்ற குழவியாய்ப் பிறந்திளைத் தெய்த்துமே
பேசிடும் பருவம் வரலும்
பெருமைமிகு தந்தைதாய் போற்றிட வளர்ந்துநற்
பேராண்மை பெற்ற வயதில்
காருற்ற குழலியர் மயலா லுழன்றுமே
கருதுமோர் நெறி யகன்று
காணரிய மெய்ஞ்ஞான மார்க்கத்தை விட்டவக்
காட்டி லுழல் பவர்க்குச்
சீருற்ற குருவாகிச் சேவடித் திறம்காட்டிச்
சேர்முத்தி வாழ் வளிக்கும்
திகழ்பிரம வானந்த மடமது விளங்கவரு
சின்மயா னந்த குருவே (5)

கற்பன வெலாம்கற்றுக் கதைகள்பல பேசியே
காசினியில் மாந்தர் போற்றக்
கருதரிய சொற்பெருக் காற்றியே வாழ்வுக்குக்
கனதனங்கள் பல வீட்டியே
சொற்பன மதாகவிவ் வுலகினை நோக்காது
சோற்றுத் துருத்தி யிதையே
சொந்தம தாவெண்ணி மனைமாடு வீடெனச்
சொல்லியே நேயம் காட்டி

நற்பயன் எதுவென நாடாது வாழ்வினை
நாளுமவ மாய்க் கழித்தும்
நன்னெறி யலாதுகீழ்ப் புன்னெறி தனைச்சார்ந்து
நலிவுறு மவர்க்கு வாழ்வாம்
சிற்பய னதுகாட்டிச் சேதித்து முத்தி நெறி
சேர்ந்திடக் கழல் காட்டியே
திகழ்பிரம வானந்த மடமது விளங்கவரு
சின்மயா னந்த குருவே (6)

சீதமதி போலுமுகம் சேலுறழுங் கண்களெனச்
செம்பவள வாய தென்னச்
சிற்றிடை யதுநல்ல துடியெனப் போற்றியே
சேயிழையர் பால னைந்து
காதலது கொண்டவர் கண்வலையிற் பட்டுநற்
கதியறியா வகை மூழ்கியே
கணக்கற்ற காலங்கள் கயவர்தம் மோடினிது
கலந்துரை யாடி யின்பம்
ஆதலது உலகிலென அவணியைப் பேணியே
அவமாம் பவத்தை நம்பி
ஆசைக் கடற்குளே அழுந்திநல் முத்திநெறி
ஆரறிந் தாரென் னவே
சேதித் துழன்றிடும் வன்கண் ணவர்க்குமருள்
சித்தாந்த முத்தி முதலே
திகழ்பிரம வானந்த மடமது விளங்கவரு
சின்மயா னந்த குருவே. (7)

பாரது போற்றிடப் பவமதை விழித்திடப்
பக்குவ வான்மாக் கடம்
பரிபாம் போக்கிட நிலையான வாழ்வதைப்
பாலித் திடவெண் ணியே
காரது நீர்கொண்டு கடனதாற் றியதென்னக்
கைம்மாறு கருதா மலே

கருதரிய மெய்ஞ்ஞான கழல்காட்டி யென்றுமே
காண்பதற் கெளிவந் தவா
நாரதே அன்பாக நற்றமிழ்ச் சொற்களாம்
நறும்பூக் களைக்கொண்டு நான்
நவின்றிடத் திருவுளம் கொண்டின்று வென்னையும்
நற்கதியி லுய்வித் தவா
சீரது பெற்றிடப் புவிதனில் வந்தவா
சித்தாந்த முத்தி முதலே
திகழ்பிரம வானந்த மடமது விளங்கவரு
சின்மயா னந்த குருவே. (8)

பவமதை யறுத்திட நவமதைக் காட்டிடப்
பஞ்சகோ சத்தகை யதைப்
பஞ்சர மெனக்கொண்டு நேதியது செய்துமே
பார்க்கின்ற வொன் றுண்டெனத்
தவமதைச் சிறிதேனு மென்னுத நாயேற்கும்
தனித்தனி பிரித் தோதியே
சாற்றுமொரு பிரமமது அன்றிவே றில்லைநீ
சான்றகம் பிரமாஸ்மி யாய்
அவமதை நீக்கிட நிரதிசய யானந்தம்
அதைப்பெற்றே யானுப்ந் திட
அருளது கொண்டுதிரு மேனியாய் வந்தென்னை
ஆண்டநற் குருமூர்த் தியே
சிவமதைத் தந்திடச் செங்கழல் காட்டிய
சித்தாந்த முத்தி முதலே
திகழ்பிரம வானந்த மடமது விளங்கவரு
சின்மயா னந்த குருவே. (9)

கண்கண்ட கடவுளே காருண்ய மூர்த்தியே
கருணு கரக் கடவுளே
காதகற்றிட வந்த சற்குருவே யெங்கள்
கண்மணி யொளி விளக்கே

விண்கண்ட தெய்வமே வேதாந்த சிங்கமே
விகிர்தனே ஞான குருவே
வேட்கைக ளனைத்தையும் போக்கிட வந்தவொரு
விந்தைக் கனிச் சுவையே
பண்கண்ட தமிழிசுற் பாடற் குகந்தவொரு
பரமனே சிவ பானுவே
பரமான முத்தியதைத் திரமா யெற்கருளவே
படியதனில் வந்த குருவே
திண்கொண்ட மேருவே சிவஞானச் செம்மலே
சித்தாந்த முத்தி முதலே
திகழ்பிரம வானந்த மடமது விளங்கவரு
சின்மயா னந்த குருவே. (10)

உ

ஆக்கியோன்:

சீனிவாச அய்யங்கார் தமிழ்வித்வான் இராமநாதபுரம்.

தனக்கென வாழா அப்பிறர்க்குரியா லிருந்தரும பூஷணரும் வேதாந்த கேசரியுமாகிய தெய்வத் திருவுரு சின்மயானந்த சுவாமிகள் பொன்னடி வாழ்த்து.

தன்மையா யானந்தந் தாங்கினிது வாழவருள்
சின்மயா னந்தத் திகழ்குருவே நின்முகத்தைக்
கண்டுதெரி சித்துக் கலியகலக் காத்திருக்கும்
தண்டமிழ் நாவலர்க்குத் தா. (1)

நயந்து வருவார்க்கு நல்லருள் செய்து
சயந்தருங் கீர்த்தி தழைக்க—உயர்ந்தருள்
நல்குசின்ம யானந்த நாதகுரு இவ்வுலகுள்
பல்லூழி வாழ்க பரிந்து. (2)

பூமகளும் நாமகளும் போற்று மலைமகளும்
தாமகிழ்ந்து வாழும் தனித்தபுகழ்—மாமதுரை
சீர்த்தி யுறவந்த சின்மயா னந்தகுரு
பார்த்திரங்க வேண்டும் பரிந்து (3)

காத்தியென வந்தோரைக் கண்டு மனமகிழ்ந்து
நாத்தியெனச் சொல்லாது நாடிமிக—ஆத்திதரும்
சின்மயா னந்தனெனும் தேசிகவுன் பொன்னடியைத்
தன்மையுடன் பூணவந்தேன் தா. (4)

வாழியிறை வாழிமறை வாழிதமிழ் வாழியறம்
வாழிமழை வாழிபசு வாழிபுவி—வாழிசிவ
போகந்திளைக்கும் புகழ்ச்சின் மயானந்த
மா குருவும் இங்கு மகிழ்ந்து. (5)

உ

இயற்றியோர்

சௌந்தர பாரதி புதல்வன் அம்பிகாபதி பாரதி

வேம்பத்தூர்

கலித்துறை

சீர்மேவு **கல்வியுஞ் செல்வ** மும்ஞானமும் செம்மைதரு
ஏர்மேவு மீகையுமன்பர்க்கு நாடொறு மீய்ந்திடுமால்
தார்மேவு **மேனி** யொளிரும் பிர்ம்மானந்த சற்குருவின்
தேர்மேவு செந்தாமரை போல்விளங்கிடுஞ் சேவடியே. (1)

பூமேவு மூலகுபுகழ் நான்மறையுஞ் செந்தமிழும்
பொற்பு வாய்ந்த
மாமேவு வேதாந்தமாக்கடலும் தான்தேர்ந்து மகிமையோங்க
நாமேவு சீடருக்குத்தான்செப்பும் மன்னுபிர மானந்தரென்னுந்
தேமேவு தேசிகர்க்கு துவாதசியில் குருபூ
சைசிறப்பாய்ச்செய்து. (2)

வந்துபணி யடியார்க்கு நல்விருந்து கனியுடனே
மகிழ்வாய்ச்செய்து
சிந்தைமகிழ் விற்பனர்க்கு நிதியெல்லாஞ்சீருடனே
செழிப்பரய்ச்செய்த
விந்தை வாசிட்ட மொடுபல்கலைசேர் மேன்மை வாய்ந்த
சந்தமிகு மாமதுரைச் சின்மயானந்தகுரு தரணிவாழி. (3)

வெண்பா

மாமதுரை மேவி மகிழும் பிரமானந்த
சேமக் குருவுந் தினம்வாழி—வாமமிகு
சின்மயா னந்தகுருச் செல்வரோ டன்பரெலாம்
உன்னதமா வாழி யுவந்து. (1)

ஆக்கியோர்

ஸ்ரீ சொரூபானந்த அடிகள் குடியேற்றம்

ஆதிய்றை ஆடல்புரி யாலவா யதனிலே
அறுபத்து நான்கோ டொன் றுய்ச்
சோதியுரு சுந்தரர் சுத்தசத் துவமான
செரல்லு மரசப்ப குரு வாய்
நீதிநெறி தவருத நிமலபிர மானந்த
நித்தனுக் கருள்செய் யவே
ஆதிகுரு சங்கரர் ஆக்குநர மாவளி
யாக்கினு் நூலொன் றுமே. (1)

நன்மைபெறு மடியவர்கள் நாளுந்தவஞ்செய்ய
நலமானமடம் நிறுவியும்
பன்பயமெலாம் விட்டுநின்மய தாயிரென
பகர்யுக் திரத்னுகரம்
சொன்னகுரு பீடத்தில்சோகமற வேதாந்தம்
சொல்லி வருஞானகுருவாம்
சின்மயா னந்தபுகழ் சொல்லுமந்தாதியை
சீர்பெறவழுத்தி வாழ்வாம். (2)

நன்மைபெறு சின்மயானந்தகுரு நாட்டிற்கு
நன்மைதரு செயலெதென்னில்
முன்னமிறை வாக்கென்னுஞ் சிவஞாநபோதமாம்
முதல்நூலுக்குரை எழுதியும்
தன்பரம குருசொன்ன யுக்திரத்ஞகரம்
தானேர்ந்து அச்சிட்டதும்
அன்னவனு மண்டினர்க்குதவியநல் அத்வைத
வமிர்தஉரை சொல்லவெளிதே. (3)

உ

இயற்றியது.

கருப்பக்கிளர் திரு. சு. அ. இராமசாமிப் புலவர் அவர்கள்

மதுரை ஸ்ரீ பிரஹ்மானந்த சுவாமிகள் மடாலயத் தலைவர்
தவத்திரு. சின்மயானந்த சுவாமிகள்மீது இயற்றிய
சின்மயானந்தப் பதிகம்,

நேரிசை வெண்பா

காப்பு

நின்மலனு யிவ்வுலகில் நீண்டபுக ழோடிலங்கும்
சின்மயவா னந்தகுரு தேசிகன்மேல் — நன்மைசேர்
நற்பா ஒருபத்து நன்கமையப் பாடுதற்குப்
பொற்பார் கரிமுகனைப் போற்று.

நூல்

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

சீராரும் மதுரைநகர் தன்னி லோங்கும்
செய்யபிர மானந்த தேசி கேசன்
பேராருந் திருமடத்தின் தலைவ னாகிப்
பெட்புடனே நாளும் பிறங்கி நல்ல

ஏராரும் மறைமுடிவின் பொருள்க டம்மை
இலங்குறுநற் சீடர்களுக் கினிதிற் சாற்றும்
பேராருஞ் சின்மயவா னந்த வாசான்
பிறங்குதிரு வடிகள்தான் பெரிதும் வாழி. (1)

அன்புடனும் அருளுடனும் அடியார்க் கென்றும்
அரியமறைப் பொருள்தனை அறிவித் தாளும்
இன்புடைய சின்மயவா னந்த வாசான
இருகமல அடிபோற்றின் எல்லாப் பண்பும்
தன்புடையாம் ஆதலினல் தரணி மீது
தத்துவமெய்ப் பொருள்பகரத் தலைவன் றனைத்
துன்பகலப் போற்றியென்றும் துலங்கும் நல்ல
தூய்மையுடைக் கதிதனைநாம் துய்த்து வாழ்வாம்.(2)

அரியபரப் பிரமமொன்றே அகில மீதில்
அனைவோருந் தெரிந்துணர்ந்து; அடையத் தக்க
உரியபெரும் பொருளாகும் உண்மை யாக
உள்ளனவா மற்றவெலாம் உண்மை யன்று
பெரியவடி வுடையவிந்த உலக மெல்லாம்
பேசுங்கால் கானலிடைப் பேசும் நீரே
தெரியவுணர் வாயென்று தெரிவித் தாளும்
சின்மயவா னந்தனையே செப்பி வாழ்வாய். (3)

பெரும்பிரஹ்மம் நியாகப் பிறங்கு கின்ருய்
பெருமையுடை மறைமுடிவு மீதே யாகும்
அரும்பிரஹ்மம் தனக்கெந்த வடிவு மில்லை
அறிவேயாம் அறிவாலே அறிந்து கொள்வாய்
வரும்பிறவி வாராமல் மறைந்து போகும்
வருத்தமெலா மூலமுடன் மாளு மென்னும்
அரும்பொருள்சொல் சின்மயவா னந்த வாசான்
அடிக்கமலம் முடிக்கணியாய் ஆக்கு வோமே. (4)

பற்றறுத்தான் இவ்வுலகில் பரஞா னத்தைப்
    பண்புடனே பெற்றுயர்ந்த பரமே யாவன்
முற்றுமிது உண்மையென முன்னோர் சொன்ன
    முதுரைக்கோர் எடுத்துக்காட் டாகி வந்த
செற்றமிலாச் சின்மயவா னந்த வாசான்
    திருவடியை முடிக்கொண்டு செகத்தில் நாளும்
குற்றமிலாப் பேறுதனைக் கூடி யுய்வார்
    குவலயத்தி லேயறிவு கூடி னோரே. (5)

நான்மறைகள் நவிலுகிற நல்ல தான
    நன்மைபெறு நான்குமகா வாக்கி யத்தை
மேன்மைபெறத் தகுதியமை சீடர் கொள்ள
    வித்தகமாய் விளக்கியருள் மேலோ னான
தேன்மொழியான் சின்மயவா னந்த வாசான்
    சீருடையான் பேருடையான் சிறப்பு மிக்க
கான்மலரைப் போற்றிடுவோர் கவின்சேர் வீடு
    கண்டிடற்கோர் ஐயமிலை காண்கு வீரே (6)

சிற்பரத்தின் தன்மையுணர் ஞான வாசான்
    சின்மயவா னந்தனெனுந் தேசி கேசன்
பொற்பதமே கதியெனநீர் புந்திகொண்டு
    போற்றமிகச் சாற்றிவழி படுவீ ராகில்
நற்பதத்தை அப்பதமே நல்கி யுங்கள்
    நடலைவாழ் வனைத்தையுமே நாச மாக்கும்
இற்பதமே கதியென்று எந்த நாளும்
    இல்லத்தி லேயுழலும் ஏழை யீரே. (7)

நன்மயமாய் நல்லோர்கள் நாடிக் கூறும்
    நான்மறையின் முடிப்பொருளை நன்கு நாடித்
தன்மயமே யாகியிந்தத் தரணி மீது
    சாற்றுபிற விக்கடலைத் தாண்டு தற்குச்

சின்மயவா னந்தகுரு தேசி கேசன்
திருவடியாம் புணையதனைத் தெரியக் கொள்வீர்
பன்மயலார் வழிகளிலே பரவி யோடும்
பான்மையுடை உலகீர்நீர் பார்த்துத் தானே. (8)

வீடுபே றடைந்திடற்கு விழையு நீவிர்
விளங்குபல நூலோதி மெலிய வேண்டாம்
பீடுபெறு கதிபெற்றுப் பெருமை யெய்தப்
பிரஞ்ஞானம் எஞ்ஞான்றும் பெரிதும் ஓங்கும்
தேடுபுகழ்ச் சின்மயவா னந்த வாசான்
திருவடியே எலாநலமுஞ் சேர்ப்பித் தாளும்
நாடுபுக ழோடுலகில் நாளும் ஓங்கி
நன்மையெலாம் பெற்றிடற்கு நாடு வீரே. (9)

திருவோங்கும் மதுரைநகர்ப் பிரமா னந்தத்
தேசிகன்றன் றிருமடத்துக் குருவே யான்
உருவோங்கு சின்மயவா னந்த வாசான்
ஓம்வடிவாம் பரமாவன் உண்மை யாவன்
அருவோங்கு பிறப்பொழிப்பான் கழல்கள் வாழி
கண்ணுதலே யாகிநின்முன் கழல்கள் வாழி
தருவோங்கு மவன்கழல்கள் தரணி மீதில்
தழைத்தென்றும் வாழிமிக வாழி மாதோ. (10)

ஓம் தத் சத்

திருப்பூவனம் வேதாந்த மடாலயம் ஸ்தாபகரான
ஸ்ரீலஸ்ரீ காசிகாநந்தஞா நாச்சார்ய ஸ்வாமிகள்
இயற்றியது:

சின்மயானந்த சுவாமிகளின் புகழ்ப் பூமாலைப் பூங்கொத்து

சின்மயா நந்த சிவகுரு நாதன்
செய் தவப்பேற்றினுல் வந் தோன்
பன்மய வுலகோர் பாசம தறுத்துப்
பரகதி அடையவே வந் தோன்

நன்மய முடையோர் கருவறுத் திடவே
நாடொறும் விசாரமா நூலை
கன்மநங் களையக் காலை மாலையினும்
கவினுறப் போதிப் போ னாகி (1)

நன் மனத்தோடு விருத்திதா னடைந்து
நாடு மீனாக்ஷி சொக் கேசன்
பன்மலர்ப் பாதம் பணிபவ னாக
பண்பமர் மதுரை வாழ்பவ னும்
சொன்மயல் விளக்கி கூறுவோன் சொற்கள்
சுவை பெறப் பேசுவோ னாகும்
சின்மயாநந்தன் எனும்பெயர் படைத் தோன்
தேசிக னாகவீற் றிருப் போன் (2)

பன்மநப் பகையை முற்றிலும் விட்டோன்
பகர்தவத் தோர்களை வளர்ப் போன்
கன்மனத் தோரைக் கடியவே வைப்போன்
காரியங் கவனித்து நடப் போன்
நன்மனப் பிரஹ்மா னந்தனும் மடத்தை
நலம்பெறச் செய்துகொண் டிருப் போன்
சொன்வன்மை யுடைய துறவனுஞ் சொல்லுந்
தூயசின்மயா நந்த னும் தவத்தோன் (3)

கன்மநந் தோறும் கரையுமா றருளும்
கவினுறு வாசல்யம் உடை யோன்
நன்மந மாகச் செய்வதி லுயர்ந்த
நாடரும்மந முடை யோனுந்
சொன் மறை முடிவை சுகமுற விளங்கச்
சொல்வதில் சமரசத் துடையோன்
நன்மந முடையோர் சின்மயகுருவின்
நற்பத மடைய நாடுவரே (4)

வன்மனக் குரங்கை வெருட்டவே வந்த
வரமுடை சின்மயா னன் றன்
தன்மநத் தாளைச் சார்ந்தவர் தினமும்
தாவிலாப் பிரமமே தான் ஆய்
சொன்மநங் கடந்த தூயரா யிருந்து
தொலைவிலா மிகுந்தபே ரின் பம்
தன்மயமாக விருந்து தானென் றுந்
தரணியில் வாழ்வர் தாம் மன்றே (5)

புன்மநக் கயவர் கூட்டுற வின்றிப்
போதினைப் போக்கு வோர் கூட்டம்
நன்மைய தாக நாடியே விரைவில்
நாடொ றும் ஆன்மரூ பத்தை
தன்மய மாக அறிவிக்கும் ஆற்றல்
சாலவே சிறந்திடு மத னால்
சின்மயா னந்த னெனப் பெயர்கொடுத்தார்
தேசிகச் செல்வ ருத்த மரே (6)

நின்மனோ கதியை நிறுத்தவே வேண்டி
நீண்ட நாள் முயற்சி தான் செய்த
தன்மைதான் என்னே தாழ்வுடன் விரும்பி
தரணியில் நினை யடைந் தோரை
பொன்மயம் ஆக்கப் பொற்புறச் சேர்ந்து
போற்றுவர் சீடரா னவர் கள்
சின்மயா நந்த குருவி நற் சரணம்
சிறப்புறக் கூறுமா ரெளி தோ (7)

தன்மயந் தன்னைத் தரணியோர்க் குணர்த்துந்
தகவுடைக் கருணைமா கட லோன்
சொன்மய மாகக் கூறமாட் டார்க்கும்
சொன் நயம் பெருமா றருள்வோன்

மன்மதன் தானும் வந்திடா வகையே
வரமிகு சீடருக் குணர்த்தும்
சின்மயா நந்த குருவிநற் சரணம்
சேருவார் மீண்டுமே பிறவார் (8)

கன்மனத் தோர்க்கு நாடரும் பிரம்மம்
கனிவுடன் கூறியே விளக்கும்
தன்மநத் திடையே சகலமும் விளங்கும்
தவமுடைக் குருவதாய் வந்த
சின்மயா நந்த குருவிநற் சரணம்
சேருவா ரடையுநற் பலந்தான்
நன்மயப் பிரமா னந்தநற் குருவை
நாடொறும் பணிந்து வாழ்ந்திடுவாம். (9)

தொன்மநக் குரங்கைத் தொலைக்கவந் தவனும்
தூயனும் சின்மயா னந்தன்
சன்மநன் மார்க்கம் யாருமே சார
தரணிவந் தருள்மிகப் புரிவோன்
சிந்மயா னந்த குரவனும் வேறு
செகத்தினில் இல்லையென் றெண்ணி
என்மனங் குவிய விருப்பதால் யானும்
இன்புற நன்குவாழ்த் தினனே. (10)

இயற்றியவர்
கோவில்பட்டி ஸ்ரீ கோ. மு. விமலானந்த சுவாமிகள்
ஸ்ரீ சின்மயானந்த சுவாமிகளின்மீது பாடிய வெண்பா

காப்பு

அத்தி முகவனை
மத்தன் மதலையை
நித்தந் தொழுபவர்
முத்தி பெறுவரே

வெண்பா

ஞானநூற் பாடமதை நாளும் நடத்தியும்
ஆனபசி யாற்றிமிக ஆதரித்தும் = வானமுதல்
தன்மமாய்ப் பார்த்துச் சகித்துச் சுகித்திருக்குஞ்
சின்மயா னந்தரெனத் தேர், (1)

எண்ணம் அணைத்தினுமோர் ஈசனுண்டு என்னவே
எண்ணுவது இப்போதார் இல்லையென = எண்ணற்க
சின்மயா னந்தனெனுஞ் சீரோனிப் போதுமதை
எண்ணி இருப்பதுண்டு இங்கு. (2)

எண்ணாது எண்ணியே எங்குஞ் சரிக்குமனம்
மண்ணுகப் போகாமல் மாற்றியே = விண்ஞான
தன்னிலையை நாடிச் சகலருக்கும் போதிக்குஞ்
சின்மயா நந்தரெனச் செப்பு. (3)

உற்ற துணையுற்று ஓங்குவிக்கு நற்றுணையாய்ச்
குற்றமொன்று மில்லாக் குணக்கடலாய்—நற்றவமும்
மன்னு நிலைபெற்றும் மாமதுரை நன்னகர்வாழ்
சின்மயா னந்த ரெனத் தேர். (4)

தேகத்தின் பற்றே ஜெனனமாம் அப்பற்றே
மோகத்தா லென்னும் முறைதெரிந்து — தேகத்தில்
மன்னுமோர் மோகத்தை மாற்றத் தகுதியுளார்
சின்மயா நந்தரெனத் தேர். (5)

நினைவை விளக்கும் நிமலமாம் ஆன்மா
எனது சொரூபமென வெண்ணி = நினைவுதனை
தன்வசமே செய்து சகலருக்கும் போதிக்கும்
சின்மயா நந்தரெனத் தேர். (6)

விளக்குநா ஞென்று விளங்கு நானென்று
விளக்குநா னித்தியமாம் வேருய் = விளங்குநான்
என்னிடத்தே பொய்யா யிலங்குவதா மென்றறிந்தோர்
சின்மயா நந்தரெனத் தேர். (7)

தேகநோய் ஆன்மாவைத் தீண்டாதே என்றறிந்து
தேகநா னென்னுமதைத் தீர்த்தொழித்து = தேகநான்
என்பதுபோல் ஆன்மாவை யானென்று நிச்சயிப்பார்
சின்மயா நந்தரெனத் தேர். (8)

நான்நா னெனும்பிரமம் நானேயா மல்லவென்ருல்
நான்யா ரெனவாய்ந்து நாடாமல் = நான்நானென்
றின்புற்று வாழ்வதெல்லா மேஞெபின் துன்பமென
சின்மயன் சொல்வதன்ரே செப்பு. (9)

சித்துநா னென்னுந் திடமற வாதுநின்றும்
எத்தனையோ எண்ணியெண்ணி ஏங்குமனம் = அத்தனையும்
தன்மயமாய் பார்த்துஞ் சகலருக்கும் போதிக்கும்
சின்மயா நந்தரெனச் செப்பு. (10)

விருத்தம்

விவகார வேளையெலாந் தன்னே நோக்கி
மேவரிய தனதுநிஜ சொருபந் தன்னில்
அவதான நழுவாமல் அதனிற் சித்தம்
அசையாது வைத்துபல அயர்வு மாற்றி

தவராமல் அந்நிலையைச் சார்ந்து நிற்குந்
தத்துவமாய் நின்றதொரு சாக்ஷி தன்னே
சிவமாகக் கண்டறிந்து திடத்தைப் பெற்ற
சின்மயவா நந்தரெனத் தெரிந்து கொள்ளே. (11)

அன்பர்களும் நண்பர்களும் அங்குள்ள சாதுக்கள்
பண்புடனே தினம்வந்து பாடங்கள் கேட்போரும்
இன்பமுட னேவாழ்ந்து இனியமுத்தி பெறச்செய்யுஞ்
சின்மயா நந்தனெனுஞ் சீரோன் தினம்வாழி. (12)

உ
சிவமயம்

இயற்றியவர் :
இளையான்குடி ஸ்ரீ சிவானந்தசுவாமிகள்

திருவான—பாண்டி, வளநாடு, மேய,
திருவால, வாயி, லுறைவோன்,
கருவா ரணத்தி னுரிபோர்வை போர்த்த
கருணா கரர்க்கு இனியோன்
நிருவாண மூத்தி நிலைமேவ வந்த
நிமலர்க்கு நாளு மருள்வோன்
பெருவாழ்வு மிக்க அருள்மேவு ஜோதி
ப்ரமானந்த ரென்னு முரவோன் (1)

வேறு

உரமேவ லானபிர மானந்த ரென்னவொளிர்
உயர்போத வேத முனிவன்
தரமான கல்வியொடு தகுயோக ஞானமதைத்
தகவே யெவர்க்கு மருள்வோன்
திரமான வேதகலை யிதிகாச தர்க்கங்கள்
திகழ்வான யுக்தி யதனை
நரலோக வுத்தமர்கள் நன்றாக வுற்றறிய
நலமா யுரைத்த னனரோ (2)

வேறு

உரைத்திடு பிரமா னந்தர்க் குற்றிடு சீட ராவார்
தரைப்பொலி பாலா னந்தர் தகுசுத்தப் பிரமா னந்தர்
பரப்பிய ஞான கீத பானுவாஞ் சங்கரா னந்தர்
சிரத்தையி லுயர்ந்த சுத்த சித்தரா மத்விதா னந்தர் (3)

அத்வைத மரபில் வந்த அரும்பெருங் குணங்கள் பத்தி
சுத்தநல் யோகங் கல்வி சூக்கும புத்தி யுக்தி
தத்துவ ஞான மிக்க ததசோம சுந்தரர் அவர்க்குச்
சித்தநற் சீட ராகச் சின்மயர் திகழ்ந்தா ரன்றே (4)

திகழ்ந்திடு பிரமா னந்தர் செய்துள மடத்தை யன்னார்
மகிழ்ந்தெதை யுரைத்தா ரந்த வரன்முறை தவறிடாமல்
திகழுற நடத்தி நல்ல சிவஞான போதத் திற்குப்
புகழத்து விதமாம் சார்பிற் புனைந்துரை யியற்றினரே (5)

இயற்றிய பிரமா னந்தர் எழிலுத்தி யென்னும் நூலை
மயக்கற மக்கள் யாரும் மதித்துநன் குணரு மாறு
தியக்கற அச்சு யேற்றித் திகழுறச் செய்து சீடர்
தயக்கறச் சிரவ ணாதிச் சந்ததம் நடத்து கின்றார் (6)

வேறு

வந்து மாதவர் வந்தனை செய்திடப்,
பந்த பாசம் பறித்து எறிந்தவர்,
சிந்தை யாறச் சிவந்திகழ் வித்திடும்,
செந்தி ருப்பதச் சின்மய தேசிகா (7)

போற்று வேதவே தாந்தங்கள் புண்ணியர்
சாற்று நூல்கள் தகுமிதி காசங்கள்
சாற்றி நாளும் தவப்பொழு தாகவே,
ஆற்று சின்மய வானந்த ரேநமः (8)

வேறு

தேசிக ராஜ போற்றி சின்மயா னந்தா போற்றி
மாசிலா மணியே போற்றி மலரடி சூடும் அன்பர்
தூசொடு துக்கம் யாவும் துடைத்திடும் சுகமே போற்றி
பேசிட வரிய ஞானப் பேரொளிப் பிழம்பே போற்றி (9)

வேறு

வேத வித்தக விமல பராபர
விகசித சுந்தர விகிர்த குணுகர
நாத தத்துவ நவதவ சங்கர
நாத ரஞ்சித நகுசுக வனகண
போத அத்வித புதஜன வந்தித
பூர ணப்பிர மா னந்தபூஜித
சேத னத்தவர் புகழ்மிக வுடையவ
சின்ம யானந்த தேசிக ரேநம: (10)

வேறு

உகந்தலிங் கேசரும் உயர்முத்து ராமரும்
உத்தம வரசப்ப ருண்மைப் பிரமா னந்தரும்
சுகம்பால வானந்தர் சுத்தப்பிர மானந்தர்
சூக்குமச் சங்கரா னந்த முனியும்
சுகமகிழு மத்துவித வானந்தர் சுத்தபர
தரவீர சோமசுந் தரமுனிவர் விறைவரும்
திகழுமுக மலர்வசன சின்மயா னந்தரும்
செகமகிழ அமிர்தபதந் தினமுவந் தருள்புரியவே (11)

௨

இயற்றியோர்

சென்னை ஸ்ரீ வீர. சு. மடம் அ. வித்தியானந்தகிரி சுவாமிகள்

மதுரை ஸ்ரீ பிரமானந்த சுவாமிகள் மடாலய

தலைவர் ஸ்ரீ சின்மயானந்த சுவாமிகள்மீது பாடிய

நவரத்தினப்பாமாலை

காப்பு

நேரிசை வெண்பா

சீர்மருவு தென்மதுரை சேர்பிர மானந்தப்
பேர்மருவு மாமடத்தின் பேருற்ற = பார்புகழும்
சின்மயா னந்தர்மேல் செப்பநற் பாமாலை
நன்மயா மைங்கரனை நாடு.

பூமேவு நான்முகனும் பொற்புமிகு நாரணனும்
தாமேவப் போற்றுகின்ற தற்பரத்தை = தேமேவு
சின்மயா னந்தர்பாற் சேர்ந்தாரே தாமடைவார்
தொன்மை வினையேகத் தொலைத்து. (1)

கட்டளை முன்னாகக் காட்டுமிகு வாசிட்டம்
திட்டமுடன் பின்னாகச் சேர்நூல்கள் = சிட்டமுடன்
சோமசுந்த ரன்ஞான தேசிகன்பாற் கற்றாரே
நாமசின் மயானந்தர் நன்று. (2)

நாமஅங்க ஆத்தம தானநற் பாவமெனும்
ஏமஅங்க நாற்பணிசெய் தேத்தியே = சோமசுந்
தர்ஞான தேசிகன் றன்னருள் பெற்றிலகும்
பர்ஞானச் சின்மயனைப் பற்று. (3)

காரணப் பிர்மமென்றுங் காரியப் பிர்மமென்றுந்
தாரணத் தாற்கூறும் தன்மையுடன் = ஆரணம்போல்
காட்டும் உயர்ஞானக் கண்மணியாஞ் சின்மயனை
நாட்டும் உளமதிலே நன்று. (4)

இப்பிதனில் வெள்ளியென இவ்வுலகம் சித்தினிடம்
எப்படித்தான் ஏற்றிலகும் என்பதனை = ஒப்புடனே
கூறி விளக்கஞ்செய் கோதிலாச் சின்மயனைத்
தேறி யடைவாய் சிறப்பு. (5)

தத்து வமசியெனும் சாற்றுறுநல் வாக்கியத்தின்
அத்து விதப்பொருளை ஐயமற = அவ்துவிதம்
நீக்கி யருள்புரியும் நின்மலனும் சின்மயனை
வாக்கிற் றுதிபாடி வாழ்த்து. (6)

முத்தனும் பிர்மானந்தர் முன்மொழிந்த நற்பொருளார்
உத்திரத் துகரமா மோர்நூலை = பத்திநிறை
அன்பருக் கோதிநிதம் அஞ்ஞானம் நீக்கியருள்
என்ஞானச் சின்மயனை யேத்து. (7)

சங்கமார் பைந்தமிழாற் றுனிலங்கு சீர்மதுரை
அங்கயற் கண்ணியுட னும்சொக்கர் = துங்கமிகு
நற்பதங்கள் போற்றிவாழ் நன்ஞானச் சின்மயனின்
பொற்பதங்கள் போற்று புகழ்ந்து. (8)

கற்றுச் சிறந்தோரும் கல்லாத நல்லோரும்
உற்று உயர்வடையும் ஒப்பில்லா = பற்றுதலில்
சின்மயா னந்தருடன் சீடர்களும் தான்வாழி
சின்மய சீரருளைச் சேர்ந்து. (9)

உ

மதுரை ஸ்ரீ குட்டைய சுவாமிகள் மடம் ஸ்ரீ சங்கர சுவாமிகள் மதுரை ஸ்ரீ பிரம்மானந்த சுவாமிகள் மடத்தலைவர் ஸ்ரீலஸ்ரீ சின்மயானந்த ஞானதேசிக சுவாமிகளின் மீது

இயற்றிய வாழ்த்துப்பா

நிலைமண்டில ஆசிரியப்பா

வாழிய சத்தியம் வாழிய அத்விதம்
வாழிய இன்பம் வாழிய சற்குரு
சீர்பெரும் பாண்டி திருநா டதனில்
ஏர்பெற விளங்கி இசைத்த மிழமைந்த
மதுரைமா நகரில் மாண்புற விளங்கி
சதுராய் ஒளிரும் தன்மய தான
பிரம்மா னந்தப் பெரியார் மடத்தில்
தரம்பெற வெழுந்த தண்மைசேர் சாந்த
குணமுறும் சின்மயக் கோதறு தவத்தோன்
மணம்பெறு நாரா யணரெனும் ஞானக்
குரவ னருளை குணமுறப் பெற்றோர்
திரமுறு சோம சுந்தரக் குரவர்
அவரிடம் தோய்ந்து அருமைசேர் ஞான
தவமிகும் நூல்கள் தரமாய் உணர்ந்தோன்
சாதன நான்கும் தன்னிடம் கொண்டோர்
பாதக மில்லாப் பண்புமிக் குடையோர்
அருளினை யீயும் அம்பிகை மீனாள்
திருவருள் பெற்ற சிறப்பினை யுடையார்
மயித்திரி யாதி மாண்புறப் பெற்று
செயிர்தரு காமத் தீங்கினை யெரித்து
விசாரமேற் கொண்டு விதித்தன புரிந்து
திசாதிசை யெங்கும் திரிபிலா துணர்ந்து
தன்னுடை வடிவே தரணியென் றறிந்து
பன்முறை மனத்தைப் பரவடி வதனில்

சந்ததம் நிறுத்தும் சத்குண முடையார்
பந்தம் நீக்கப் பண்புற வடைந்த
சீடர் தமக்குத் திரிபிலா துணர்த்தும்
பாடம் கூறும் பண்புமிக் குடையார்
இத்தகைப் பெரியார் இன்றுதம் மடத்தில்
பத்ததி முறையாய்ப் பண்புறும் தாய்போல்
சாதுவாய் வந்த சற்சீடர் தமக்கு
மாதுயர் அகற்றும் மாண்புறு மொழியால்
இனியவை கூறி இன்புறப் புரந்து
தனியராய் நிற்கும் தவப்பெறும் செல்வர்
சந்திர மௌலித் தாங்கிய சோம
சுந்தரப் பெருமான் தூயநூல் அருளால்
நிலவிய உலகில் நீடுற வென்றும்
பலநலம் பெற்றுப் பண்புற வாழி
வாழிய சத்து வாழிய சித்து
வாழிய இன்பம் வாழிய குருவே (1)

பதினுன்கு கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சீர்மேவு பாண்டிநன் ஞட்டிடை விளங்கிமிகச்
சிறப்புறும் ஆல வாயில்
தேர்மேவு நின்றிலகு திகழ்பிரம வானந்த
தேசியச் செல்வ ரான
பார்மேவு மடமதில் நின்றுதான் தலைவராய்
பண்பமர் மீனுட்சி தன்பால்
பக்திமேற் கொண்டொழுகி நாடொறும் வணங்கியே
பரவச மனத்த ராகி
ஏாமேவு வேதாந்த சிரவணம் நடத்தியே
எழிலுற்ற மாண வர்க்கு
எண்டிசை புகழ்ந்திட யாவரும் வணங்குநல்
இன்பமர் குணங்கள் பூண்டு

நேர்மேவு திடஞான வன்மையும் நல்லநிலை
நின்மல வடிவ உருவும்
நிகழ்கின்ற வரதனே சின்மயா னந்தகுரு
நித்தனே துரிய வாழ்வே (2)

கருவிடை வருந்துயர் துக்கமென் றறிந்துபின்
காண்புறு மூலகு தன்னில்
கதியதாய் அடைந்துதாம் நாராய ணக்குரவர்
கவின்சோம சுந்த ரேசர்
திருவடித் தாள்களை தினம்தினம் பணிந்துதான்
திகழவே அவர்கள் கூர்ந்து
செப்பிய பொருளதை மனமதில் பதித்துமேல்
திடஞான மூர்த்தி யாகி
மருவிலா திலங்கிடும் மகிழ்பிரம வானந்த
மாசிலா மடத்தில் மேவி
மாண்புறும் தேசிக வடிவமாய் நின்றிலகி
மதித்திடும் மாண வர்க்கு
பொருவறப் போதித்து புகழினை விளக்கிடப்
புவிமீது வந்த தேவே
புண்ணிய வடிவான சின்மய தேசிக
பொருவிலாத் துரிய வாழ்வே. (3)

வேறு

பண்டிதர்கள் கொண்டாடு பாண்டிவள நாட்டிலே
பான்மைசேர் கூடல் தன்னில்
பரப்பிரம வானந்த மடமது தன்னிலே
பக்தர்கள் தலைவ னாக
எண்டிசை புகழவரு ஏர்பெரும் குணங்கள்தாம்
இப்புவி யதிச யிக்க
எல்லையற நிற்குமொரு வேதாந்த நூல்களை
இன்புறு மாண வர்க்கு

கண்டிலகு தெய்வமாய்க் கருத்தினிற் பதிந்திடக்
கனிவுறக் கூறி நின்றும்
காண்பரும் மீனுக்ஷி கழமலர்ப் பதமதில்
கசிந்துமே பக்தி கொண்ட
ஆண்டவருள் சின்மயா னந்தவடி வானவா
அண்ணலே எழுந்து வருக
அன்பர்கள் பணிந்திட ஆதியாய் நின்ருெளிரும்
அருட்குரவ தினம் வருகவே. (4)

எழுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

புகழ்பெறும் மதுரைப் புண்ணிய தலத்திற்
பொருவிலா ஞானமோர் வடிவாய்
இகழ்விலா ப்ரம்மா னந்தராம் இனிய
எழிற்குரு தேசிகர் படத்தில்
மகிழ்வொடு மெழுந்து சின்மயா னந்த
மாசிலா ஆரிய உருவாய்த்
திகழ்தரும் சீடர் தமக்குமெய் ஞரனும்
தீரமார் விசாரமே கூறி (5)

தத்துவ ஞான நிட்டராய் வதிந்து
சத்குண சாந்தராய் திகழ்ந்த
உத்தம நாரா யணரெனும் பெரியார்
உண்மைசேர் சோமசுந் தரனுர்
இத்தகை மேலோர் இடத்துறைந் தென்றும்
இணையிலா தனதுரு பத்தை
நத்தியே உண்ர்ந்து நானெனும் பொருளில்
நலமதாய் நண்ணியே நின்று (6)

திரமுயர் பொருந்தும் சிவஞான போதச்
சீரிய நூலதா மதற்குத்
தரம்பெரும் உரைதான் வேதாந்த பரமாய்த்
தகுதியா யியற்றியே மேலாம்

வரமுயர் ப்ரம்மா னந்தராற் செய்த
வளம்பெறும் யுக்தி சேர்ரத்ஞ
கரமெனு நூலை கவின்பெறத் திருத்தி
சண்டவர் நகைமுகம் கொள்ள (7)

அச்சக மேற்றி அவனியிற் கீர்த்தி
அதிசய அருமைதான் விளங்க
இச்சக மதனில் இனிதுற விளங்கும்
எழிற்பெறும் சின்மயா னந்தர்
நச்சிஞற் கினிய நலந்தரும் பெரியார்
நலமதாய் மடாலயம் நடத்தி
உச்சித மாக உலகினி லென்றும்
ஒளிபெறத் தினமும் வாழியவே (8)

அறுசீர் விருத்தம்

நன்மொழி யினிது கூறி நலந்திகழ் மீஞக்ஷி தன்பால்
மன்பெறும் பக்தி பூண்டு மாசறச் சீடர் தம்மை
நன்முறை நடக்கச் செய்து நாடரும் தவங்கள் செய்த
சின்மயா னந்த ரென்னும் தேசிகர் உலகில் வாழி (9)

நலமிகும் ஆல வாயில் நற்பெரும் ப்ரம்மா னந்தர்
பலந்தரும் மடால யத்தில் பண்பொடு சிரவ ணந்தான்
திலகமாய் எழுந்து கூறும் சின்மயா னந்த ரென்றும்
நிலவிய உலகு தன்னில் நீடூழி வாழ்க மாதோ (10)

கட்டளைக் கலித்துறை

கற்றவர் போற்றும் கடிநகர்க் கூடற் கனம்பதியில்
பற்றற விட்டப் பகர்பிர மானந்தப் பார்மடத்தில்
நற்குணச் சின்மயர் நாதராய்த் தோன்றி நலந்திகழ்
விற்பன முற்று விசாரமே கூறி விதிமுறையே (11)

விதிமுறை சீடர்க்கு வேண்டிய யுக்தி வெளிப்படையாய்
மதிதனி லேற மகிழ்வுடன் போதித்து மாண்புறவே
கதிதனைப் பாலிக்கும் காண்பரும் சின்மயக் கண்மணிதான்
சதுருடன் வாழ்ந்து சகமதி லென்றும் தழைத்தெழவே (12)

கலிவிருத்தம்

திருவும் கல்வியும் சேரச் சிறந்தவர்
கருவில் நின்றவர் காலைச் சிதைப்பவர்
உருவிற் கொண்டவர் ஓரம் இலாதவர்
செருவி லாதவர் சின்மயா னந்தரே (13)

வண்மை மிக்கவர் வாய்மை சிறந்தவர்
தண்மை சேர்ந்தவர் தாழ்ந்து உரைப்பவர்
எண்மை மிக்க இரக்கம் நிறைந்தவர்
திண்மை ஞானங்கொள் சின்மயா னந்தரே (14)

வெண்பா

கற்றவர் போற்றும் கடிகமழ் மாமதுரை
நற்றவ சின்மயர்தாள் நாடினால் — குற்றமற
பேரும் புகழும் பெருஞ்செல்வம் தானெய்தி
காரிருளை நீக்குமே காண். (15)

காண்பரும் மீனாக்ஷி கண்ணருளைத் தான்கொண்ட
சேண்பெறும் சின்மயர் சீர்பாதம் — மாண்புறவே
முப்போதும் பூசித்து முன்னின்று தாள்பணிந்தால்
தப்பாமல் முத்திவரும் தான் (16)

அறுசீர் வாழிவிருத்தம்

அணிபெறும் மதுரை தன்னில் ஐங்கரன் தாள்கள் வாழி
மணியென ஒளிரும் ஆறு மகிமைசேர் முகத்தான் வாழி
பணிபெறும் மீனா ளோடு பரசிவன் பதங்கள் வாழி
திணிபெறும் ஞானச் செல்வ சின்மயர் கழல்கள் வாழி (17)

அரசப்ப சுவாமி வாழி அனுபவப் ப்ரமா னந்தர்
தரமுயர் கழல்கள் வாழி தண்மைசேர் பாலானந்தர்
விரைமலர்த் தாள்கள் வாழி வித்தகப் பான்மை யான
நரைகமழ் சுத்தப் ப்ரமா னந்தர்தம் பதங்கள் வாழி (18)

சங்கரா னந்த ரென்னும் சத்குணப் பெரியார் வாழி
இங்கிதத் வைதர் வாழி இறைசோம சுந்தர் வாழி
தங்கிய இவர்க ளோடு சார்ந்தமெய் அடியா ரென்றும்
மங்கள மாக நல்ல மாநிலம் தன்னில் வாழி (19)

திரமுறு ஞானம் பெற்ற தேவசுப் பைய சுவாமி
வரமுறு நார ணப்பேர் வான்பெரும் தன்மை மிக்கார்
தரமுயர் சோம நாம தகுசுந்த ரேச ரோடு
சிரவணம் செய்து நின்ற சின்மயர் தாள்கள் வாழி (20)

சுபம்

ஓம் தத் சத்

உ

திருமருகல் வீர. பொ. அ. பிரஹ்மானந்த சுவாமிகள்
மதுரை ஸ்ரீ பிரஹ்மானந்த சுவாமிகள் மடம் தலைவர்
ஸ்ரீ சின்மயானந்த ஞானதேசிக சுவாமிகளின் மீது இயற்றிய

பதினன்கு சீர்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

திருவருட் பொழியும் செல்வமா மாடம்
சிகரிகோ புரம்பொழில் விண்போய்
திகழ்தரும் பஞ்ச தருவினைத் தாழ்த்தும்
திக்கெலாம் புகழ்செறிந் தோங்கும்
உருவருட் கொண்டு உமையொரு பாகன்
உகந்துமுன் னுடல்செய் தொருநாள்

உலகளந் தவனே தெய்வமென் றறிய
உலகெலாம் போற்ற பல்லாண்டு
மருவருட் டுவை மார்பன்வந் தருளும்
வானதி வைகைசூழ் பழன
மதுரைமா நகரில் திருமடப் பேருய்
மாதவப் பலன்றரு வடிவாய்
குருவருட் பெற்றேன் கோதிலா ஞானக்
குவட்டுறை செம்ம லாந்தன்னை
குறுகினேர்க் கருள்வன் கொண்டலும் நாணும்
குரவனும் சின்மய வடிவே. (1)

வேதன வடிவே விரிசெக மாகி
விளங்குதல் பழுதினில் பாம்பாய்
விண்கரு நிறம்போல் விவர்த்தமாய் மனத்தில்
விளங்கிபே ரின்பம் வாய்த்திடவே
சாதனம் நான்கால் சற்குரு வருளால்
தத்துவ மசியெனும் பொருளை
தகவுளோர் கண்டு தன்பிறப் பொழிய
சச்சிதா னந்தமே வடிவாய்
காதனம் மனத்தில் கழன்றிட நாளுங்
கனவென நனவினைக் காட்டி
கண்ணன்ரா கவன்போல் கருதரும் பொருளை
கண்டறிந் துய்ந்திட எவரும்
மாதன எவப்பாய் வரும்பசிக் கமுதாய்
வாழ்ந்திடுஞ் சின்மயா னந்த
வள்ளலாம் ஆல வாய்திரு மடத்தில்
வாழ்கமெய் யுணர்வொளி விளக்கே. (2)

௨

இயற்றியவர் : கோயிலூர்மரபு.
ஸ்ரீ மகா. கோவிந்தசுவாமிகள் தர்ம பரிபாலனத் தலைவர்,
கைவல்ய நவநீத ஸ்ரீ நாராயண தாண்டவேசுரர் ஆலயம்,
நன்னிலம், தஞ்சாவூர் மாவட்டம்.

மதுரை ஸ்ரீ பிரமானந்த ஞானதேசிக சுவாமிகள் மடாலயம்
ஸ்ரீ சின்மயானந்த ஞானதேசிகசுவாமிகளின் மீது பாடிய
புகழ்ப்பாப் பதிகம்

எழுசீர்க்கழி, நெடிலடி, யாசிரிய விருத்தம்

நீர்கிளர் வைகைத் திருநதி திகழ்ந்து
நிலைபெறும் ஆலவாய் என்னும்
பேர்கிளர் மதுரை நகரிஞ லயமார்
பெருமைமீ ரூட்சியம் பிகையும்
சீர்கிளர் சுந்த ரேசராம் இறையும்
திருவருள் புரிந்தமைந் ததுவாம்
நேர்கிளர் பிரமா னந்தமா குருவின்
நீதமா மடாலய மதுவே. 1

இத்தகைப் பெருமை யார்ந்திடும் மடத்தில்
இலங்கிடும் மூலமூர்த் தியாம்
வித்தகப் பிரமா னந்தமா குருவின்
மேதகு பீடமார்ந் திடுநன்
மூத்தரின் முறையிற் சோமசுந் தரமா
முனிவரின் சீடராய்த் திகழ்ந்து
சித்தவப் பீடத் தமர்ந்தலங் கரிப்போன்
சின்மயா னந்ததே சிகனே. 2

நித்தமும் மகிமை யார்ந்தவே தாந்த
நிகிலமா வாக்கியம் உரைப்போன்
தத்துவம் அறிய விரும்பிடும் சீடர்
தமதக இருளற ஒளிர்வோன்

சுத்தமாம் பிரமா னந்தசா கரத்தே
சூழ்ந்தழுந் திடுந்திரம் உடையோன்
சித்திமுத் தியினை விளங்கிட விரிப்போன்
சின்மயா னந்ததே சிகனே. 3

தூலமா தியதாம் மூவுடல் ஆன
தொகையிது வெனஅறி படலால்
சாலநீ அன்று அறிவுரு வான
சச்சிதா னந்தமாம் பிரமம்
ஏலநீ ஆவாய் என்றுதன் கரத்தில்
இயைந்தசின் முத்திரை காட்டிச்
சீலமாம் ஞான நெறியறி விப்போன்
சின்மயா னந்ததே சிகனே. 4

சகமிகு குருவாம் சங்கராச் சார்யர்
சாற்றுவே தாந்தசாத் திரங்கள்
புகலுமத் துவித மெய்யுரை யதனைப்
போதனை புரிந்தனு தினமும்
மிகவுறும் சீடர் பவத்துயர் தீர்ந்து
வீட்டுயர் சுகமுறப் புரிவோன்
தகவுறும் பரம சின்மயா னந்தத்
தத்துவ ஞானதே சிகனே. 5

திருமிகு பிரமா னந்ததே சிகனார்
திகழ்த்துமா யுத்திகள் அமைந்த
வரமிகு பிரமா னந்தமா யுத்தி
வாய்ந்தவே தாந்தநூ லதனை
உரமிகும் இரண்டாம் முறையதாய்ப் பதிப்பித்
துத்தமர்க் குளமுற உணர்த்திப்
பரமுற அருள்வோன் சின்மயா னந்தப்
பதமுறும் ஞானதே சிகனே. 6

தவமிகு முனிவன் மெய்கண்ட தேவன்
தமிழ்ச்சிவ ஞானபோ தத்திற்
குவமையில் விளக்க உரையினை இயற்றி
உலகருக் கனுதினம் உரைத்துப்
பவமுறும் துன்ப அவித்தையற் றிலங்கும்
பரமமா ஞானமுற் றவர்கள்
சிவமுறப் புரிவோன் சின்மயா னந்தத்
திவ்விய ஞானதே சிகனே. 7

கற்பித உலகைச் சத்தியம் என்று
கழறுவோர் சத்கியா தியினை
அற்பமாய் மறுத்தாங் கதற்குதா ரணமாய்
ஆன்றதோர் குமாரமா தேவர்
சொற்பிர மானு பூதியா தியநூல்
சொன்மருள் விழியுளோர் கொள்ளார்
சிற்பர மார்த்த உரையெனல் உரைப்போன்
சின்மயா னந்ததே சிகனே. 8

நானெனும் போதம் அற்றிடும் நிலையில்
ஞானவா னந்தமாம் பிரமம்
தானெனும் போதம் உற்றிடும் என்னும்
தத்துவ ஞானவாக் குரைத்தே
ஈனமாம் பிறப்பும் இறப்புமில் வீட்டை
ஏற்றிடும் நிலையினை யளித்தே
தீனரைக் காக்கும் கருணையார்ந் திடுவோன்
சின்மயா னந்ததே சிகனே. 9

விரும்புவா ளுளில் ஓர்கணம் கொள்ள
மிகுநிதி யளித்துவேண் டிடினும்
பொருந்திடா தான அரியவா ளுளைப்
புனிதமாம் நெறியறக் கழித்தல்

வருந்திடும் விலங்கின் இயல்பெனச் சாற்றி
பன்னுவீ டுறுநெறி யார்க்கும்
திருந்திட விளக்கும் கருணையார்ந் திடுவோன்
சின்மயா னந்ததே சிகனே. 10

உ

ஓம் குரு வாழ்க.

இயற்றியவர்: ஸ்ரீ காசிவாசி நடேசானந்த சரஸ்வதி
மதுரை ஸ்ரீ பிரமானந்த ஞானதேசிக சுவாமிகள் மடாலயத் தலைவர்
ஸ்ரீ சின்மாயானந்த ஞானதேசிகசுவாமிகள் மீது பாடிய

சின்மயானந்த தேசிக வெண்பா

"சீராருங் கோவிலூர்ச் செல்வன் அரசப்பன்
பேரார்பிர் மானந்தன் பேர்மரபின்—சீராளன்
செல்லொத்த வான்கருணைச் சின்மயா னந்தன்சீர்
ஒல்லும் வகையுரைப்பாம் ஓம்" 1

"ஓங்கார மாபொருளாய் ஒன்றும் பிரமத்தைத்
தூங்கா முயற்சியினுல் துன்னியெமை—ஆங்காரத்
துன்மதிகள் சூழாதே சொந்தநிலை துய்த்திடச்செய்
சின்மயா னந்தனடி சேர்" 2

"சேர்ந்தார் பவமறுக்கும் தீமைதனை வேரறுத்துக்
கூர்ந்தார் மனமென்றுங் கோயிலுளே—நேர்ந்தாங்கு
சோதிமய மாயிலகும் சுட்டற்ற மாவெளியாம்
ஆதிசின்ம யானுர் அடி" 3

"அடியென்ற ஞானச்சீர் ஆர்ந்தசின்ம யானந்தன்
கெடியால் நினைந்தார்தம் கேடோ—டடியார்
பிறப்போ டிறப்பகற்றிப் பேணுதன்மை யாளன்
துறப்பித்தா னென்றன் துயர்" 4

"துயரமெலாம் பார்வையினுல் தோன்ருமன் தீர்த்து
கபறரவைக் கானலினைக் கண்டார்ப்—மயலுலகை
எண்ணுது நின் நினைவாய் என்றசின்ம யானந்தக்
கண்ணியன்சீர் சொல்லிலடங் கா" 5

"சானும் மலையும்சீர் காட்டுங் கருணையினுல்
வானுந் தனைநிகரா மாதவனும்—தேனுந்து
செந்தீ யெனத்தமிழாற் செப்புசின்ம யானந்த
நந்தீ சுரனடியை நாடு" 6

நாடவர்கள் புகழ்சித்தர் ஞானியாம் நல்லஇடைக்
காடன் சிறந்த கலைப் பதியன்—பீடாரும்
வேதாந்த போதமுரை மேதைசின்ம யானந்தர்
பாதாந்தச் சீரடியைப் பாடு 7

பாடுமவர் ஞானப் பசிதீர்க்கக் கால்மாறி
ஆடுமா டக்கூடல் அணிநகரான்—பீடுநிறை
சின்மயா னந்தகுரு தேசிகனின் சேவடிகள்
தன்மயா னந்தம் தரும் 8

தரும நிறைகூடற் சார்பிள்ளை யாருர்ப்
பருவமுகில் ஞானம் பயிற்றுங்—குருவடிவாய்
வந்தருளு சின்மயனே வானவர்தம் மாதேவன்
சிந்துரனின் தந்தையெனத் தேர் 9

தேர்தல் வருநாளிற் றிவிரமாய்ப் பாடுபடும்
ஆர்வலரை நேரும் அடியவரும்—சேர்வகையால்
ஞானம் பெறஅருளும் நல்லசின்ம யானந்த
வானவனின் சீர்வழுத்து வாம்" 10

௨

இளையாங்குடி ஸ்ரீ சிவானந்தசுவாமிகள் சிஷ்யர் சிவதாஸ்குரு திருவருளால் இயற்றியது.

மதுரை ஸ்ரீ பிரமானந்தஞானதேசிகமடாலயத் தலைவர் ஸ்ரீ சின்மயானந்தஞானதேசிகசுவாமிகள் மீது பாடிய

எழுசீர்கழி, நெடிலடி, ஆசிரிய விருத்தம்

சின்மயா னந்த தேசிக னுலகஞ்
செய்தவப் பேற்றினு லுதித்தோன்
பன்மய வுலகர் பாசம தறுத்துப்
பரகதி யடையவே செய்வோன்
தன்மய மடையச் சார்ந்திடு முளத்தர்
ஜனனம தறுத்திடுந் தகவோன்
சொன்மய வுலகைச் சின்மய மெனவே
துலக்கிடும் வசனசா துரியன் 1

நன்மனத் தோடு நாளுமே சென்று
நாதனும் ஆலவா யிறையைச்
சொன்மனங் கசிந்து துதித்திடு முரவோன்
தோகையாம் அங்கயற் கணியை
மன்மனந் தனிலே மகிழ்வொடு பணியும்
மாசறு தவத்தினிற் சிறந்தோன்
சின்மயா னந்த னென்னு நாமத்தோன்
தேசிக னுகவிற் றிருப்போன் 2

பன்மனப் பகையைப் பற்றறத் துடைத்தோன்
பகர்தவத் தோர்களைப் புரப்போன்
கன்மனத் தோரைக் கனியவே வைப்போன்
காரியா காரியந் தெரிவோன்

நன்மனப் பிரஹ்மா னந்தர்செய் மடத்தை
நலம்பெற நடத்திடு புனிதன்
சொன்னய முடையோன் துறவரிற் சிறந்தோன்
தூயனும் சின்மயா னந்தன் 3

கன்மனத் தோரைக் கரைந்திடச் செய்யும்
கவினுறு வசனசா துரியன்
நன்மன முடையோர் தன்மய மடைய
நாடொறும் பாடம துரைப்போன்
சொன்மறை முடிவை யல்பக லாகச்
சொல்வதிற் சமர்த்துமிக் குடையோன்
சின்மயா னந்த தேசிக நாதன்
செகம்புகழ் மகிழ்தவச் சான்றோன் 4

வன்மனக் குரங்கை மருட்டிடும் விரலோன்
வரமுடைச் சின்மயா னந்தன்
தன்மனத் தடைந்த தனித்துயர் பதத்தைச்
சகலர்க்கும் புகட்டிடுந் தயவோன்
சொன்மனங் கடந்த துரியநற் பொருளைச்
சுகமதா யறிவிக்குந் தூயோன்
தன்மகன் மங்கள் தரணிப ரறியச்
சர்வதா யுரைத்திடுந் தகவோன் 5

புன்மயக் குயவர் கூட்டுற வில்லோன்
பொழுதினைச் சுகமதாய்க் கழிப்போன்
நன்மனச் சான்றோர் நாடிய தளிப்போன்
நாடொறும் சிரவணம் புரிவோன்
தன்மய மான அறிவினை நாளும்
சற்சனர் தமக்குவந் தளிப்போன்
சின்மயா னந்த தேசிக நாதன்
சீடர்தம் இதயவா சிகனே. 6

நின்மதி யுடையோன் புன்மய லறுத்தோன்
நீண்டநாள்த் தவம்பல புரிந்தோன்
தன்மய மடைந்த நன்மனச் சான்றோன்
தராதர மறிந்துயர் தகவோன்
கன்மனத் தவரைக் கசிந்துகச் செய்யும்
காருண்ய வசனசா துரியன்
சின்மயா னந்த ஞானசற் குரவன்
தேசிக விறையெனும் திறலோன். 7

தன்மய மான சித்துரு வதனைத்
தரணியோர் தமக்குணர்த் திடுவோன்
தொன்மய மான உலகமா சகற்றித்
தூய்மனச் சாந்தியை யடைந்தோன்
பன்மதர் மொழியும் பக்ஷங்க ளனைத்தும்
பாறிட மறைமொழி பகர்வோன்
சின்மயா னந்த தேசிகன் பாதம்
சேருவார் பிறவிசே ராரே. 8

கன்மனத் தவர்க்கு நாடரும் பிரமங்
கருத்தினிற் பதிந்திட விளக்கும்
தன்மநன் முனிவன் சாந்தமெய்ச் சீலன்
தவமணி யெனத்திகழ் வரதன்
நன்மன முடைய தவசிகள் புகழும்
ஞானநூற் றுறைபல வுணர்ந்தோன்
சின்மயா னந்த தேசிகன் பாதம்
சேருவார் பிறவிசே ராரே 9

தொன்மன மகவை ஞானநற் றுறையிற்
தொடர்ந்திட நாளுமே புரிவோன்
தன்மநன் மார்க்கம் யாருமே சாரச்
சகத்தினிற் சார்ந்துள பெரியோன்

சின்மயா னந்த குரவன்போ லிந்தச்
செகமதி லில்லெனச் சொல்லால்
என்மனந் தனிலும் இருப்பதால் யானும்
இன்புற நன்குவாழ்த் தினனே 10

உ

இயற்றியவர் வித்வான் ம. சுந்தரமூர்த்தி.
தமிழாசிரியர், அவிநாசி.

மதுரை ஸ்ரீ பிரமானந்த ஞானதேசிகர் சுவாமிகள் மடத்தலைவர்
ஸ்ரீ சின்மயானந்த ஞானதேசிக சுவாமிகள்மீது பாடிய

எழுசீர்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

காப்பு

சீராரும் மாமதுரை செல்வத் திருப்பதியில்
பேராருந் தேசிகனும் பேரறிவாம்—ஏரார்ந்த
சின்மயா னந்த சிவகுருவைப் போற்றிடவும்
நன்முகமாம் யானையே நல்கு

திருவளர் பாண்டி நன்னாடு என்றும்
செய்தவப் பயனென உற்று
பெருவள ஞானம் பெற்றுவீ டடைவான்
பேசருந் துறவுமேற் கொண்டு
உருவளர் ஞான வாரிதி யாகி
ஓங்கிய ஒருவனே பணிந்தேன்
கருவளர் பிறப்பில் அடியனேன் வீழாக்
கதியெனக் கருள் சின்மயனே 1

சீர்திகழ் மதுரை மாநகர் மேவிச்
செட்பருந் துறவுமேற் கொண்டு
ஏர்திகழ் ஞானம் நிறைதவ ளுகி
இயங்கிய பெரியவ நினது
தார்திகழ் அடிகள் தலைமிசைக் கொண்டேன்
தாங்கரும் பிறவிநோய் தவிர்த்துப்
பேர்திகழ் வீடு பேற்றினை அடியேன்
பெற்றிட அருளுஞ் சின்மயனே. 2

யானென தென்னுஞ் செறுக்கினை யறுத்தான்
யாவரும் புகழ்ந்திட உலகில்
வானென விளங்கும் பதத்தினில் உள்ளார்
வளர்பத விக்குமே லான
மோனவீ டடைவான் எனத்தமிழ் மறைதான்
மொழிந்த சொல்லாங்குறள் தனக்கு
ஈனத்தைக் கெடுத்து எழிற்பெருந் துறவோய்
எந்தையே அருளுஞ் சின்மயனே 3

மறையின தந்தப் பொருளினை யடியார்
மனங்கொளப் புகன்றுமே லான
துறைதனை யடையத் தூயநல் லமுதச்
சொன்மழை புரிந்தமெய்த் தூயோய்
தறைதனிற் பிறந்து மயல்தனிற் கிடந்து
சாவதே தொழிலென அமைந்த
சுறையினேன் றனக்குன் கழன்மலர் தந்து
காட்டுவாய் வீடு சின்மயனே. 4

பிறப்பெனப் புகலும் பேதமை நீங்கப்
பெருமையாய் அறிஞர்கள் பேசுஞ்
சிறப்பெனும் அந்தச் செம்பொருள் தன்னைச்
சிந்தையில் உள்ளவா தெளிந்து

இறப்பெனும் அதுவும் பிறப்பெனும் அதுவும்
ஏகிடச் செய்தருள் நீதான்
உறப்பெறற் குரிய ஒப்பில் வீடருள்வாய்
ஓங்குமா துரிய சின்மயனே 5

வீட்டினை நாடும் மேலவர் தாமவ்
வீட்டினைப் பெற்றுமே மகிழ
வீட்டினை விட்டுன் விரைமலர்த் தாளை
விழைந்துமே வந்துதான் கூடின்
விட்டியஞ் ஞான மயலின்வே ரறுத்து
வேறும்ஒன் றில்லெனக் கூறி
நாட்டியே வீட்டை நல்கிடும் தூயோய்
நானுனை யடைய சின்மயனே 6

நான்மறை முடிவில் நவின்றிடும் பொருளை
நண்ணிய சீடர்கள் தமக்கு
மேன்முறை தெரிந்து வீட்டினை மேவ
விளக்கிடும் பெரியநற் றாயோய்
கான்மலர் போற்றிக் கவின்பெறு பதத்தைக்
கடையனேன் பெற்றிட அருள்வாய்
நூன்முறை தெரிந்து மற்றவர்க் கதனை
நுவன்றருள் புரிந்த சின்மயனே 7

பார்த்தனுக் கருளும் பரமனுர் திருவாய்
பகர்ந்திடு கீதையே முதலாம்
ஆர்த்திசேர் நூல்கள் அனைத்தையும் உணர்ந்தே
அவைகளைப் பக்குவர்க் கருளிக்
கீர்த்திசேர் வீடுபேற்றினைக் காட்டும்
கேடிலாத் துறவினோய் நினது
வார்த்தையாற் பலபேர் வாங்கிய வீட்டை
மாதவ அருளுஞ் சின்மயனே. 8

சங்கர குரவன் தன்மர பிந்தத்
தரணியில் தழைத்துமே நீட
இங்ஙருள் பெரியார் தம்மிலே இயைந்து
ஏற்றவா பணிதனைப் புரிந்து
பொங்கிய புகழ்சேர் பாண்டிநா டதனில்
போற்றவே நின்றருள் தூயோய்
பங்கமில் குரவ பதமலர் தந்தென்
பவப்பிணி நீக்கும் சின்மயனே 9

இறந்துபோ மளவும் இந்தநல் லுலகில்
இழிந்திடு பொருளையே தேடிச்
சிறந்தபோ கங்கள் தம்மையே நாடித்
திரிதரு கின்றனன் அடியேன்
மறந்துமோர் நல்ல வினைதனைப் புரியா
மதியினேன் தனக்கும்நீ அருள்வாய்
துறந்தவர் தம்மில் உயர்ந்துநல் லுலகில்
தூய்மையின் வடிவு சின்மயனே. 10

உ

சிவமயம்

மதுரை ஸ்ரீ பிரமானந்த ஞானதேசிக சுவாமிகள் மடத்தில் மங்கள ஆசனத்தின்கண் படாதிபதியாய் கற்பகத்தருபோல் வீற்றிருந்தருள்புரியும் ஸ்ரீலஸ்ரீ சின்மயானந்த ஞானதேசிக சுவாமிகளின்மீது மணக்குளம் பழ. நாகலிங்கம் ஆச்சாரி குமாரன் சிற்பகெணித சோதிடன் வீண்காலம் கழித்து இப்போது பாடம் கேட்டுக்கொள்ளும் 75 வயது சீடன் மானுமதுரை ப. நா. கிருஷ்ணசாமி ஆச்சாரி அடியேன் அன்புகொண்டு இயற்றிய

பதினன்கு சீர்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

திருமகள் அருள்பரவு பாண்டிநன் நாட்டின்கண்
தினகரன் றிக்கு வதனில்

திங்கள்மும் மாரிபொழி செந்நெல்விளை முக்கனியுஞ்
தெங்கமுகு தேவ தருவும்
வருகைதரு வைகைநதி சங்கரன் னுமைசேய்கள்
மால்முனிவ ரும்ப ருலவும்
மாவிடைமை நகர்மன்ன மடல்பெருகு சைவவழி
வந்ததிரு கூட்ட மாபில்
அருமைபெறு தவபுத்ர சன்மார்க்க மெனுநாம
அணைபிதா வணைவர் மகிழ
அற்புதக் கல்விபா னுபதேசங் குருவருள
அரியபொருள் பகரக் கேட்டு
திருவருள் கூட்டமா மதுரைபிர மானந்த
தேசிக மடாதி பதியாய்ச்
சிறப்புற விற்றிருந் துபதேச நெறிகாட்டுஞ் (1)
சின்மயா னந்த சிவமே.

வெண்பா

சிவமயமே வேதாந்தம் சித்தமன வாக்குப்
பவமொழிச்கும் புத்தியே பாரம்—உயிர்நீக்கி
அத்துவித தத்துவத்தை ஆர்வமோ டன்பருக்கு (2)
முத்தியென் றேது முதல்வ.

முதல்வர் பரம்பொருளே முத்திவித் தான
பதமே இருள்நீக்கும் பானு—உதயநிகர்
நன்மயமா யுற்பவத்தை நாடா துரைக்குமொழிச் (3)
சின்மயா னந்த சிவம்.

சிவமே அருள்புரியுஞ் செய்தவினை யாற்றிப்
பவம்நீக்க வையகத்தே பார்த்து—அவம்நீக்கச்
சின்மயா னந்தமே திர்க்கமன வைராக்யந் (4)
தன்மயமாய் வந்துற்ற தாய்.

தாயான தத்துவத்தின் தன்மையுள் வண்மைதனை
ஓயாது நாளும் உரைக்குமொழி—தாயதுபோல்
கற்பிப்பர் தந்தையெனக் காலையிலும் மாலையிலும்
கற்களளி தாகுமென்பர் காண். (5)

காண்நாநா ஜீவாத கட்டளைமுக் கீதையுடன்
நாணுமற் கோதுறவு நற்சதகம்—மாண்ஞான
வாசிட்ட வைராக்ய தீபகை வல்யவுரை
பேசிட்ட தேசிகனைப் பேசு. (6)

பேசுகின்ற அத்துவித பக்தியொன்றே வைராக்யந்
தேசுடைய சீடர்க்குச் செப்பமுடன்—மாசில்லாக்
கல்விபயிற் ருசிரியர்க் காருண்ய நாதகுரு
வல்லசின்ம யானந்த மாம். (6)

மாதவத்தால் வந்து மதுரைபிர் மானந்த
சாதனமாம் ஆலயத்தில் சார்ந்துநால்—வேதமுறை
ஆகமத்தின் கொள்கை அனுசரித்தே எந்நாளும்
தாகமுடன் செய்கைநல தாம், (8)

தாமுரைக்கும் வாசகத்தால் தம்சீடர் தீதகற்றித்
தாமுணர்வர் பிர்மம் தனையணைவர்—காமவினைத்
தேகமெடார் பற்றற்ற சின்மயா னந்தசிவ
ஆகமத்தால் வந்தசீர் அன்பு. (9)

வந்தணையும் அன்பர்களும் மாமடமும் தூயவரும்
சிந்தையுள் ளன்புள்ள தேசிகருஞ்—சந்ததமும்
வாழியரோ மூவுலகு மாலயனும் நாயகனும்
வாழிசின்ம யானந்தம் வாழி. (10)

சுபம்.

௨

மதுரை ஸ்ரீ பிரமானந்த ஞானதேசிக சுவாமிகள் மடம்
ஷெ மடாதிபதியாகிய ஸ்ரீலஸ்ரீ சின்மயானந்த ஞானதேசிக
சுவாமிகள்மீது இராமநாதபுர மாவட்டம் திரு. சண்முகபுரம்
ஊழியன் உழுவலம்பன் மு. கோபால கிருஷ்ணபிள்ளை இயற்றிய

வாழ்த்து விருத்தப்பா

சுத்தசன் மார்க்கம் படைத்துரிய நிறைபொருள்
தோன்றுந் தூய பாதம்
பத்தி செய்தேன் அடியேன் பரம்பொருளே
யென்றுயரம் பறக்கவுன்றன்
சித்தம்வைத் தெனையாள்வாய் திவ்யபரி பூரணனே
சிவனே யுன்னை
நித்தமும் நான்துதிசெய் வேன்சின்ம யானந்த
மெனும் நிமலப் பேறே. (1)

பொய்மதங்க ளெத்தனையோ தோன்றியக் காலத்திற்
பூரணத் தின்பொருளை
சைவசம யந்தழைக்க அவதரித்த திருஞான
சம்பந் தன்போல்
வையகத்தோர் போற்றிடவும் வந்து இந்தநல்
மடாலயத்தை வளரச்செய்த
ஐயநின் மலரடியை யனுதினமும் துதிக்குமெனை
யாட்கொள் வாயே. (2)

ஓம்.

முருகா.

இயற்றியவர் :

இன்னிசைக் கவிமணி. இளங்கம்பன், வள்ளுவரகம், பழநி.

நோக்கால் அருளி நொடியில் துயர்போக்கும்
வாக்காளன் நற்றவ வன்மையிருன்—நீச்கமிலா
அன்பதனுல் ஆண்டே அகங்குழையும் மாண்பாளன்
சின் மயா னந்தனெனச் செப்பு. 1

தவத்தின் பொருள்காண தண்ணருளின் சீரை
உவந்தே நொடியில் உணர—கவினுர்ந்த
நன்மதை தையன் நலிவகற்றும் பேராளன்
சின்மயா னந்தனிடம் செல். 2

துறவின் நலங்காட்டித் துய்தமிழின் மாண்பை
அறத்தின் வகையிலறி வித்தே—சிறந்தொளிரும்
பொன்னுய்ப் பொரிகின்ற பொற்பார்ந்த நற்றுறவி
சின்மயா னந்தன்பால் சேர். 3

காட்சிக் கெளியான் கருணை வடிவானேன்
மாட்சிக் குரியதவ மாண்ப ளன்—மீட்சியுறு
பந்தமிலான் பற்றினையே பற்றியநம் சின்மயா
நந்தன் அடிதொழுவாம் நாம். 4

நாளும் இறைவனவன் நல்லடியைச் சிந்தித்தே
ஆளும் அருந்தவத் தண்ணலாம்—மூளும்நல்
ஆசானும் சின்மயப்பேர் ஆர்ந்தவனின் நற்புகழைப்
பேசாதார் உண்டாமோ பேசு. 5

முன்னைப் பெருந்தவமோ? முக்கண்ணன் பேரருளோ?
என்னென்று யானும் இயம்பிடுவேன்—நன்மனச்
சின்மயா நந்தனவன் சீர்பரவும் வாய்ப்புற்றேன்
இன்பமிதற் குண்டோ இணை. 6

உ

சிவமயம்

இயற்றியவர்

சேலம் ஜில்லா ஆத்தூர்—தத்துவ சன்மார்க்க சங்க ஆசிரியர்

தவத்திரு நீ. சண்முகானந்த சுவாமிகள்

மதுரை ஸ்ரீமத்: பிரமானந்த சுவாமி மடாலயம்

சின்மயானந்தர் செல்வமணிமாலை

காப்பு

வெண்பா

சீரார் தமிழ்க்கூடல் சின்மயா னந்தகுரு
பேரார் மணிமாலை பேசுதற்கு= நாராருஞ்
சித்தியொடு முத்திதருஞ் செல்வி திருக்குமரன்
அத்திமுகத் தண்ணலர ணும்.

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

உருவளர் சோலை யொண்டமிழ் மதுரை
    யோங்குறும் பிரமவா னந்தர்
மருவுறு மடத்தில் வதிந்துநல் லருளால்
    மன்னிய வடியரைப் பிறவிக்
கருவுறு வண்ணம் காத்தருள் ஞானக்
    கவினுறுங் கருணையங் கடலே
திருவருள் ஞானந் திகழ்ந்திடுஞ் செல்வச்
    சின்மயா னந்ததே சிகனே. (1)

ஒருபரப் பிரம வொளியதே தோற்று
    முலகெலா மென்றுளே வுணரும்
பெருநெறி நின்றோர் பிரமமாய்ப் பிறங்கும்
    பெற்றியை யடியவர்க் குணர்த்தி

கருநெறி வாராக் கதிதனில் கூட்டிக்
கற்பகக் கனியெனத் திகழுந்
திருமறை முடிவிற் சேர்ந்தொளிர் செல்வச்
சின்மயா னந்ததே சிகனே. (2)

கானலி னிருங் கயிற்றினிற் பாம்புங்
கனவினிற் காணுமவ் வுலகும்!
வானமை கிளிஞ்சில் வந்தநல் வெள்ளி
மலடிசேய் முயலதின் கோடும்
பீனமாந் தறியிற் பிறங்குபு மானும்
பிராந்தியா யொழியுமா போல
தீனமா முலகுந் திகழுமென் செல்வச்
சின்மயா னந்ததே சிகனே. (3)

பொருளலாப் பொருளைப் பொருளென வுணரின்
பொருந்துமா ணுப்பிறப் பென்ன
அருளினு லான்றோ ரருளுநற் பொருளை
யறியொணு வெம்மையொப் பாரும்
மருளினுல் வாடா வகைமறை முடியின்
மாண்பொருள் வழங்கியெஞ் ஞான்றும்
தெருளினுல் மிளிரும் தேவர்தஞ் செல்வச்
சின்மயா னந்ததே சிகனே. (4)

பாசமாம் பொருளும் பசுபதிப் பொருளும்
பரப்பிர மத்தினி லோர்கால்
நேசமாய்த் தோற்றி நிகழ்ந்துபி னெழியும்
நெறிதனை நிகழ்த்தியெஞ் ஞான்றும்
நீசமா முடலின் நிலையிலா நிலையை
நிகழ்த்தியெப் பொருள்களுந் தானுய்த்
தேசதாய்த் திகழும் திருவருட் செல்வச்
சின்மயா னந்ததே சிகனே. (5)

சாக்கிர முதலாச் சாற்றிய காலச்
சாட்சியாய்க் கோசமைந் தனையும்
நீக்கியே காணும் நின்மலப் பொருளாய்
நிரந்தரம் சச்சிதா னந்தந்
தேக்கியே நின்ற தெருள்மறைப் பொருளே
திகழ்ந்தநின் றிருவுரு வெனவே
தீக்கைசெய் தருளுஞ் செம்பொருட் செல்வச்
சின்மயா னந்ததே சிகனே. (6)

அகரமே யெல்லா வட்சரங் களினு
மமர்ந்துநின் றியக்குமா மதன்பின்
உகரமே யிடையி லோங்குறக் கடையி
லொளிவிடு மகரமாம் பொருளே
சகளமா ருலகம் யாவையு மியக்குந்
தானென வுணர்த்திநல் வேதச்
சிகரமா யிலங்குந் திருத்தகு செல்வச்
சின்மயா னந்ததே சிகனே. (7)

பரிதியு மதியும் பார்முதற் பகரும்
பஞ்சபூ தங்களு மானும்
விரிதரும் பிரம வுருவமாய்த் திகழும்
விதத்தினை விளக்கிவே தாந்தச்
சரியைநற் கிரியை சார்தரும் யோகந்
தணப்பிலா ஞானநன் னெறியைத்
தெரிதர நிகழ்த்தித் திகழ்ந்திடுஞ் செல்வச்
சின்மயா னந்ததே சிகனே. (8)

பிறப்பினி லுறுதுன் பைந்தினென் மடங்காம்
பின்னுறு மிறப்பினி லென்றே
மறப்பிலாச் சிந்தை மன்னுறப் பெற்றால்
மாண்பய னுகுநன் முத்தி

யுறப்பெறு மெனவே வுள்ங்கொள் வுணர்த்தி
யுள்ளொளி யுருவமாய்த் திகழுஞ்
சிறப்புறு ஞானந் திகழ்ந்தநற் செல்வச்
சின்மயா னந்ததே சிகனே. (9)

எழுவகைத் தோற்றத் திலங்குமுன் பிறப்பு
மிரிதர விலங்குநல் லின்பம்
வழுவிலா தடையும் வழிதனை யெமக்கு
மாண்புறக் காட்டிமெய்ஞ் ஞான
உழுவலன் புடையார் குழுவினிற் கூட்டி
யுண்மையின் பொளிவடி வாகும்
செழுகனப் பிரம வுருவமாஞ் செல்வச்
சின்மயா னந்ததே சிகனே. (10)

தம்மையுந் தமக்குத் தலைவனுர் தமையுந்
தயங்குநல் லனுபவத் தறியின்
இம்மையே யந்தத் தலைவனுர் தானுய்
இரும்பரப் பிரமமா யிலங்கி
வெம்மையா மும்மைத் தாபமு நீங்கி
விளங்குவ ரெனவடி யவர்க்குச்
செம்மையே வுணர்த்துஞ் சிவபதச் செல்வச்
சின்மயா னந்ததே சிகனே. (11)

உலகினை வேரு யுணர்ந்திடிற் பந்தம்
உன்வடி வாகவே வுணர்ந்தால்
இலகிடு முத்தி யாகுமென் றிசைத்தே
இசையுநற் பொருளெலாம் ஞானப்
பலகலை பயின்ற பண்டிதர் தமக்குப்
பாங்குற வளித்துநல் வேதத்
திலகமா யொளிருந் திருந்திய செல்வச்
சின்மயா னந்ததே சிகனே. (12)

பந்தமாந் தேக மாதியாம் பொருளைப்
பாவனை தானெனச் செய்தல்
அந்தமில் முத்தி யவற்றபி மான
மகற்றிட லாகுமென் றுரைத்துச்
சந்ததம் பிரம சொருபமே தானுய்ச்
சார்பொரு ளிலையெனத் தேர்ந்து
சிந்தையிற் பிரம வின்பமாஞ் செல்வச்
சின்மயா னந்ததே சிகனே. (13)

துறந்தபி னின்பம் பலவுள வதனுல்
துறப்பதே வீடுறும் நெறியாய்
அறந்தவா ஞான நூல்களாற் கேட்டும்
அடியனே னுலகிய னசையாற்
பிறந்திறந் துழலும் பேதமை நீங்கப்
பெரும்பொருள் பேசியெற் கருள்வாய்
சிறந்தவர் புகழுஞ் சிற்சபைச் செல்வச்
சின்மயா னந்ததே சிகனே. (14)

கோசமைந் தினையுங் கூட்டிமுன் ருகக்
கொண்டதே கந்தமை விட்டே
பேசுறு மவத்தை மூன்றினும் கரியாய்ப்
பிறங்குநற் பிரத்தியக் காகப்
பாசமில் நீயே விளங்துவை யென்றே
பழமறைப் பொருடனைச் சாற்றுந்
தேசமர் மோனச் சிதம்பரச் செல்வச்
சின்மயா னந்ததே சிகனே. (15)

பற்றுறு பொருளைப் பற்றியே யெவர்க்கும்
பாங்குற வுபகரித் தறியேன்
முற்றறி வுடையே னெனவெனை யெணியே
மூதறி வுடையரைப் பணியேன்

வெற்றரைப் பெரிதும் விரும்பியே வாழும்
வீணனுக் குறுதுணை யுளதோ
செற்றமில் தவத்திற் சிறந்தநற் செல்வச்
சின்மயா னந்ததே சிகனே. (16)

குறள் வெண்பா

சின்மயா னந்தன் றிருவடியைச் சேர்ந்திடுவோர்
சின்மயமாய் வாழ்வார் சிறந்து.

சுபம்.

உ

மதுரை ஸ்ரீ பிரஹ்மானந்த சுவாமிகள் மடம் அதிபதி
ஸ்ரீமத் சின்மயானந்த சுவாமிகளின்
அரிய குணநலன்களைப் பாராட்டி சிதம்பரம் ஸ்ரீ மௌன
சுவாமிகள் மடம் ஸ்ரீமத் சபாபதி சுவாமிகள் கூறிய

பஞ்சரத்தினம்

திருவினெடு கலைகள்பல திறத்துவளர் தருமதுரைத்
தெற்கு வாசல்
மருவுபிர மானந்தர் திருமடத்திற் கதிபனென
வயங்கி மேலாம்
கருவகற்றிக் கதியளிக்கும் வேதாந்த நூல்பலவும் கற்கு மாறு
வருமவர்கட் கினிதியம்பும் வாழ்க்கையினைக் குறிக்கோளாக்
கொண்டு வாழ்வோன் (1)

திகைப்புறவே புல்லியரை மிகவருத்தி நோய்பலவும்
செய்யா நின்ற
பகைப்புலனும் வேழங்கள் ஐந்தினையும் செந்நெறியிற்
பயிலு மாறு

உகைத்தினிதே ஆள்உரவோன் அழுக்கா றவாவெகுளி
உளமா செல்லாம்
தகைத்தினிய அருள்அன்பு சார்தருநல் லுளமுடைய
தகைமை யாளன். (2)

உரைதருநல் வாக்கதனை மௌனமென வாக்கிடுவாய்
ஒழிந்திட் டாலும்
புரையறுசீர் வாய்மையையே பேசுகவென் றுரைவாக்கைப்
பொன்போல் போற்றி
தரையதனில் பொய்கடுஞ்சொல் புறங்கூற லாம்மாசு
சாரா வண்ணம்
திரைகடல்சூ லுலகர்புக ழினியவையே பேசுகின்ற
சீர்மை யாளன். (3)

பாதாந்த கேசமுதல் பகவனையே பரவுகின்ற பண்பி னுளான்
வேதாந்த நூல்பலவும் கற்றுணர்ந்த சீர்த்திபெறு
விற்ப னுளன்
நாதாந்த முடிவிலுறு பரம்பொருளை எளிதுணர்ந்து
நலத்தி னுளன்
போதாந்த மானபரம் பொருளதனி லநுபூதிப்
பொற்பி னுளன். (4)

தன்கரத்தி லுறுபடைபோ லஞ்செழுத்தும் நாவதனிற்
சார வைத்தோன்
புன்மனத்தைப் பாவனைக்கும் அதீதமாம் நிலையதனிற்
பொருந்த வைத்தோன்
இன்முகத்தோ டவிர்தருசீர்த் தன்குருவின் இன்னுருவை
எண்ணி நாளும்
சின்மயமா யொளிர்கின்ற சின்மயா னந்தப்பேர்ச்
சீர்த்தி யோனே. (5)

உ

சிவமயம்

மதுரை ஸ்ரீலஸ்ரீ பிரமானந்த சுவாமிகள் மடாலயத்தின்
மடாதிபதியாகிய ஸ்ரீலஸ்ரீ சின்மயானந்த ஞான தேசிகர்மேல்
மதுரை ஸ்ரீ குட்டையாசுவாமி மடம் ஸ்ரீ சங்கரசுவாமிகள்
பாடிய கிளிக்கண்ணி

விநாயகர் துதி

கற்றவர் போற்றும் கவின்பெரும் சின்மயர்மேல்
நற்கிளிக் கண்ணிதனை நன்குசொல—பொற்புமிகும்
புண்ணிய மாமுகனே போற்றி வணங்கினேன்
தண்ணளியோய் நின்னருளைத்—தா.

நற் கூடல் தானமர்ந்த நல்லதொரு அஸ்வத்தர்
பொற்றாள் வணங்கிடவே—கிளியே
புண்ணியந்தா னெய்துமடி. (1)

சச்சிதா னந்தமய தற்பிரமா னந்தபரன்
இச்சையிலாச் சற்குருவை—கிளியே
என்னாளும் போற்றிடுவாம். (2)

பண்ணிசைபோல் தான்விளங்கும் பாலானந்த சுவாமிதனை
எண்ணித் தொழுதிடவே—கிளியே
இன்பமெலாம் எய்துமடி. (3)

சொச்சமய தாய்விளங்கும் சுத்தப்பிர மானந்தர்
மெய்ச் சிவத்தைத் தான்தொழவே—கிளியே
மேன்மை வந்து வாய்க்குமடி. (4)

பத்திபெரும் சங்கீத பான்மைமிகு சங்கரரை
நித்தம் பணிந்திடவே—கிளியே
நிர்வாணம் வந்தமையும். (5)

அருட்குருவை சிந்திக்கும் அத்வைதா னந்தரையும்
மருள்கெடவே யேத்தினின்றால்—கிளியே
மகிமைதான் வந்தடையும். (6)

விசாரமே தான்கொண்ட விசுத்தானந் தர்பதத்தை
நேசமுற யாம்பணிந்தால்—கிளியே
நித்யசுகந் தான் பொருந்தும். (7)

விசுத்தானந் தர்பதத்தை விரும்பியே தொண்டுசெய்து
அசுத்தத்தை தான்நீக்கியே—கிளியே
அகமுகம் தானுடைத்தாய். (8)

உத்தம பிரமானந்த உய சாமி தம்மடத்தின்
தத்துவ வித்தகராய்—கிளியே
தலைவராய்த் தானமர்ந்த. (9)

பற்றிலாச் சின்மயரைப் பார்த்தா லொருகணத்தில்
உற்றநோய் நீங்கிடுமே—கிளியே
உன்னதமாய் வாழ்ந்திடலாம். (10)

எத்திக்கும் தான்போற்றும் எழிலொளிச் சின்மயர்தாள்
நத்தி வணங்கிடவே—கிளியே
நலமெலாம் தான் தருமே. (11)

நந்திடா மனனத்தை நாடோறும் தான்புரியும்
சிந்தை மகிழ் சின்மயர்தாள்—கிளியே
சேர்த்திடுமே முத்தி தனில். (12)

மீனாக்ஷி தன்பதத்தை விரும்பியே நாடோறும்
ஊனுகம் படிந்திடவே—கிளியே
உண்மையாய் பக்தி செய்வார். (13)

சாந்தமே தான்பூண்ட சற்குண உத்தமராம்
வேந்தராம் சின்மயரை—கிளியே
வேண்டித் தொழுதிடுவாம். (14)

சச்சிதா னந்தமயம் தானெனவே நன்குணர்ந்த
மெச்சியிடும் சின்மயர்தாள்—கிளியே
விரும்பிப் பரவிடுவாம். (15)

உண்மையல இவ்வுலகம் என்றறிந்த சின்மயர்தான்
திண்மைபெறு ஞானமதை—கிளியே
சிறப்புறப் பெற்ருரடி. (16)

ஜீவன்முத்த ராய்த்திகழும் சின்மயா னந்தர்பதம்
நாவினுல் துதிசெய்ய—கிளியே
நன்மையெலா வந்துறுமே. (17)

அனித்திய தேகமதை அசுத்தமாய்த் தானுணர்ந்து
புனிதத் துறவடைந்த—கிளியே
புண்ணிய சொருபரடி (18)

மறைமுடிவை தானுணர்ந்த மகத்தான சின்மயர்தாம்
நிறைபரி பூரணமாய்—கிளியே
நிகிலமதில் தானமைந்தார். (19)

சத்சங்கம் தானெய்தி சதாகால நற்பழக்க
உத்தம சிற்சுகர்தாம்—கிளியே
உயர்போத முற்ருரடி. (20)

மனமதைச் செம்மைசெய்து மகத்தான சின்மயர்தாம்
தினமுறச் சாந்திபாடப்—கிளியே
சிறப்புறச் செய்திடுவார். (21)

விவகார வேளையெலாம் வித்தகர் சிற்சுகர்தாம்
தவராது சொருபமதில்—கிளியே
சதாநிட்டை தானமர்வார். (22

கற்பக தருவையொத்து கண்ணிய சிதானந்தர்
பற்பல உதவிதனைக்—கிளியே
பண்புறச் செய்திடுவார். (23)

சொப்பனம்போல் தான்சகத்தை சுத்தமாய் இல்லையென்று
தப்பாது சின்மயர்தாம்—கிளியே
சாந்தமே தாமடைவார். (24)

இத்தகைய சிற்சுகரை இவ்வுலகில் காண்பவர்தாம்
புத்தியொடு முத்திபெற்று—கிளியே
புண்ணியர்தா மாவாரடி. (25)

ஆனந்த மானபர அற்புத மானகுரு
மோனமுற நின்றகுரு—கிளியே
முத்தராய் நின்றாரடி. (26)

காசினி தானமர்ந்த கற்றனல் பண்டிதர்தாம்
நேசித்தால் சின்மயரை—கிளியே
நேர்மை யடைவாரடி. (27)

எப்போதும் சின்மயரை இனிதுறப் பூசித்தால்
தப்பாது அஞ்ஞானந்தான்—கிளியே
தகர்ந்து நொறுங்கிடுமே. (28)

சத்குணங்கள் தானிறைந்த சற்குருவாம் சின்மயரை
பக்தியொடு தான்வணங்க—கிளியே
பரபதம் வந்தடையும். (29)

சித்சுக வடிவினர்தாம் செகமதில் நீணுளும்
உத்தமராய் வாழ்ந்திடவே—கிளியே
உன்னியான் வாழ்த்தினனே. (30)

ஸ்ரீலஸ்ரீ சித்திவிநாயகன் துணே.

ஓம்

சின்மயானந்தர் மீது
கா. தேவேந்திரன், தமிழாசிரியர். பாடிய

தாலாட்டு

திருவாருஞ் சின்மயனேச் செந்தமிழால் தாலாட்ட
உருவாருங் கயமுகனென் உள்ளம் புகுந்திடு வான். (1)

தாயாகி வந்தருளுஞ் சற்குருவே சின்மயனே
சேயாகி நீயுறங்கல் சென்மம் ஒழித்திட ந்கோ (2)

உன்னே யடைந்தோர்க்கு உற்றதுயர் போக்கிடுவாய்
பின்னே யவர்மும்மலமும் சின்மயநீ பேர்த்திடுவாய் (3)

ஆர்த்த பிறவித் துயரெல்லாம் நின்னருளால்
தீர்த்த நற்சின்மயனே தீர்ந்திடுதல் உண்மையன்றே (4)

உண்மை உணர உனைவேண்டி வந்திடுவர்
திண்மை மிகுமெங்கள் சிவனேநற் சின்மயனே! (5)

சிவனேநீ இவ்வுலகிற் சின்மயனாய் வந்துதித்தாய்
அவமாம் பவமொழித்தாய் அற்புதமே ஆரமுதே (6)

ஆரா வமுதனையாய் அன்னையெனத் தண்ணளியாய்
தீராப் பவமொழிப்பாய் சின்மயனே கண்வளராய் (7)

கண்போ லுனைப்போற்றிக் காத்தநல் லன்னையையும்
விண்பா லுறவேற்றும் வித்தகனே! சின்மயனே (8)

வித்தகனாய் ஞான விழுப்பொருளாஞ் சின்மயநின்
புத்தடியோம் வந்துநிதம் பொற்கழல்கள் போற்றுகின்றோம்(9)

போற்றித் துதித்துப் புகழுமொரு பெம்மானே
தேற்றிப் பவமொழிக்கும் சின்மயனே கண்வளராய் (10)

வளரும் பிறவியெல்லாம் வந்தவுடன் மாற்றிடுவாய்
கிளரும் படியவர்க்குக் கேடொழிப்பாய் சின்மயனே (11)

ஒழியாப் புவனமெல்லாம் உன்வடிவம் என்றருளும்
அழியாநற் சோதியனே ஆதியனே! சின்மயனே! (12)

சோதித் தறிந்து துயர்தீர்ப்பாய் மாணவர்க்குப்
பேதித் தொழிப்பாய் பிறவியெலாம் சின்மயனே (13)

பிறவியறல் வேண்டின் பேணிடுவர் நின்னடியை
அறவேஅவர் பிறவி ஆக்கிடுவாய் சின்மயனே (14)

ஆக்குதல் காத்தல் அழித்துக் கரந் தருளல்
நீக்குதல் இன்றிச் செய்வாய் நின்மலனே! சின்மயனே (15)

நின்மலமாய் பந்தநிலைநீக்கி வந்தவரை
உன்மயமாய் மாற்றிடுவாய் ஒள்ளியனே! சின்மயனே! (16)

ஒள்ளிய ராவர் உனைவந் தடைவோரே
தெள்ளிய ராவர் சிவனேஎம் சின்மயனே (17)

எம்மையு மாட்கொண் டெமக்கருளுஞ் சின்மயனே
மும்மையாம் தத்வமசி முற்று முணர்ந்தவனே (18)

முற்றத் துறந்த முனிபிரமா னந்தனடி
பற்றக் கலைவளர்க்கும் பரமனே சின்மயனே (19)

பரமாகி வேதங்கள் பாலித்திடும் வண்ணம்
வரனாகி வந்தவனே சின்மயனே கண்வளராய் (20)

கண்ணாகி ஞானக் கனியாகி வந்தவர்க்கு
நண்ணாத் துயர்நீக்கும் நாயகனே சின்மயனே (21)

நாயகமாய் நான்மறையின் நற்பொருளாய் உட்பொருளாய்
தாயகமாய் வந்துதித்த சங்கரனே! சின்மயனே! (22)

சங்கரனாய் வந்த தனிமூர்த்தி தாள்பணிந்து
மங்காப் பவமொழித்து வாழ்வளித்தாய் சின்மயனே! (23)

அளிய திருநோக்கால் ஆனந்த மாக்கியிடும்
தெளிய நற்சின்மயனே சிற்பரனே கண்வளராய் (24)

சிற்பரமாகிச் சிவமாகி வந்த பொருள்
அற்புத மாகும் அரும்பொருளே சின்மயனே! (25)

பொருளே பொருளென்று பொய்மயக்கில் வீழ்ந்தோர்க்கு
இருளே அகற்றியிடும் எங்குருவே சின்மயனே! (26)

குருவாகி ஞானக் கொழுந்தாகிக் கற்றதெல்லாம்
உருவாகி வந்தவனே உத்தமனே சின்மயனே (27)

உத்தமனாய் வேத ஒருபொருளாய் வந்துதித்த
நித்தியனே கண்வளராய் நின்மலனே! சின்மயனே (28)

நின்மலமாய் வந்துதித்த நீற்றொளிச் சின்மயனே
என்மலமாம் இருள்போக்கி இனிதே நீ கண்வளராய் (29)

வளரா வகையாந்தன் வருபிறவி நீக்குவித்துத்
தளராப் பதமளித்த தத்துவனே! சின்மயனே (30)

தத்துவ ஞானத் தகவுடையோய் வந்தவர்க்குப்
புத்தக மாகிப் பொலிந்திடுவாய் சின்மயனே (31)

வாய்புகழ மனம்நினைக்க வந்தவனே! சின்மயனே
தாய்புகழக் கேட்கும் தகுதியோ நின்பெருமை (32)

பெருமை பிறங்குமென்றே பேசிட்டார் வள்ளுவரும்
அருமை உன்னுற்றல் அறிந்தேநற் சின்மயனே (33)

அறிந்தே யுனையன்றி ஆரொருவர் தனைக்காணேன்
செறிந்தேன் நின்திருவடியைச் சின்மயனே தந்திடுவாய் (34)

தந்துன் திருவடியால் சார்வோர் பவமகற்றும்
விந்தை எனக்கருள்வாய் மெய்ஞ்ஞானச் சின்மயனே (35)

மெய்ஞ்ஞான மாகி மிளிர்பொருளு மாகிவந்து
அஞ்ஞான மாற்றும் அருட்குருவே சின்மயனே (36)

அருளால் இவ்வுலகெல்லாம் அணைக்கும் என்சின்மயனே
மருளால் உழந்தோர்க்கு வந்தபவம் நீக்கிடுவாய் (37)

நீக்கிடுவாய் புலனைந்தும் நேதியது செய்துநின்றே
போக்கிடுவாய் எம்பிறவி புண்ணியனே! சின்மயனே (38)

புண்ணிய மூர்த்தி புவனமுழு தாளவந்த
திண்ணிய மூர்த்திஎம் சின்மயனே கண்வளராய் (39)

மூர்த்தி தலம்தீர்த்தம் முற்றுமடை யாரெனினும்
வார்த்தை யருளி வழங்குகொடைச் சின்மயனே (40)

கொடையிற் சிறந்த கொடைஞானக் கொடைஎன்றே
நடையிற் பயிற்றுவிக்கும் ஞானவுருச் சின்மயனே (41)

உருவாகி வந்துனது ஒண்கழல்கள் தந்தாண்டாய்
திருவாகி வந்தவனே சின்மயனே கண்வளராய் (42)

வந்தார்க்கு வாழ்வருளும் வண்மையனே! சின்மயனே
செந்தாமரைக் கையனே சிற்பரனே கண்வளராய் (43)

கையற் றடைந்தோர்க்குச் சாசினியில் வாழ்வருளி
மெய்யுற் றடையுவண்ணம் வேதிக்கும் சின்மயனே (44)

வேதித்து ஞானவிழுப்பொருளே நீயென்று
சோதித் துரைக்கும் துரியனே சின்மயனே (45)

துரியமாய் வந்த சுடர்ஞானச் சின்மயனே
அரியனே இன்ப அடங்காப் பெருமையனே (46)
அடங்காப் புலனைந்தும் அடக்கியவர் மனத்தைத்
திடமாய் நிறுத்திவைக்கும் சின்மயனே கண்வளராய் (47)
வைக்கும் பொருளும்இல் வாழ்க்கைப் பொருளுமெலாம்
பொய்க்கும் பொருளாக்கும் புனிதனே சின்மயனே (48)
புனிதனே புவனம் புகுந்துவந் தாண்டவனே
இனியனே சின்மயனே! எமக்கருள்க் கண்வளராய் (49)

உ

ஸ்ரீ குருவே துணை.

ஸ்ரீ குமரகுருநாதன் துணையாகுக.

ஸ்ரீலஸ்ரீ சின்மயானந்த ஞானதேசிக சுவாமிகளின் மீது
மாநுமதுரை, சிற்ப கெணித சோதிடன். ப. நா. கிருஷ்ணசாமி
ஆச்சாரி இயற்றிய:

ஆனந்தப் பண்மாலை

வெண்பா

சீர்மதுரை மாஞானச் சின்மயா னந்தரின்மேல்
பார்மதுர வானந்தப் பண்மாலை—சேர்வதற்கு
நற்கனியை உண்ணகிரி நாயகனைச் சுற்றுமிந்த
கற்பகவி நாயகன்றுள் காப்பு.

இராகம்: நாட்டை. தாளம்: ஆதி.

1 சித்தி விநாய கனே முத்திக்கு
வித்தான சித்தி விநாய கனே. (சித்தி)

2 பக்தியுநீ சற்குரு பாதத்தை இத்தினம்
சித்தத்துள் வைத்துமே நித்தம் பணிவோமே. (சித்தி)

3 சத்திமிக் குத்தம புத்திரன் சண்முகன்
நித்தமும் உந்தனை சற்குரு வென்போமே. (சத்திமிக்)

4 முத்தமிழ் பாடியும் முன் வந்து போற்றினேன்
இத்தினம் நன்மையை ஈந்தருள் முருகோனே. (சத்திமிக்)

5 தேவி உமையவள் திருமகள் லெக்ஷிமி
நாவில் சரஸ்வதி நற்றமிழ் சொல்வாயே. (தேவி உமை)

6 ஆதி பசுபதி அச்சுதன் நான்முகன்
ஓதிடும் செந்தமிழ் உண்மை யளிப்பாயே (தேவி உமை)

7 ஆனந்த மானந்த மாசின்ம யானந்தம்
ஆனந்த மானந்த மாயிர மானந்தம்

8 ஆனந்தம் மானந்த மாசின்ம யானந்தம்
ஆனந்த மானந்த மாபிர மானந்தமே.

9 ஆனந்தம் அரசப்ப மாஞான வானந்தம்
ஆனந்த மானந்த மத்து வை யானந்தம். (ஆனந்தமா)

10 ஆனந்த மானந்தம் டாலாநந் தானந்தம்
ஆனந்த மானந்தம் சுத்தபிர் மானந்தம் (ஆனந்தமா)

11 ஆனந்த மானந்த மாசங்க ரானந்தம்
ஆனந்த மாசாந்த நாயகி அம்பிகை (ஆனந்தமா)

12 ஆனந்தம் ஆர்சோம சுந்தர வானந்தம்
ஆனந்தம் ஞானமா தேசிக ஆனந்தம்

13 ஆனந்த மானந்தம் வேதாந்த ஆனந்தம்
ஆனந்த மானந்தம் பரப்பிர்ம ஆனந்தம். (ஆனந்தமா)

14 ஆனந்த மானந்த மாசின்ம யானந்தம்
ஆனந்த மானந்த மாபிர மானந்தமே

சுபம்

பிரமவா னந்தன் வாழி பேசுறு மடமும் வாழி
பரமனும் சின்மயன் தன் பதமலர் நீடு வாழி
வரமுறு சாதுசங்கம் வாழிய வாழி நீடு
மரமுதற் புவனம் வாழி வாழிய மரபு வாழி.

அச்சிட்டோர்; ஜோதிமணி பிரஸ், மதுரை—'70.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
6	12	குலக்குடி	குலக்கொடி
11	6	சன்முகன்	சண்முகன்
17	1	ஆர்	ஆர
18	5	தகைவுடை	தகவுடை
21	15	நின்றுனை	நின்றுளை
22	29	சேர	சேர்
24	7	டி—ரை	கு—ரை
25	6	தொற்று	தோற்று
26	6	காமல்	காமம்
27	23	பெறுக்கின்	பெருக்கின்
28	6	சன்னிதியுற்	சன்னிதியிற்
28	17	தனைமிளிரும்	தலைமிளிரும்
33	24	தலையனி	தலையளி
35	16	பாரும்	பகரும்
39	18	பரமர	பரமா
40	20	காஞ்சமலர்	கஞ்சமலர்
46	11	துழன்நிடு	துழன்றிடு
46	14	பிரமாமம்	பிரம்மம்
50	9	பிரம்மன்	பிரம்மம்
54	25	விழித்திட	யழித்திட
56	16	லிருந்தரும	ளருந்தரும
58	20	நரமாவளி	நாமாவளி
62	17	அருவோங்கு	கருவோங்கு
63	15	கயவே	கரையவே
64	28	பெருமா	பெருகுமா
65	15	சன்மநன்	சன்நன்
72	5	சாற்றெறுநல்	சாற்றுநல்
96	6	வண்மையிருன்	வன்மையினுன்
100	6	விலங்குநல்	விளங்குநல்
112	8	மாயிர	மாபிர